
அம்பாள
வேண்டுகோள்
கே.பி.குணசேகரம்

# நூல் விபரம்


நூல் தலைப்பு :- அன்பான வேண்டுகோள்

கல்வி, உளவியல், தத்துவம்

ஆசிரியர் :- கே. வி. குணசேகரம்

பதிப்பாண்டு :- 2009 பங்குனி 25

மொத்தப் பக்கங்கள் :-

அட்டைப்பட ஓவியம் :- ரமணி

அச்சிட்டு வெளியிடுவோர் :- லங்கா பதிப்பகம்,

கொழும்பு 12.

# என்னுரை

அன்பானவர்களே,

எனது 36 வருட சேவை தந்த அனுபவங்கள் தான் பல நூல்களுக்குக் கருவாக அமைந்தது. எனது அனுபவங்கள் தான் என்னைச் சிந்திக்க வைத்தது; புதிய கல்வித்திட்டத்தை உருவாக்கியது. எனது 36 வருட சேவையும், பல்வேறு வகையான நூல்களைக் கற்ற அனுபவமும் என்னை எழுதத் தூண்டின. எனது பணி மிகச்சிறப்பானது. அதனால் அதை எல்லோரும் அறிந்துகொள்ளல் வேண்டும். அதனால் தான் எழுதுகிறேன். அதற்கு எனக்கு உரிமை இருக்கிறது என்று நினைக்கிறேன்.

இதுவரை சமூகம், சமயம் சார்ந்த கதைகளையும், கட்டுரைகளையும் எழுதிவந்தேன். இது எனது மணிவிழா வெளியீடு என்பதால் கல்வியைப் பற்றியும், உளவியலைப் பற்றியும், கற்றலை விருத்தி செய்வதைப் பற்றியும் எழுதியுள்ளேன்.

இந்நூலை அழகாகக் கணனி மயப்படுத்தித் தந்த செல்வி க.தேனமிர்தம் அவர்களுக்கும், இதன் எழுத்துப் பிழைகளை நீக்கித் தந்த செல்வி. ப. இறைமகளுக்கும், ஓய்வுபெற்ற அதிபர் திரு. வா. ஜெயரத்தினம் அவாகளுக்கும், நான் நினைப்பவை யாவற்றையும் முடித்துத் தரும் எனது குலதெய்வமான வெள்ளெருவை விநாயகனுக்கும், நான் பிரதிஷ்டை செய்த நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதிக்கும், இந்நூலை அச்சிட்டு விற்பனை செய்யும் கொழும்பு 12இல் உள்ள லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்

கொள்கின்றேன். நன்றி. மீண்டும் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி.

பிள்ளையார் கோவிலடி, அன்புடன்
கோப்பாய் மத்தி, கே.வி. குணசேகரம்.
கோப்பாய்.
25.03.2009.

நான்கு வயதில் எனது மாமனாருடன் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்குச் சென்றேன்.

இன்று அறுபது வயதில் நல்லூர்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறேன்.

56 வருடங்கள் பாடசாலை வாழ்க்கை.

இதில் ஐந்தாறு வருடங்கள் பரீட்சை எடுத்துவிட்டுத் தொழிலுக்காகக் காத்திருந்த காலம்.

அதைக்கழித்துப் பார்த்தாலும் 50 வருடங்கள் பாடசாலையில் இருந்தேன்.

கற்கின்ற காலத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் பல. அவற்றுள் துன்பமானவற்றை விட இன்பமானவையே அதிகம்.

ஆசிரியத்தொழில் கிடைத்த பின்பு ஏற்பட்ட அனுபவங்கள் கணக்கிலடங்காதவை.

துன்பங்கள்; இன்பங்கள்; சோதனைகள்; விபரீதங்கள் என்று பல வந்து சென்றன.

இவையாவும் எனக்கும் பல அனுபவங்களைத் தந்தன. ஒவ்வொரு நிகழ்விலும் ஆயிரம் விதமான கற்றல்கள் ஏற்பட்டன. இவை யாவற்றையும் கோவைப்படுத்தினேன். ஆச்சரியமான பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

15 வயதில் நாடகத்தில் ஆர்வம் உண்டானது. கோப்பாயில் இருந்த வீனஸ் நாடக மன்றம் 'தியாகச்சுடர்' 'குங்குமத்திலகம்' என்ற இரு நாடகங்களை நடத்தியது. அதில் ஏற்பட்ட ஈர்ப்பால் எழுதத்தொடங்கினேன்.

50 நூல்கள் அச்சேறி விட்டன. இன்னும் 50 இற்கும் மேற்பட்ட நூல்கள் அச்சேறக் காத்திருக்கின்றன.

இவை யாவும் எனது அனுபவங்களே. அதனால் இம்மலரில் பெரிதாக எதையும் நான் எழுதவிரும்பவில்லை. ஏனென்றால் எனது அனுபவங்கள் முழுவதும் நூலுருப் பெற்றுவிட்டன.

கல்வி சம்பந்தமான சில விடயங்களை மன நிம்மதிக்காகத் திரும்பவும் இந்நூலில் எழுதுகிறேன்.

எனக்கு இன்பத்தைத் தந்த சம்பவங்கள் சில.

கோப்பாய் நாவலர் தமிழ்வித்தியாலயத்தில் அதிபரானது.

நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு என்னால் முடிந்தளவு சேவை செய்தது.

நல்லூர்க்கோட்டத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்தது.

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய மூன்று கோட்டங்களிலும் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்தது.

சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராகப் பணிபுரிவது. அங்கு தங்கியிருந்து கற்கும் 200 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும், பாடசாலையான முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திற்குப் புதிய அதிபர் நியமித்தது.

எனக்குத் துன்பத்தைத் தந்த சம்பவங்கள் சில.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்குக் கட்டடம் கட்டாதது.

நான் படித்த பாடசாலையான கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அதிபராகக் கடமை புரியாதது.

எனது இலக்கியப்பணி பற்றியும் சிறிது கூறுகிறேன்.

சிறுவர் நாவல்கள் எட்டு எழுதியுள்ளேன். அவற்றுள் இரண்டு நூலுருப்பெற்றுள்ளன.

ஆத்திசூடிச்சூத்திரங்களுக்கு கதை எழுதினேன். நான்கு தொகுதிகளாக வெளிவந்த அவை அகில உலகச் சைவ மகாநாடு 2003 இல் மலேசியாவில் நடைபெற்றபோது வெளியிடப்பட்டன.

திருக்குறள் 1330 பாக்களுக்கும் கதை எழுதினேன். அவை 19 நூல்களாக வெளியிடப்பட்டன.

பகவத்கீதையின் 700 சுலோகங்களுக்கும் கதை எழுதினேன். அவை விரைவில் வெளியிடப்படவுள்ளன.

'இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்' என்ற நூல் இந்துதத்துவங்களைக் கதையாகவும், இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியதுமாக உள்ளது. இது பத்துப்பாகங்களைக் கொண்டது. முதல் 5 பாகங்களும் வெளிவந்துவிட்டன. மிகுதி 5 பாகங்கள் அச்சில் உள்ளன.

இது தவிர வானொலி நாடகங்கள் நூறு வரை எழுதினேன். இவற்றை நூலாக வெளியிடும் எண்ணம் உண்டு.

சிறுகதைத்தொகுதி ஒன்றும் வெளியிட்டுள்ளேன்.

கவிதைகள் சிலவும் எழுதியுள்ளேன்.

பரிசுகள் பாராட்டுக்கள் எதையும் நான் எதிர்பார்ப்பதில்லை. பரிசுப் போட்டிகளுக்கு நூல்கள் அனுப்புவதுமில்லை.

நல்ல நூல்கள் காலத்தால் அழியாது நிலைத்து நிற்கும். நீண்ட ஆயுள் எனது நூல்களுக்கு இருக்குமானால் அவை நிலைத்து நின்று எனது புகழைப்பரப்பட்டும்.

பல சாதனைகள் நான் நிலைநாட்டியுள்ளேன். இது வரை தமிழ்நாட்டில் வாழ்ந்த எவரும் 1330 திருக்குறள் பாக்களுக்கும் கதை எழுதவில்லை. அதுதவிர இந்தியாவில் வாழும் எவரும்

பகவத்கீதையின் 700 சுலோகங்களுக்கும் கதை எழுதவில்லை. இந்த இரண்டும் எந்நாளும் அழியாது போற்றப்படும்.

இதைவிடக் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திலும், நல்லூர்க் கோட்டத்திலும் பரீட்சார்த்தமாக எனது கல்விக்கொள்ளைகளைச் செயற்படுத்தினேன். அவை பெரும் வெற்றியைத் தந்தன.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் யாழ் மாவட்டத்தில் பலகல்விச் சாதனைகளை நிலைநாட்டியது. தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களிலும், இணைப்பாடவிதானப் போட்டிகளிலும், புலமைப்பரிசில் பரீட்சையிலும் சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

2007, 2008ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் நல்லூர்க் கல்விக்கோட்டம் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்றது. இது இதுவரை நடைபெறாத ஒரு நிகழ்வாகும். இதற்காக நல்லூர்க் கோட்ட அதிபர்களும் ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் உழைத்தனர்.

'இன்பத்தை அள்ளித்தரும் இந்துதமதம்' போல அடிக்கடி நூல்களை வெளியிட நினைக்கின்றேன். இவ்வளவு நூல்களையும் தனது அங்குஷத்தால் எழுதித்தந்த நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி இன்னும் பலவும் எழுதித்தருவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நான் அணிந்துரை, வாழ்த்துரை என்பன பெறுவது குறைவு. இதற்குக் காரணம் நேரமின்மை, யாரிடமாவது அணிந்துரை பெற வேண்டுமென்றால் குறைந்தது பத்துத்தரமாது அவரிடம் செல்லல் வேண்டும். ஓயாது எழுதும் எனக்கு அது சிரமமாக இருந்தது; எழுதுவதைவிட இது பெரும் கஷ்டமாக

இருந்தது. அதனால் அணிந்துரை வாங்குவதில்லை. எனது நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கித்தரும் செல்வி ப. இறைமகள், ஓய்வுபெற்ற அதிபர் திரு. வா. ஜெயரத்தினம் விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு ஆகியோரிடம் விமர்சனம் கேட்பேன். அவர்களின் விமர்சனங்களை இப்பொழுது நூல்களில் சேர்த்து வருகின்றேன்.

இந்துதத்துவங்கள், சமூகப்பிரச்சினைகள் பற்றிய கதைகள் சுமார் 3000 வரை எழுதிவிட்டேன். இப்பொழுது கல்வித்தத்துவங்களை எழுதிவருகிறேன். அதில் ஒன்று அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான எனது வேண்டுகோள். இவற்றை நான் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் பரீட்சித்துப் பார்த்து வெற்றி கண்டேன். நான் பரிசோதனை செய்தவை கதைகளாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்து விட்டன. தற்பொழுது நல்லூர்க்கோட்டக் கல்விப்பணிப்பாளராகக் கடமை செய்து, எனது கோட்டத்தில் உள்ள 40 பாடசாலைகளிலும் எனது உளவியல் கல்விக்கோட்பாடுகளை நடைமுறைப் படுத்தினேன். அவையும் பெருவெற்றியைத் தந்தன. 2007, 2008ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் நல்லூர்க்கோட்டம் தான் முதலிடம் பெற்றது. இவை எனது கோட்பாடுகளுக்கும், அதன் செயற்பாடுகளுக்கும் கிடைத்த பெரு வெற்றியாகும்.

நான் நூல்கள் எதையும் விற்பதில்லை. எனது நூல்களைப் பிரபலமான வெளியீட்டு நிறுவனங்கள் வாங்கி நூலுருவாக்கி உலகெங்கும் விற்பனை செய்கின்றன. அவை யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைப்பது அரிது. அதனால் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அன்பான வேண்டுகோள் என்ற இக்கட்டுரையை எழுதியுள்ளேன். உலகில் வாழும்

அனைத்து மக்களுக்கும் பொருத்தமுள்ள கட்டுரைகளையே நான் எழுதுவது வழக்கம். தயவு செய்து எனது வேண்டுகோளை ஏற்றுச் செயற்படுங்கள். உங்களுக்கு நன்மைகளும், மகிழ்வான வாழ்வும் நீங்கள் விரும்பியபடி கிடைக்கும்.

அதிகாரிகள் எப்பொழுதும் நீதிநியாயத்துடனும், பக்கச் சார்பின்றியும் நடந்துகொள்ள மாட்டார்கள் என்பதை அதிபர்களும் ஆசிரியர்களும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். அதிகாரிகள் தமக்கு வேண்டியவர்களைப் பொறுப்பான பதவியில் அமர்த்துவார்கள். யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தரம் 1யுடீஇ 1ஊ பாடசாலைகளுக்கு அதிபர் தரம் இல்லாதவர்களே அதிபர்களாக நியமிக்கப்பட்டனர்.

50 - 100 மாணவர்கள் உள்ள தரம் ஐஐஇ தரம் ஐஐஐ பாடசாலைகளுக்கு நேர்முகப்பரீட்சைகள் வைத்து அதிபர் தரம் ஐஇ ஐஐஇ ஐஐஐ உள்ளவர்களுக்கு அதிபர் பதவிகளை வழங்கினர். அத்துடன் பாடம் சம்பந்தமில்லாத பலருக்கு அப்பாடம் சம்பந்தமான அதிகாரி பதவிகள் வழங்கி வருகின்றனர்.

இவற்றை அதிபர்களும் ஆசிரியர்களும் நன்கு உணர்ந்து கொள்ளல் வேண்டும். அப்படி உணர்ந்து கொண்டால் தான் அர்ப்பணிப்புடன் கடமை செய்ய முடியும்.

சிறிய பாடசாலைகள் என்று எவையும் இல்லை. 50 வருடங்களுக்கு முன்பு ஒவ்வொரு கிராமத்திலும் பெரும் பெரும் பாடசாலைகள் பல இருந்தன. அங்கு கல்விகற்றோர் தான் உயர்ந்த உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டனர். பின்பு அப்பாடசாலைகளுக்குப் பொருத்தமான அதிபர்கள் நியமிக்கப் படாமையால் தான் கிராமப் பாடசாலைகள் தமது

தனித்துவத்தை இழந்தன. எனவே இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை. கிராமங்களில் இருக்கும் சிறிய பாடசாலைகளைப் பட்டணப் பாடசாலைகளைப் போல வளர்க்க அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் முடியும். இதை அதிபர்களும் ஆசிரியர்களும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

கல்வியின் அடிப்படைகள், பாடசாலை முகாமைத்துவம், பாடசாலைகளின் மேம்பாட்டில் பெற்றோர்களின் பங்கு, பழைய மாணவரின் பங்களிப்பு, வெற்றிகரமான பாடசாலையை உருவாக்குவது எப்படி?, முறைசாராக்கல்வி முறை, முறை சார்ந்த கல்வி, பாடசாலை மட்டக் கலைத்திட்ட அமுலாக்கம், கல்விச் செயற்பாட்டில் பண்பு சார் விருத்தியை வளர்த்தல், மாணவர்களுக்கான கணனிக்கல்வி, ஆசிரியர்களின் மேம்பாடு இப்படிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டு, அதை விமர்சனம் செய்யும் அதிபர்களும் ஆசிரியர்களும் அதிகாரிகளும் இருக்கிறார்கள். இவர்களது கட்டுரைகளைப் புகழ்ந்து நன்மை பெறும் அதிபர்களும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள்.

கட்டுரைகளைக் கற்றல் வேண்டும். அதிபர்களும், ஆசிரியர்களும் ஒரே உயர் கல்விக்கூடத்ததில் தான் கற்றவர்கள். இதனால் கற்றல் நடவடிக்கைகள் அனைத்தும் அனைவருக்கும் தெரியும். அதனால் எழுத்தளவில் நின்று விடாது அதை மாணவர்களுக்குக் கற்பித்து அதன் பெறுபேற்றை உயர்த்துவதில் அக்கறை உள்ளவராக இருங்கள்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

கற்பதற்கேற்ற நூல்களைத் தெளிவாகக் கற்க வேண்டும். கற்ற பின் அதன்படி வாழ வேண்டும்.

வள்ளுவர் கூறிய படி நடவுங்கள். நீங்கள் கற்றால் தான் மாணவர்கள் கற்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

தினமும் கற்றீர்களானால் புதிய விடயம் என்று எதுவும் இராது. எந்தக் கல்வியியலாளனாலும் கூறப்பட்டவை உங்கள் மனதில் புதைந்திருக்கிறது. தொழிலாளி ஒருவன் தான் பாவிக்கும் ஆயுதங்களைத் தினமும் தீட்டிக் கூராக்குவது போலவும், நன்றாக மேய்ந்த பசு ஓர் இடத்தில் ஆற அமரப் படுத்திருந்து இரை மீட்பது போலும் நீங்கள் செயற்படுங்கள்.

"கடமையைச் செய் பலன் உன்னைத்தை தேடிவரும்" என்று பகவத்கீதை கூறுகிறது. நீங்கள் விதியை நம்புபவராக இருந்தால் குறளை நம்புங்கள். திருக்குறளைப் படித்து விட்டுத்தான் கல்வியைப் பற்றிப் புதுப்புதுக் கருத்துக்களை உளவியலாளர்கள் கூறுகிறார்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

அதிபர்களே, தற்பொழுது பாடசாலைகளில் எந்த ஒரு விடயத்திற்கும் பணம் தேவைப்படுகிறது. பணத்தை மாணவரிடம் கேட்காதீர்கள். குறிப்பாகப் பாடசாலை அனுமதிக்காகப் பல அதிபர்கள் ஆயிரக் கணக்கில் பணம் கேட்கிறார்கள். பொதுவாகப் பணம் மாணவர்களின் நலனைப் பாதிக்கும். வசதியுள்ளவனிடம் கூடப்பணம் கேட்பது பாவம். நம் முன்னோர் கூலி பெறாமலே கற்பித்தனர். மாணவர்களுக்கு உடையும், புத்தகங்களும், உணவும் நூறு ஆண்டுகளுக்கு முன்பே இங்கு வாழ்ந்த பெரியவர்கள் கொடுத்து வற்புறுத்திப் பாடசாலை களுக்கு அழைத்து வந்து கற்பித்தனர். அவர்கள் அப்படிக் கற்பிக்காவிட்டால் இன்று பலர் கற்றிருக்கவே முடியாது என்பதை நினைத்துப்பாருங்கள். வறிய மாணவர்கள், கல்வியில்

ஆர்வமில்லாத பெற்றோரின் பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காக வரமாட்டார்கள். அத்துடன் கல்வியில் அக்கறை காட்டவும் மாட்டார்கள். கல்வியில் ஆர்வமுள்ளவர்களைக் கற்பிக்கப் பலர் இருக்கிறார்கள். பெற்றோர் கற்பிப்பார்கள், விசேட ஆசிரியர்களைப் பெற்றோர் ஒழுங்கு செய்வார்கள்; தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பெற்றோர் அனுப்பி வைப்பார்கள்; ஆசிரியர்களும் கற்பவனை விருப்புடன் கற்பிப்பர். கல்வியில் பின் தங்கியவனுக்கும், வறிய மாணவனுக்கும், கல்வியில் அக்கறை இல்லாதவனுக்கும் தான் உங்களது பணிதேவை என்பதை நினைவிற் கொள்ளுங்கள். கெட்டிக்கார மாணவர்களின் சித்தியில் பலர் உரிமை கொண்டாடுவார்கள். பாடசாலையை மட்டும் நம்பியிருக்கும் மாணவர்களது பெறு பேறுகளின் உரிமை உங்களுக்கு மட்டும் தான் உண்டு.

பயம் தான் மனிதனின் எதிரி. அதனால் யாருக்கும் பயப்படாதீர்கள். தனது கடமையைச் சரிவரச் செய்யும் ஒருவனைக் கண்டால் கடவுளே மதிப்புக் கொடுப்பார் என்பதை நினைவில் வைத்திருங்கள். பயம் ஒருவனைச் செயலற்றவன் ஆக்கிவிடும். எவ்வளவுக் கெவ்வளவு அடக்கமாக இருக்கிறீர்களோ அவ்வளவிற்கு அவ்வளவு மேன்மை யடைவீர்கள். மாணவர்களையும், பெற்றோர்களையும் அதிகாரிகளையும் மதியுங்கள். அவர்களும் உங்களை மதிப்பார்கள். ஒவ்வொரு சொல்லையும் அளந்து பேசுங்கள். கொடுப்பதைவிட இனிமையான பேச்சே மக்களைக் கவரும். பயனில்லாத பேச்சு பல்வேறுபட்ட துன்பங்களைப் பேசுபவனுக்குக் கொடுக்கும். பயனில்லாத சொற்கள் தீமையான செயல்களைச் செய்வதை விடத்தீதானது. அது என்றும் துன்பத்தையே தரும்.

அதிபர்களும் ஆசிரியர்களும் என்றும் புகழுடன் வாழ்தல் வேண்டும். என்றும், "பெருமையாகப் பேசப்படுவது நல்ல மாணவரை உருவாக்கிய ஆசிரியர்களைப் பற்றியே" என்ற மகாவாக்கியத்தை என்றும் நினைவில் வைத்திருங்கள்.

ஒருவருக்குக் கற்கக்கற்கப் புகழ் வளரும். அவரது உடல் அழிந்தாலும் அப்புகழ் நிலைத்து நிற்கும். இந்நிலை அறிவிற் சிறந்தவர்களுக்கு மட்டுமே உண்டு என்பதை நினைவில் வைத்திருங்கள்.

தினமும் குடும்பத்தில், சமூகத்தில், பாடசாலைகளில் ஆயிரமாயிரம் பிரச்சினைகள் உருவாகும். பிரச்சினைகளை வகுப்பிற்குக் கொண்டு செல்லாதீர்கள். பிரபல பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது நலனுக்காக மாணவர்களிற்குத் தவறான கருத்துக்களை வழங்கிக் குழப்பத்தை உண்டு பண்ணுவது இன்று நடைபெறுகிறது. மாணவர்கள் கட்டுக் கடங்காத உணர்வுகளை உடையவர்கள். இவர்கள் தமக்குப் பிரியமான ஆசிரியர்களுக்காக எதையும் செய்வார்கள். அதனால் மாணவர்களின் உணர்வுகளை எப்பொழுதும் நல்லவற்றிற்கே பயன்படுத்துங்கள்.

தன்னைப் புரிந்து கொள்ளல், உலகைப் புரிந்து கொள்ளல், அதற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலே அறிவு. இது கற்றல் மூலமும், கற்றவற்றால் ஏற்படும் அனுபவங்கள் மூலமும் ஏற்படும். இதற்காகப் பல புத்தகங்களை மூளைக்குள் ஏற்றி வைத்திருப்பதல்ல அறிவு. அப்புத்தகங்கள் சரியென்று உறுதி செய்யப்பட்டவை – களுமல்ல. வள்ளுவர் கூறியது போல யார் எதைக் கூறினாலும், யார் எதை எழுதினாலும், அதில் நம்பிக்கை கொள்ளாது

ஆராய்ந்து அதன் உண்மைப் பொருள் அது தானா என்று உறுதி செய்வதே அறிவு.

ஒரு வகுப்பில் 40 பிள்ளைகள் கற்கிறார்கள். ஒரு பாடசாலையில் இரண்டாயிரம் பிள்ளைகள் வரை கல்வி கற்கின்றனர். நாட்டில் எத்தனையோ இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

ஒரு வகுப்பில் உள்ள 40 மாணவர்களும் 40 விதமானவர்கள். இவர்களின் கல்வியில் உள்ள வேறுபாடுகளும் அப்படியானவையே. அப்படியிருக்க நாடு முழுவதிலும் உள்ள மாணவர்களில் எத்தனை இலட்சம் வேறுபாடுகள் இருக்கும். கல்வியின் மூலம் ஒரு மாணவனின் எதிர்காலம் வளம்பெறவேண்டும் என்று அவனைக் கற்பிக்கும் ஆசிரியர் எண்ணுதல் வேண்டும். ஆசிரியர் அன்பு, கருணை, இரக்கம் என்பன உள்ளவராகவும், மாணவனின் நலனை மேம்படுத்தத் தன்னை அவனுக்கு அர்ப்பணிப்பவராகவும் இருத்தல் வேண்டும். கல்வித்திட்டம், பாடத்திட்டம், பாடப்பரப்பு, பாடக்குறிப்பு என்பவற்றை ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு மாணவனின் அறிவு எந்தளவில் இருக்கிறதோ அந்தளவிற்கு இறங்கிக் கற்பித்தல் வேண்டும். இதற்காக ஒரு பாட ஆசிரியர் தான் கற்பிக்கும் மாணவனின் தொகையைக் கணிக்காது அவனது அறிவைக் கணித்தல் வேண்டும். மாணவர்களின் தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்றபடி கற்பிக்கும் ஆசிரியரால் தான் கல்வியை மேம்படுத்த முடியும்.

தரம் இரண்டில் கற்கும் மாணவர்கள் பலருக்குத் தரம் இரண்டிற்கான அறிவையூட்டல் வேண்டும். இவ்வாறு செய்யாமையால் தான் க.பொ.த சாதாரணதர வகுப்பிற்கு வந்த

மாணவர்களில் பலருக்குத் தரம் ஐந்து கற்கும் மாணவர்களின் அறிவுகூட இல்லாது இருக்கிறது.

ஒரு மாணவன் ஒரு வகுப்பில் இருந்து மறு வகுப்பிற்குச் செல்லும் போது இதைக் கருத்திற் கொண்டால் முன்சொன்ன குறைபாடு நிகழாது பார்த்துக் கொள்ளலாம்.

இதைச் செய்யமுடியும். நான் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் செய்து பார்த்தேன். நான் அங்கு அதிபராகக் கடமை புரிந்த காலத்தில் எழுத்தறிவில்லாத மாணவர்கள் மிகமிகக் குறைவாகவே காணப்பட்டனர்.

ஆசிரியர்கள், மாணவர்களால் விரும்பத்தக்கவர்களாகவும், நீதி நியாயம் உள்ளவர்களாகவும் வாழுதல் வேண்டும். சிறந்த ஆசிரியர்கள் பிறக்கிறார்கள் என்று நமது நூல்கள் பலவும் கூறுகின்றன. அப்படியல்ல. ஆசிரியத் தொழிலில் ஈடுபட விரும்புகின்றவன் தன்னைச் சிறந்த ஆசிரியனாக்கிக் கொள்ளல் வேண்டும். அர்ப்பணிப்புத் தன்மை இல்லாத சமூகத்தில் அர்ப்பணிப்புள்ள சிலராவது இருக்கிறார்கள் என்று ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். வேறு தொழில் கிடையாமையால் பலர் ஆசிரியத் தொழிலில் இணைகின்றனர். அவர்கள் இணைந்த பின்பு அத்தொழிலை மதித்தல் வேண்டும். அப்படிச் செய்தால் நாளடைவில் அதில் ஒரு பிடிப்பு உண்டாகும். ஆரம்பம் தேவைக்காக இருந்தாலும், பின் அதைச் சேவையாக மாற்றிக் கொள்ளல் வேண்டும்.

மனிதர்கள் எல்லோரும் நல்லவர்கள் அல்லர். கௌரவத்திற்காகவும், சட்டத்திற்குப் பயந்துமே பலர் குற்றச் செயல்களில் ஈடுபடாதிருக்கின்றனர். இதை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

கஷ்டப்படாது உழைக்கும் உழைப்பு நல்ல பலனைத் தருவதில்லை. உழைக்காமல் பெறும் சம்பளம் “திருடப்பட்ட பணம்” என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இதை எல்லோராலும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் ஒரு காலத்தில் அதை ஒப்புக் கொள்ள வேண்டிய நிலை உண்டாகும்.

எந்த மனிதனும் தொழிலுடன் பிறப்பதில்லை. ஆனால் எந்த மனிதனும் மதமில்லாமல் பிறப்பதில்லை. மனிதன் கைக்கொள்ளும் எந்த மதமும் உடம்பை வருத்திச் சம்பாதிக்காத பணம், “திருடப்பட்ட பணம்” என்றே கூறுகிறது. இதை ஆசிரியர்கள் புரிந்துகொள்ளல் வேண்டும். ஏனென்றால் ஆசிரியர்கள் கோவைகளுடன் பழகுவதில்லை.

முரட்டுத் தனத்தைக் கைவிடுவது மிகமிகக் கஷ்டம். சினத்தை அடக்குதல் அதைவிடக் கஷ்டம். பிடிவாதம் இல்லாதிருத்தல் அதைவிடக் கஷ்டம். தான் நினைத்தது தான் சரிஎன்று நினைப்பவர்களை அது தவறென்று உணரவைப்பது அதைவிடக் கஷ்டம். இவற்றை மனிதர்கள் எல்லோரும் கைவிடல் வேண்டும். ஆனால் ஆசிரியர்களுக்கு இவை இருக்கவே கூடாது.

ஆசிரியர்கள் எப்பொழுதும் குழந்தை மனம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் மாணவர்களாகத் தாம் கடமையாற்றும் காலம் வரை வாழவேண்டும். மாணவர்கள் தினமும் தனது பாடங்களைக் கற்பது போல ஆசிரியர்களும் தாம் கற்பிக்கவிருக்கும் பாடங்களைத் தினமும் கற்றல் வேண்டும். கற்காத ஆசிரியர்கள் எண்ணெய் தேய்க்காத இரும்பிற்குச் சமமாவார்கள்.

துன்பங்கள், சிக்கல்கள், பிரச்சினைகள், கலகங்கள் தினமும் வரும். இவற்றைத் தாங்கிக் கொள்ளப் பழகிக் கொள்ளல் வேண்டும். போட்டியும் பொறாமையும் இன்றைய பாடசாலைகளில் அளவுக்கதிகமாகக் காணப்படுகின்றன. அதிபருடன் பிரச்சினை, சக ஆசிரியர்களுடன் பிரச்சினை, பெற்றோருடன் பிரச்சினை, சமூகத்துடன் பிரச்சினை. இவற்றால் போட்டி, பொறாமை. இவற்றை ஆசிரியர்கள் நீக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

“தாரமும் குருவும் தலைவிதிப்படி” என்பார்கள். ஆத்மீக சிந்தனை மிக்க ஆசிரியர்கள் இதை உணரவேண்டும். ஆத்மீக சிந்தனை இல்லாதவர்கள் ஆத்மீகத்தைக் கற்றல் வேண்டும். அதிகார பலத்தால் அச்சுறுத்துவோர் அழிந்து போன வரலாற்றை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

ஒழுக்கமான வாழ்வும், கடமையைச் சரியாகச் செய்யும் பண்பும் ஒருவனை எப்பொழுதும் உயர்த்தும் என்று நம்புங்கள். நல்ல இலக்கியங்களை வாசியுங்கள். அவை உங்களுக்கு ஆசானாக இருந்து உங்களுக்குள்ள அனைத்துக் குறைகளையும் நீக்கும். அந்த இலக்கியங்களை மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். நல்ல இலக்கியங்கள் கரும்பைவிடச் சுவையானவை. அவை அறுசுவை உணவைவிடப் பலத்தைத் தருபவை. இதை நீங்களும் உணர்ந்து கொள்ளுங்கள், மாணவர்களுக்கும் உணர்த்துங்கள்.

மனம் சோர்வடையும் போதும், பிரச்சினைக்குள்ளாகும் போதும் இயற்கைக் காட்சிகளை ரசிக்கப்பழகுங்கள். மாணவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியைத் தான் விரும்புவார்கள்.

அதனால் நீங்களும் மகிழ்வாக இருந்து அவர்களையும் மகிழ்ச்சிப்படுத்துங்கள். அவர்கள் கல்வியில் விருப்பம் கொள்ளாவிட்டால் அது உங்களில் உள்ள குறை என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். அந்தக் குறையை அறிந்து அதை நீக்காவிட்டால் மாணவர்களால் கற்க முடியாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். மாணவர்கள் எப்போதும் குறும்புத்தனம் மிக்கவர்களாக இருப்பதையே விரும்புவார்கள். அதனால் அவர்கள் தம்மனதில் உள்ளவற்றைத் தயக்கமின்றிச் சொல்வார்கள். சிலர் எழுதுவார்கள். இதற்காக வகுப்பறைகளின் பிற்பக்கச் சுவர்களும், மலசலகூடச் சுவர்களும் பயன்படும். இதற்காக மாணவர்களைத் தண்டித்தல் கூடாது. தண்டனைகள் பொருத்தமில்லாவிட்டால் அவர்களது வாழ்வு நாசமாகிவிடும்.

சிறிய பிரச்சினையாக இருந்தாலும் அதை அன்றே தீர்த்து வையுங்கள். இல்லாவிட்டால் அது கோஷ்டி மோதலாகிவிடும். நீங்கள் வழங்கும் ஆலோசனைகள் வன்முறைகளைத் தூண்டக்கூடாது. அவை அன்பையும், சகோதரத்துவத்தையும், நட்பையும் வளர்ப்பதாக இருத்தல் வேண்டும். மாணவிகளைச் சகோதரிகள் என்று கூறிவையுங்கள். அவர்கள் அளவோடு கலகலப்பாகப் பேச அனுமதியுங்கள். மாணவர்கள் அனைவரினதும் பேச்சையும் செவிமடுத்த பின்பே ஆராய்ந்து முடிவு கூறுங்கள். இவற்றை மாணவரும் பின்பற்றச் செய்யுங்கள்.

மாணவர்களிடையே அடிக்கடி பிரச்சினைகள் உருவாகும். அவ்வேளைகளில் ஆத்திரப்படாது அமைதியாகப் பிரச்சினைகளைக் கையாளும் வகைகளை அவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள். பாடசாலையில் நடைபெறும் போட்டிகளில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை மாணவர்களையே தீர்த்துக்

கொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள். அத்துடன் வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கும் மனப்பாங்கை ஏற்படுத்துங்கள்.

மாணவர்கள் நேரான வழியில் செல்லவேண்டுமானால் நீங்கள் சகலவற்றிலும் முன்மாதிரியாக நடந்துகொள்ளல் வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். பிழையைப் பிழையென்றும், தீயதைத் தீயதென்றும், நல்லவற்றை நல்லவை என்றும் பகுத்துணரச் செய்யும் தன்மையை உருவாக்குங்கள். எந்த வேளையிலும் நம்பிக்கையை இழக்கக்கூடாது என்றும், நம்பிக்கை தான் வெற்றியைத் தருகின்றதென்றும் சொல்வதோடு நின்றுவிடாது செயலிலும் அவற்றை உணர்த்துங்கள். எப்பொழுதும் அன்பாகப் பேசுங்கள். ஆனால் கண்டிப்போடு கடமையைச் செய்யுங்கள். வாழ்க்கை என்பது அன்பானது மட்டுமல்ல. கண்டிப்பும் நிறைந்தது என்பதை அவனுக்கு உணர்த்துங்கள். ஏழை, பணக்காரன், உயர்ந்த சாதிக்காரன், தாழ்ந்த சாதிக்காரன் என்று பாகுபாடு காட்டாது அனைவரையும் சமமாக நடத்துங்கள். பாடசாலையில் பழகுபவை தான் வாழ்க்கையிலும் கைக்கொள்ளப்படும் என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்.

போதைப் பொருட்கள், மதுபானம், புகைத்தல் போன்றன உடலுக்கும் சமூகத்திற்கும் கெடுதலை உண்டாக்கும் என்பதை எடுத்துரையுங்கள். அவற்றால் பாதிப்படைந்தவர்களையும், தீராத நோய் பிடித்தவர்களையும் மாணவர்களுக்குக் காட்டுங்கள்.

தன்னைப் போல பிறரையும் நேசிக்கச் செய்யுங்கள். அதன் மூலம் மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கை உண்டாக்குங்கள். பொதுச் சொத்துக்களைத் தமது சொத்தாக நினைக்க வையுங்கள்.

முயற்சியைப் பற்றி எடுத்துக்கூறுங்கள். முயற்சித்தால் எதையும் அடையலாம் என்ற நம்பிக்கையை மாணவர் மனதில் பதிய வையுங்கள். பயிற்சி முக்கியமானதென்று அவனை உணரச் செய்யுங்கள். முயற்சியோடு சேர்ந்த பயிற்சியால் சாதனைகளை உருவாக்கலாமென்று அவனை நம்பச் செய்யுங்கள்.

பிரச்சினைகளைத் தீர்க்கும் தன்மையை வளர்த்து விடுங்கள். தலைமைத்துவப் பண்பையும் உருவாக்கிவிடுங்கள். பெரியவர்களை மதிக்கும் பண்பை உருவாக்குங்கள். எதையும் நன்கு சிந்தித்த பின் செய்யச் சொல்லுங்கள். அவனால் முடிவு செய்ய முடியாத பிரச்சினைகளைத் தீர்க்கப் பெரியவர்களின் துணையை நாடும் பண்பை வளர்த்து விடுங்கள்.

வளர்ப்புப் பிராணிகள் மீது அன்பாக இருக்கும் பண்பை ஊட்டுங்கள். எந்த வேளையிலும் மிருகங்களுக்குத் துன்பஞ் செய்யக் கூடாது என்ற பண்பை உருவாக்குங்கள்.

அறிவிலோ, பண்பிலோ, கலைகலாசாரத்திலோ ஒருபோதும் பெரும் மாறுதல்கள் உண்டாவதில்லை. முன்பு வாழந்த அறிஞர்கள் அறிவைப் பற்றிச் சொன்னதைத் தான் இன்றும் சொல்கிறோம். முன்பு வாழ்ந்த விஞ்ஞானிகள் கண்டு பிடித்த பொருட்களின் வடிவத்தை மாற்றுகிறோம். கலை, கலாசாரம், பண்பாடு என்பன என்றும் மாறாதவை. வெளி நாட்டவரின் வருகையால் அவர்களது பழக்க வழக்கங்களை நாமும் பின்பற்றி வருகிறோம்.

அடிக்கடி கல்வித்திட்டத்தை மாற்றுகிறார்கள். கல்வியின் நோக்கம் அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்தலே. மிருகங்கள் கூட கால வேறுபாடுகளுக்கமையத் தம்மை மாற்றிக் கொள்கின்றன. மாற்றமடையாத உயிர் வாழமுடியாத

உயிராகிவிடும். அது மறுக்கப்பட முடியாத உண்மை. மனிதர்களால் கண்டு பிடிக்க முடியாத பலவற்றை மிருகங்கள் கண்டுபிடிக்கின்றன. அதற்குக் காரணம் அதன் மோப்ப சக்தியும், பார்வைத்திறனும், பயிற்சியும் தான்.

இந்த நூற்றாண்டில் அறிவு என்பது ஓர் ஆக்கசாதனம் என்றும் அது சொத்துடமை என்றும் கூறப்படுகிறது. இது பழைய நூல்களைக் கற்காதவர்களுக்குப் புதுமையாக இருக்கலாம். ஆனால் கி.முன் எழுந்த பல நூல்கள் அறிவு தான் மனிதனின் சொத்தென்றும், மனிதனை முன்னேற்றும் சாதனம் என்றும் கூறுகின்றன. தமிழ்நூல்களைப் படிக்காத மேலைத்தேசத்தவர்கள் கூறுவதை அப்படியே நம்பும் அறிவாளிகள் இருக்கும் வரை பிறநாட்டவர் கூறுவதெல்லாம் புதுமையாகவே இருக்கும்.

தற்போதைய அறிஞர்கள் அறிவைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள். ‘‘அறிவென்பது, முற்கூறல், உண்மை, தீர்ப்பு, அனுபவம், பெறுமதி, உய்த்தறிதல், நம்பிக்கைகள், நுண்மதி என்பவற்றின் கலவையே அறிவு’’.

இவ் அறிவு இருவகைப்படும் என்றும், அவ்வறிஞர்கள் கூறியுள்ளனர். முதலாவது வாய்மூலம் பேசி வெளிப்படுத்தும் அறிவு. மற்றது பேசி வெளிப்படுத்த முடியாத அறிவு.

அறிவு தேவைக்கேற்றபடி மாற்றமடைய வேண்டும். அறிவு முழுமையானது. ஆனால் மனிதன் முழுமையானவன் அல்லன். அவன் செயலிலீடுபடும் போது அச்செயலுக்குரிய அறிவைத் தேடிப்பெற்றுக்கொள்வான். பாடசாலைகள் அறிவை உருவாக்கும் நிலையை மாணவர்களுக்கு உண்டுபண்ணல் வேண்டும். ஆசிரியர்களின் சேவை மாணவனின் மனதுள்

ஏற்கனவே இருக்கின்ற ஆற்றலை இனங்கண்டு வெளிப்படுத்துதல் மட்டும் தான். இவ்வெளிக்கொணர்வு கல்வி மூலம் ஏற்படும் அறிவாகும். மனித மேம்பாடுகளுக்கு உதவி செய்யக் கூடிய கல்வியே மாணவனது எதிர்காலத்தைச் சிறப்பிக்கும். கல்வி கற்பதன் மூலம் அறிவைப் பெற்றவன் வாழ்க்கைப் போராட்டத் திற்குத் தன்னைத் தகுதியுள்ளவனாக்கிக் கொள்ளல் வேண்டும். இதை விடுத்து மொழி, கணிதம், விஞ்ஞானம் என்பவற்றைக் கற்றறிந்து அறிவுள்ளவனாகிப் பரீட்சைகளில் சித்தியடைந்து உயர்ந்த தொழிலுக்குரியவனாவதல்ல கல்வியின் நோக்கம்.

வள்ளுவர் கல்வியைப் பற்றியும் அறிவைப் பற்றியும் கூறியவற்றை உங்களுக்குத் தருகிறேன்.

2. கற்றதனாலாய பயன்னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

கற்றவன் கற்றபடி நடத்தல் வேண்டும்; அவன் கற்றவர்களை மதித்தல் வேண்டும். இல்லாவிட்டால் அவன் கற்ற கல்வியால் எந்தப் பயனும் இல்லை.

இன்று இந்த நிலை தான் உள்ளது. இந்நிலை மனிதன் தோன்றிய காலம் முதல் இருந்து வருகிறது. கற்றவர்கள் முதலில் மற்றவர்களை மதித்தல் வேண்டும். எந்தக் கல்விக் கோட்பாடும் மற்றவர்களை மதிக்காதே என்று கூறவில்லை. மற்றவர்களை மதிக்கும் கல்வியாளர்கள் தான் புகழ் பெற்று வாழ்ந்திருக்கிறார்கள்.

140. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

உலகத்தவரோடு இணைந்து நடக்கும் முறையைத் தெரிந்து கொள்ளாதவர்கள், பல்வேறு வகையான நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவர் ஆவர்.

199. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்

அறியாமையைத் தருகின்ற மயக்கத்தில் இருந்து நீங்கிய அறிவை உடையவர், பயனற்ற சொற்களை மறந்தும் சொல்லமாட்டார்.

351. பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு.

மெய்ப் பொருள் அல்லாதவற்றை மெய்ப் பொருள் என்று தவறாக எண்ணுவதால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும்.

352. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசுஅறு காட்சி யவர்க்கு.

அறியாமையாகிய இருளில் இருந்து நீங்கிய குற்றமற்ற மெய் உணர்வை உடையவர்களுக்கு, அம் மெய்யுணர்வு அறியாமையை நீக்கி இன்பத்தைக் கொடுக்கும்.

355. எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும், அப்பொருளின் உண்மையான இயல்பை அறிந்து கொள்வதே மெய்மையான அறிவாகும்.

391. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

கற்பதற்கேற்ற நூல்களைத் தெளிவாகக் கற்க வேண்டும். கற்ற பின் அதன்படி வாழ வேண்டும்.

392. எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு

எண், எழுத்து என்ற இரு வகைக் கல்வியும் மக்களுக்கு இரு கண்களைப் போன்றவை.

393. கண் உடையார் என்பவர் கற்றோர்; முகத்து இரண்டு
புண் உடையர் கல்லாதவர்

கண்களுடையவர்கள் என்று கூறப்படுபவர்கள் கற்றவரே ஆவர். கல்லாதவர்களின் முகத்தில் உள்ளவை இரண்டு புண்களே ஆகும்.

394. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

மகிழும் படியாகக் கூடிப் பழகி, பிரியும் பொழுது மிகுந்த கவலையுடன் பிரிந்து செல்வது கல்வியில் புலமை உடையவர்களின் பண்பாகும்.

395. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்

செல்வர்கள் முன் இரப்பதற்காகப் பணித்து நிற்கும் வறியவர்களைப் போல, கற்றவர் முன் ஏங்கிப் பணித்து நின்றாவது கல்வி கற்றோரே உயர்ந்தவர்கள். கல்லாதோர் இழிந்தவர்கள்.

396. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

மணலில் உள்ள கேணியைத் தோண்டத் தோண்ட நீரின் அளவு உயரும். அதே போல மக்கள் நூல்கள் பலவற்றையும் ஆழ்ந்து கற்கக் கற்க அறிவு கூடும்.

397. யாதானும் நாடாமால் ஊராமால் என் ஒருவன்

சாந்துணையும் கல்லாத வாறு.

கற்றவர்களுக்கு எல்லா நாடுகளும் தம் நாட்டைப் போன்றதே. அப்படியிருக்க ஒருவன் சாகும் வரை கல்வி கற்காமல் காலம் கழிப்பது ஏன்?

398. ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒரு பிறப்பிலே ஒருவன் கற்ற கல்வியானது அவனது ஏழு பிறப்புக்களிலும் தொடர்ந்து சென்று பெருமையைக் கொடுக்கும்.

399. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந் தார்.

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுகிறது என்று அறிந்து மகிழ்ந்த கற்றறிந்த அறிஞர்கள் மேன் மேலும் கற்க விரும்புவார்கள்.

400. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;

மாடு அல்ல மற்றயவை.

ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்காத அழிவில்லாத செல்வம் கல்வியே ஆகும்;. மற்றச் செல்வங்கள் எதுவும் அத்தகைய சிறப்புடயவை அல்ல.

கல்வியைப் பற்றியும் அறிவைப் பற்றியும் 2000 ஆண்டுகளுக்கு முன் இவ்வாறு வள்ளுவர் கூறியுள்ளார். இதைவிடச் சிறப்பாகக் கல்வியைப்பற்றி யாரும் கூறவில்லை. ‘எண்ணும் எழுத்தும் இருகண்கள்’ என்பதன் மூலம் கண்களுக்கு உள்ள பெருமை முழுவதும் எண்ணுக்கும் எழுத்துக்கும் உண்டு என்பது புலனாகிறது. மொழியின்

அர்த்தத்தைப் புரிந்துகொண்டால் கற்பதில் சிரமம் இருக்காது. அத்துடன் கல்லாதவரின் இரு கண்களும் புண்கள் என்பதன் மூலம் கல்லாதவர்கள் கண்ணில்லாதவர்கள் என்றும் கூறுகிறார்.

பிச்சை எடுத்தாயினும் கல்வியைக் கல் என்று வள்ளுவர் கூற ஔவையார்; "பிச்சைபுகினும் கற்கை நன்றே' என்று கூறுகிறார். அத்துடன் ஒருவன் இறக்கும்வரை கற்கவேண்டும் என்றும் கூறுகிறார். இதைவிடக் கல்வியைப் பற்றிக் கூற என்ன இருக்கிறது?.

கல்வியைப் பற்றிக் கூறிய வள்ளுவர் கல்லாமையைப் பற்றியும், அதனால் உண்டாகும் தீங்குகளைப் பற்றியும் கூறுகிறார்.

401. அரங்குஇன்றி வட்டு ஆடி யற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல்.

அறிவு தரக் கூடிய நூல்கள் எவற்றையும் கற்காமல் கற்றோர் சபையில் பேசுவது, சூதாட்டக் களம் இல்லாமல் காயை உருட்டிச் சூதாடுவதைப் போன்றது.

402. கல்லாதான் சொல்கா முறுதல் முலை இரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

கல்வி அறிவு இல்லாதவன் கற்றோர் நிறைந்த சபையில் பேச விரும்புவது, முலைகள் இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்புவதைப் போன்றதாகும்.

403. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார் முன்
சொல்லாது இருக்கப் பெறின்.

கற்றவர் அவையிலே பேசாது அமைதியாக இருந்தால், கல்லாதவரும் மிகவும் நல்லவராகப் போற்றப்படுவார்.

404. கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்

கொள்ளார் அறிவு உடையார்.

கல்வி அறிவில்லாதவன் சில துறைகளில் தனது அறிவைக் காட்டினாலும் கற்றவர்கள் அதனை அறிவுடைமை யென ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

405. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

கல்லாத ஒருவன் தன்னை அறிவாளி யென நினைத்துக் கொள்ளும் தன்மை, கற்றோர் அவையில் பேசும் போது அந்தப் பேச்சினால் கெடும்.

406. உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர் அனையர் கல்லா தவர்.

கல்லாதவர்கள் உயிரோடு இருந்த போதும், அவர்கள் பயிர்கள் விளையாத களர் நிலத்தைப் போன்றவர்கள் ஆவர்.

407. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

நுட்பமானவற்றைக் கல்வியறிவால் அறிந்து கொள்ள முடியாதவனது அழகிய தோற்றம், மண்ணால் செய்யப்பட்ட அழகிய பொம்மையைப் போன்றது.

408. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

கல்லாதவனிடம் உள்ள செல்வம், நல்லவர்களுக்கு உண்டான வறுமையை விடக்கொடிய துன்பத்தைக் கொடுக்கும்.

409. மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும், அவர் தாழ்ந்த குடியில் பிறந்த கற்றவருக்குக் கீழானவரே ஆவார்.

410. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர்.

அறிவு நிறைந்த நூல்களைக் கற்றவர்களோடு ஒப்பிடுகையில் அத்தகைய நூல்களைக் கற்காதவர்கள் விலங்குகளுக்கு ஒப்பானவர்களாவர்.

414. கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

ஒருவன் கற்கா விட்டாலும், கற்றவர்களிடம் கேட்டு, அறிய வேண்டியவற்றை அறிந்து கொள்ளல் வேண்டும்; அஃது அவனுக்குத் துன்பம் வரும்போது ஊன்று கோல் போலத் துணை ஆகும்.

421. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

அறிவு, அழிவுவராமல் காக்கும் கருவியாகும். அத்துடன் பகை கொண்டவர் அழிக்க முடியாத பலம் பொருந்திய உள்ளரனும் ஆகும்.

422. சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

மனத்தைச் சென்ற இடத்தில் செல்ல விடாமல், தீமைகளிலிருந்து விலக்கி நல்வழிப்படுத்துவதே அறிவு ஆகும்.

423. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எப்பொருளை யார்யாரிடம் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதே அறிவாகும்.

424. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.

தான் சொல்வதைக் கேட்பவன் புரிந்து விளங்கிக் கொள்ளுமாறு கூறுதல் வேண்டும். பிறரிடம் கேட்கும் போது கேட்டவற்றில் உள்ள நுட்பமான பொருளை ஆராய்ந்து அறிதல் வேண்டும். இதுவே அறிவாகும்.

425. உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.

உலகத்தில் உள்ள உயர்ந்தவர்களை நட்பாக்கிக் கொள்வது உயர்ந்த அறிவு; அந்த நட்பில் முதலில் மகிழ்வும் பின் முறிவும் இல்லாமல் பார்ப்பதும் அறிவு.

426. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

உலகத்தில் மக்கள் எவ்வாறு வாழ்கிறார்களோ, அதற்கேற்ப பொருந்தித் தானும் அப்படி வாழ்வதே அறிவாகும்.

427. அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர்.

அறிவுடையவர்கள் எதிர் காலத்தில் நிகழப் போவதை முன்பே அறிந்து கொள்வார்கள். அறிவில்லாதவர்கள் அதை அறிந்து கொள்ள மாட்டார்கள்.

428. அஞ்சுவது அஞ்சாமை பேதமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சாமல் இருப்பது அறியாமையாகும். அஞ்சத்தக்கவற்றிற்கு அஞ்சுவது அறிவுடையவரின் தொழிலாகும்.

429. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

வரப்போகும் துன்பத்தை முன்னே அறிந்து தம்மைக் காத்துக் கொள்ள வல்ல அறிவுடைய பெரியவர்களுக்கு, அவர் நடுங்கும் வண்ணம் எந்தத் துன்பமும் வரமாட்டாது.

430. அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

அறிவுடையவர்களிடம் எதுவும் இல்லாதிருப்பினும் எல்லாம் உடையவர்களாக இருப்பர். அறிவில்லாதவர்கள் எல்லாம் இருந்தாலும் ஒன்றும் இல்லாதவர்களாக இருப்பர்.

அறிவைப் பற்றி இதைவிடச் சிறப்பாக எந்த அறிஞனும், எந்த உளவியலாளனும் கூறவில்லை. இங்கே இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய கல்விக் கோட்பாடுகள் யாவும் கூறப்பட்டிருக்கின்றன.

கோளமயமாக்கலில் அறிவு ஒரு பண்டம் என்றும், அது ஆக்கசாதனம் என்றும், சொத்துடமையென்றும் சொல்லப்படு - கிறது. தற்பொழுது கூறப்படும் முற்கூறல், உண்மை, தீர்ப்பு, அனுபவம், பெறுமதி, உய்த்தறிதல், நம்பிக்கை, நுண்மதிகள் சேர்த்த கலவை என்பதெல்லாம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவரால் கூறப்பட்டுவிட்டன. கற்றறிதல், கேட்டறிதல் என்பன மேலைத்தேச உளவியலாளர்களுக்குப் புதுமையாக இருக்கலாம். ஆனால் திருக்குறளைக் கற்றவர்களுக்கு அது புதுமையானதல்ல.

21ஆம் நூற்றாண்டில் அறிவு ஒரு சொத்து, சிறப்பான தேர்ச்சி, நன்மதிப்பு, தனிநபரது முத்திரை, இதன் பெறுமதியை அளவிடமுடியாது என்று கூறப்படுகிறது. மேற்கூறிய குறள்கள் இவற்றை விடப் பலவற்றை அறிவென்று கூறுகிறது.

21ஆம் நூற்றாண்டில் உளவியலாளர்களால் கூறப்பட்ட அறிவுச் சொத்துடமையும் அறிவும், அறிவுசார் சமூகமும் அறிவு

முகாமைத்துவமும், அறிவு முகாமைத்துவம் என்றால் என்ன?, அறிவுத் தொழிலாளரும், அறிவுப் பொருளாதாரமும்’ என்பன பற்றியெல்லாம் வள்ளுவர் கூறியுள்ளார்.

441. அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்.

அறம் உணர்ந்தவர்களாய்த் தன்னை விட வயதில் மூத்தவராய் உள்ள அறிவுடையவரின் நட்பை ஆராய்ந்து பெறல் வேண்டும்.

442. உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

வந்த துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராத வண்ணம் காத்து நடக்கும் பெரியவர்களைப் போற்றி அவர்களோடு நட்புக் கொள்ளல் வேண்டும்.

443. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பெரியவர்களைப் போற்றித் தனக்குச் சுற்றத்தவராக்கிக் கொள்ளுதல், ஒருவன் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரிதானதாகும்.

444. தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

தம்மை விட அறிவில் சிறந்த பெரியவர்களைத் தமக்குச் சுற்றத்தவராக ஆக்கி அவரைப் பின்பற்றி நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்த வல்லமையாகும்.

445. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

தக்க வழிமுறைகளை ஆராய்ந்து சொல்லும் அறிஞர்களே உலகின் கண்களாதலால், மன்னவன் அத்தகையவர்களை ஆராய்ந்து நட்புக் கொள்ளல் வேண்டும்.

446. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.

தக்க பெரியாரைத் துணையாகக் கொண்டு வாழும் ஒருவனுக்கு, அவனது பகைவர்களால் ஒரு போதும் தீங்கு செய்ய முடியாது.

447. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்?

கண்டித்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் சொற்கேட்டு நடப்பவனைக் கெடுக்கவல்லவர்கள் எவரும் இல்லை.

448. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்.

கண்டித்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணையில்லாத காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் எவரும் இல்லா விட்டாலும் கெடுவான்.

449. முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்புஇலார்க்கு இல்லை நிலை.

முதல் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் வருமானம் இல்லை. அதே போல தம்மைத் தாங்கிக் காப்பாற்றத் துணையில்லாதவனுக்கு நிலைத்த வாழ்வு இல்லை.

450. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

நல்லவர்களின் தொடர்பைக் கைவிடுதல், பலரது பகையைத் தேடிக் கொள்வதை விடப் பத்து மடங்கு தீமையைத் தரும்.

452. நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு

இனத்துஇயல்பது ஆகும் அறிவு.

சேர்ந்த நிலத்தின் இயல்பிற்கேற்ப நீர் வேறுபட்டு அந் நிலத்தின் தன்மையைப் பெறும்., அது போல மக்களின் அறிவும் சேரும் இனத்திற்கேற்ப மாறுபடும்.

453. மனத்தான் ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தான் ஆம்

இன்னான் எனப்படும் சொல்.

மக்களுக்கு இயற்கை அறிவு மனத்தால் ஏற்படும்; இவன் இப்படிப்பட்டவனென உலகத்தவர் சொல்லும் சொல், அவன் சேர்ந்த இனத்தால் ஏற்படும்.

454. மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு

இனத்துஉள தாகும் அறிவு.

ஒருவனுடைய சிறப்பறிவு அவனது மனத்தின் அறிவு போலத் தோன்றினாலும், உண்மையில் அந்த அறிவு அவன் சேர்ந்த இனத்திலிருந்து தோன்றியதே ஆகும்.

457. மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்

எல்லாப் புகழும் தரும்.

மனத்தின் நன்மை உயிர்களுக்கு ஆக்கத்தைக் கொடுக்கும். இனத்தின் நன்மை ஆக்கத்தோடு எல்லாப் புகழையும் கொடுக்கும்.

458. மனநலம் நன்குஉடைய ராயினும் சான்றோர்க்கு

இனநலம் ஏமாப்பு உடைத்து.

மனநலம் மிக்க உறுதி வாய்ந்த சான்றோராக இருந்தாலும், அவர்களுக்கு இனத்தின் நன்மை மேலும் நல்ல காவலாக அமையும்.

460. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்

அல்லற் படுப்பதூஉம் இல்.

நல்ல இனத்தை விடச் சிறந்த துணையும் உலகத்தில் இல்லை; தீய இனத்தை விடத் துன்பந் தரும்பகையும் உலகத்தில் இல்லை.

461. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

ஒரு செயலால் வரும் அழிவையும், ஆக்கத்தையும் நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே செயலில் ஈடுபடல் வேண்டும்.

462. தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு
அரும் பொருள் யாதொன்றும் இல்.

ஒரு செயலைச் செய்யத் தெரிந்தவர்களோடு நன்கு ஆலோசித்து, தாமும் நன்கு சிந்தித்துச் செயற்பட்டால் செய்ய முடியாத செயல் என ஒன்றும் இல்லை.

464. தெளிவு இலதனைத் தொடங்கார், இளிவு என்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.

தமக்கு இழிவு வரக்கூடாது என்று அஞ்சுபவர்கள், தாம் தெளிவாக அறிந்து கொள்ளாத எந்தச் செயலையும் செய்யத் தொடங்க மாட்டார்கள்.

466. செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

ஒருவன் செய்யத் தகாத செயல்களைச் செய்வதாலும் கெடுவான்; செய்யத்தக்க செயல்களைச்செய்யாது விடுவதாலும் கெடுவான்.

467. எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

செய்யத்தக்க செயலைச் செய்யும் போது நன்றாக எண்ணி முடிவெடுத்த பின்பே துணிந்து தொடங்க வேண்டும். முடிவெடுத்துத் தொடங்கிய பின்பு எண்ணிப்பார்ப்பது தவறாகும்.

468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

தக்க வழியில் செய்யப்படாத செயலுக்குப் பலர் துணையாக நின்றாலும் அது முடிவடையாது குறையாகவே இருக்கும்.

469. நன்றுஆற்ற லுள்ளும் தவறுஉண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை.

அவரவருடைய இயல்புகளை அறிந்து அவரவருக்கு ஏற்றபடி நன்மை செய்யா விட்டால், நன்மை செய்வதிலும் தவறு உண்டாகும்.

470. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

தமக்குப் பொருத்தமில்லாதவற்றை உலகத்தோர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகையால் உலகத்தோர் இகழ்ந்து தவிர்க்காத செயல்களை ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

471. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

செய்யும் செயலின் வலிமையையும், தனது வலிமையையும், பகைவனுடைய வலிமையையும், இருவருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் ஆராய்ந்து செயற்படல் வேண்டும்.

472. ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

தன்னால் செய்ய முடிந்த செயலையும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து செயற்படுபவனுக்கு முடியாத செயல் என ஒன்றும் இல்லை.

474. அமைந்தாங்கு ஒழுகான் அளவு அறியான் தன்னை

வியந்தான் விரைந்து கெடும்.

மற்றவர்களுடன் ஒத்துப் போகாமல், தனது வலிமையின் அளவையும் அறியாமல், தன்னைப் பெரிதாக நினைப்பவன் விரைவில் கெட்டுப் போவான்.

482. பருவத்தோடு ஒட்ட ஒழுகல், திருவினைத்

தீராமை ஆர்க்கும் கயிறு.

ஒருவன் காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல் என்பது, செல்வம் அவனை விட்டு நீங்காமல் கட்டிக் காக்கும் கயிறு போன்றது.

483. அருவினை என்ப உளவோ கருவியான்

காலம் அறிந்து செயின்?

செயலை முடிப்பதற்கேற்ற கருவிகளுடன் காலத்தையும் அறிந்து செயற்படுபவனுக்குச் செய்ய முடியாத அரிய செயல் என்று எதுவும் இல்லை.

484. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்

கருதி இடத்தால் செயின்.

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து செயற்பட்டால், உலகமே வேண்டு மென நினைத்தாலும் அதுவும் கைகூடும்.

489. எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே

செய்தற்கு அரிய செயல்.

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்பை நல்ல முறையில் பயன்படுத்திச் செய்வதற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.

497. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை

எண்ணி இடத்தால் செயின்.

செய்யும் செயல்களை நன்கு ஆலோசித்து எண்ணி தக்க இடத்தில் செய்தால், அஞ்சாமையைத் தவிர வேறு துணை தேவையில்லை.

513. அன்பு அறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை ஆகிய நான்கு குணங்களை நிலையாக உடையவனையே நம்பித் தெளியலாம்.

523. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந் தற்று.

சுற்றத்தவருடன் மனம் கலந்து அன்பாகப் பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை, கரையில்லாத குளத்தில் நீர் நிறைந்ததைப் போன்றது.

534. அச்ச முடையார்க்கு அரண்இல்லை ஆங்குல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

மனதிலே அச்சமுள்ளவர்களுக்குப் பாதுகாப்பான அரண் இருந்து பயன் இல்லை; அது போல மறதியுடையவர்களுக்கு எல்லாச் செல்வமும் இருந்தாலும் பயனில்லை.

592. உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை
நில்லாது நீங்கி விடும்.

ஒருவனுக்கு ஊக்கம் உடைமையே நிலையான உடைமையாகும். மற்றைய பொருள் உடைமை யெல்லாம் நிலையாது அவரை விட்டு நீங்கி விடும்.

594. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை.

சோர்வில்லாத ஊக்கமுடையவனிடத்தில் செல்வமானது தானே அவன் இருக்குமிடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

596. உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

எண்ணுவதை உயர்வாக எண்ணுதல் வேண்டும். எண்ணியளவு உயர்வு கை கூடா விட்டாலும் உயர்வாக எண்ணுவதை விட்டுவிடக் கூடாது.

600. உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை; அ∴து இல்லார்
மரம் மக்கள் ஆதலே வேறு.

ஒருவனுக்கு வலிமையாவது ஊக்க மிகுதியே; ஊக்கமில்லாதவர்கள் மரங்களே. அவர்கள் தோற்றத்தில் மக்களைப் போல இருத்தலே வேறுபாடு.

602. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

தனது குடும்பத்தை உயர்ந்த குடும்பமாக்க வேண்டும் என்று விரும்புகின்றவன் சோம்பலை ஒழித்து முயற்சியுடையனாதல் வேண்டும்.

605. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

கால தாமதம் செய்தல், மறதி, சோம்பல், அளவுக்கதிகமான நித்திரை ஆகிய இந் நான்கும் கெடுகின்ற இயல்புடையோர் விரும்பி ஏறும் மரக்கலங்கள் ஆகும்.

606. படியுடையார் பற்றுஅமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.

நாட்டைஆளும் அரசனின் உறவு தானே வந்து சேர்ந்தாலும் கூடச் சோம்பலுடையவர் ஒரு போதும் சிறந்த பயனை அடைய மாட்டார்.

611. அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

இது செய்ய முடியாத செயல் என்று சோர்வு அடையக் கூடாது. அதைச் செய்வதற்குரிய பெருமையை முயற்சி உண்டாக்கும்.

613. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

பிறருக்கு உதவி செய்யும் மேம்பட்ட பண்பு முயற்சி உடையவர்களிடமே நிலைத்திருக்கின்றது.

616. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

முயற்சி ஒருவனது செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சியின்மை அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும்.

619. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

ஊழ்வினை காரணமாகத் தெய்வத்தின் துணை இல்லாது இருந்தாலும், ஒருவன் முயற்சியால் தனது உடம்பை வருத்திய வருத்தத்தின் கூலியாவது கிடைக்கும்.

622. வெள்ளத்து அனைய இடும்பை அறிவுஉடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

வெள்ளம் போலத் துன்பம் பெருகி வரும் போது, அறிவுடையவன் அத் துன்பத்தின் இயல்பை உள்ளத்திலே உறுதியோடு நினைக்கும் பொழுது அத் துன்பம் இல்லாமல் போகும்.

630. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்

ஒன்னார் விழையும் சிறப்பு.

ஒருவன் தனக்கு வரும் துன்பத்தை இன்பமாகக் கருதி மகிழ்வானேயானால், அவனுடைய பகைவரும் போற்றும் சிறப்பு அவனுக்கு உண்டாகும்.

641. நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்

யாநலத்து உள்ளதூஉம் அன்று.

நாநலம் என்று சொல்லப்படும் பேச்சுவன்மை ஒருவகைச் செல்வம் ஆகும். அந்த நா நலம் தனிச் சிறப்புடையது, அது மற்ற எந்த நலன்களிலும் அடங்காதது.

642. ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்

காத்து ஓம்பல் சொல்லின் கண் சோர்வு.

நன்மையும் தீமையும் ஒருவன் சொல்கின்ற சொல்லாலே வருவதால் சொல்கின்றவன் சொல்லும் போது சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ளல் வேண்டும்.

643. கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல்.

பேசும்போது கேட்பவர்களைக் கவரக் கூடியதாகவும், கேட்காதவர்களை கேட்க விரும்புமாறும் பேசப்படுவதே பேச்சு வன்மையாகும்.

644. திறன் அறிந்து சொல்லுக சொல்லை அறனும்

பொருளும் அதனின்ஊஉங்கு இல்.

சொற்களின் அர்த்தத்தை உணர்ந்து சொல்லுதல் வேண்டும். அத்தகைய சொல்வன்மையை விடச் சிறந்த அறமும் இல்லை; பொருளும் இல்லை.

645. சொல்லுக சொல்லைப் பிறிது ஓர்சொல் அச்சொல்லை

வெல்லும் சொல் இன்மை அறிந்து.

தான் சொல்கின்ற சொல்லை வெல்லக் கூடிய இன்னொரு சொல் இல்லாதிருப்பதை அறிந்த பிறகே தான் சொல்லக் கருதியதைச் சொல்ல வேண்டும்.

646. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசுஅற்றார் கோள்.

பிறர் விரும்பும் படியாகத் தனது கருத்துக்களைச் சொல்லி, பிறர் சொல்லும் போது அவர் சொல்வதில் உள்ள பயனை ஆரய்ந்து ஏற்றுக்கொள்ளுவது மாசற்ற பெரியவர்களின் கொள்கையாகும்.

647. சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

தான் கருதியவற்றை விளங்கும்படியாகச் சொல்ல வல்லவனாகவும், சொல்ல நினைத்தவற்றை மறக்காமல் சொல்லக் கூடிய வனாகவும், சபைக்கு அஞ்சாதவனாகவும் இருப்பவனை யாரும் வெல்ல முடியாது.

648. விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

கருத்துக்களை நன்கு ஒழுங்கு படுத்தி இனிமையாக அவற்றைச் சொல்லவல்லவனின் சொல்லைக் கேட்டு நடக்க உலகம் காத்துக் கொண்டிருக்கும்.

649. பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

குற்றமில்லாத சில நல்ல சொற்களைச் சொல்லத் தெரியாதவர்கள், பயனற்ற பல சொற்களைச் சொல்லிக் கொண்டிருப்பர்.

650. இணர்ஊழ்த்தும் நாறா மலர் அனையர் கற்றது
உணர விரித்துஉரையா தார்.

தாம் கற்றறிந்த நல்ல நூல்களின் பொருளை மற்றவர்கள் புரிந்து கொள்ளும் படி கூற முடியாதவர்கள், கொத்தாக மலர்ந்திருந்த போதும் மணம் கமழாத மலரைப் போன்றவர்கள்.

இங்கு ஆசிரியரின் சொல் வன்மை பற்றி வள்ளுவர் மிகச் சிறப்பாகக் கூறுகிறார்.

654. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

உறுதியான தெளிந்த அறிவை உடையவர்கள், துன்பம் வந்த போதும் அத் துன்பத்தைத் தீர்க்க இழிவான எந்தச் செயலிலும் ஈடுபட மாட்டார்கள்.

658. கடிந்த கடிந்து ஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

செய்யத் தகாத செயல்களென விலக்கி வைக்கப்பட்ட செயல்களைச் செய்பவர்களுக்குச் சில வேளை அது நிறைவேறினாலும் முடிவில் துன்பத்தையே தரும்.

663. கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும்.

செய்யும் செயல் முடிவடைந்த பின் வெளிப்படுத்துவதே ஆண்மையாகும். இடையில் வெளிப்பட்டால் அது நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

666. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

எண்ணிய எண்ணப்படி செயலாற்றுவதில் ஒருவர் உறுதியாக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைந்தே தீருவர்.

669. துன்பம் உறவரினும் செய்க துணிவு ஆற்றி

இன்பம் பயக்கும் வினை.

முடிவில் இன்பத்தைக் கொடுக்கும் தொழிலைச் செய்யும் போது துன்பங்கள் பல வந்தாலும் துணிவுடன் அதைச் செய்து முடிக்க வேண்டும்.

671. சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

ஆராய்ந்து எண்ணுவதன் முடிவு துணிவு ஆகும். துணிந்த பின்பு காலந் தாழ்த்துவது தீதாகும்.

673. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

செய்ய வேண்டியவற்றை இயலுமான இடங்களிலெல்லாம் உடன் செய்து முடித்தல் நன்று. முடியாத போது அது பயன்படும் இடத்திலாவது செய்ய வேண்டும்.

677. செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

செயலைச் செய்யத் தொடங்க முன் அச் செயலைச் செய்ய வேண்டியமுறைகளை, அந்தச் செயலின் உண்மையான இயல்பை அறிந்தவனிடம் கேட்டுத் தெளிந்து கொள்ளல் வேண்டும்.

701. கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி.

ஒருவர் தனது கருத்தைச் சொல்லாத போதும் அவரது முகத்தைப் பார்த்து அவர் கருதியவற்றை அறிந்து கொள்பவன் உலகத்திற்கு உயர்ந்த ஓர் ஆபரணத்தைப் போன்றவன்.

702. ஐயப் படாஅது அகத்து உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.

ஒருவனது மனத்தில் உள்ளதை அவன் ஐயப்படாத முறையில் அறிய வல்லவன் தெய்வத்திற்குச் சமனாவன்.

703. குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

ஒருவனது கண்களையும் முகத்தையும் பார்த்து அவன் நினைப்பதை உணரவல்லவனை, நாட்டில் உள்ள எந்த உயர்ந்த பொருளையாவது கொடுத்துத் துணையாக்கிக் கொள்ளல் வேண்டும்.

704. குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்புஓர் அனையரால் வேறு.

ஒருவன் மனதில் எண்ணியதைஅவன் கூறாமலே அறிந்து கொள்ளவல்லவன் உறுப்புக்களால் மற்றவர்களோடு ஒன்று பட்டிருந்தாலும் அறிவால் வேறுபட்டவன் ஆவான்.

705. குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

ஒருவனது கண்களையும் முகத்தையும் பார்த்து அவன் என்ன நினைக்கிறான் எனக் குறிப்பால் அறிந்து கொள்ள முடியாதவனுக்குக் கண்கள் இருந்தும் ஒரு பயனும் இல்லை.

711. அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகை அறிந்த தூய்மை யவர்.

சொற்களின் தொகுதியை அறிந்த தெளிந்த அறிவுடையவர்கள், சபையில் நிறைந்திருப்பவர்களின் தன்மையை உணர்ந்து ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

713. அவைஅறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.

சபையின் தன்மையை அறியாமல் பேசுகின்றவர், சொற்களின் வகையை அறியாதவரே. அவர்கள் சொல்லக் கூடியது எதுவும் இல்லை.

715. நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்

முந்து கிளவாச் செறிவு.

அறிவு மிகுந்தவர்கள் இருக்கும் சபையில் தான் முந்திச் சென்று பேசாமல் அடங்கி இருப்பது, ஒருவனுக்கு நன்மை என்று சொல்லப்பட்டவை எல்லாவற்றிலும் நன்மையானதாகும்.

722. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்

கற்ற செலச்சொல்லு வார்.

கற்றவர்கள் முன் தாம் கற்றவற்றைஅவர்களின் மனதில் பதியுமாறு கூற வல்லவர்கள், கற்றவர் எல்லோரையும் விடக் கற்றவராக மதித்துப் போற்றப்படுவார்.

724. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற

மிக்காருள் மிக்க கொளல்.

கற்றவர் முன் தாம் கற்றவற்றை அவரின் மனதில் பதியுமாறு எடுத்துச் சொல்லல் வேண்டும். தம்மை விடக் கற்றவர்களிடமிருந்து அறியவேண்டியவற்றை அறிந்து கொள்ளல் வேண்டும்.

725. ஆற்றின் அளவுஅறிந்து கற்க அவைஅஞ்சா

மாற்றம் கொடுத்தல் பொருட்டு.

அவையில் உள்ளோர் கேட்கும் கேள்விகளுக்கு அஞ்சாமல் பதில் கூறும் அளவிற்கு ஏற்ற நூல்களைத் தெளிவாக கற்றல் வேண்டும்.

728. பல்லவை கற்றும் பயம் இலரே நல்லவையுள்

நன்கு செலச்சொல்லா தார்.

அறிஞர்கள் கூடியிருக்கும் அவையில் அவர்களின் மனதில் பதியுமாறு பொருளைச் சொல்ல முடியாதவன், பல நூல்களைக் கற்றிருந்தாலும் ஒரு பயனும் இல்லை.

730. உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களன் அஞ்சிக்
கற்ற செலச் சொல்லா தார்.

அவைக்கு அஞ்சி தான் கற்றவற்றை கேட்பவர்களின் மனதில் பதியுமாறு சொல்ல முடியாதவர்கள், உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவர்களுக்கு ஒப்பானவர் ஆவர்.

831. பேதைமை என்பதுஒன்று யாதெனில் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல்.

பேதைமை என்று சொல்லப்படுவது என்னவென்றால், தனக்குக் கெடுதியானவற்றைச் செய்து கொண்டு நல்லவற்றைக் கைவிடுவதாகும்.

834. ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான் அடங்காப்
பேதையின் பேதையார் இல்.

சிறந்த நூல்களைக் கற்று, அதன் பொருளை நன்கு அறிந்து, பிறருக்கு அதைக் கற்பித்துக் கொண்டிருப்பவன், அந்த உயர்ந்த கருத்துக்களைத் தன் வாழ்வில் கடைப் பிடிக்க வில்லையென்றால் அவனை விடப் பேதமை உள்ளவன் உலகில் எவனும் இல்லை.

840. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

அறிஞர் கூடியிருக்கும் சபையுள் பேதை ஒருவன் செல்வது, ஒருவன் அசுத்தத்தை மிதித்த காலைக் கழுவாது படுக்கை அறைக்குள் செல்வதைப் போன்றது.

841. அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு.

இல்லாமையாகிய கொடுமைகள் பலவற்றிலும் அறிவு இல்லாமை என்னும் கொடுமையே மிகப் பெரும் கொடுமையாக உலகம் கருதுகிறது.

843. அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

அறிவில்லாதவர்கள் அறியாமையால் செய்யும் செயல்களால் பெறும் துன்பம், அவர்கள் பகைவர்களுக்குக் கூடச் செய்ய முடியாததாகும்.

844. வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

புல்லறிவு என்று சொல்லப்படுவது எதுவென்றால், தான் அறிவுடையவன் என்று ஒருவன் தன்னைத் தானே மதித்துக் கொள்ளும் செருக்காகும்.

845. கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற
வல்லதூஉம் ஐயம் தரும்.

அறிவில்லாதவர்கள் தாம் கற்காத நூல்களையும் கற்றதைப் போலக் காட்டிக் கொள்வது, அவர்கள் குற்றமில்லாமல் கற்றறிந்த அறிவையும் சந்தேகப்பட வைக்கும்.

849. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டான்ஆம் தான்கண்ட வாறு.

எல்லாவற்றையும் அறிந்தவனாகத் தன்னை எண்ணிக் கொண்டிருப்பவனுக்கு அறிவிப்பவன் அறிவில்லாதவனாவான். அறியும் திறன் இல்லாத அவன் தான் அறிந்த வகையில் அறிவுள்ளவனாவான்.

850. உலகத்தார் உண்டு என்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப்படும்.

உலகத்தவர் எல்லோரும் உண்டு என்று சொல்பவற்றை இல்லை என்று கூறுபவன், உலகத்தில் காணப்படும் ஒரு பேய் எனக் கருதப்படுவான்.

872. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்ஏர் உருழவர் பகை.

வில்உழவரான வீரர்களுடன் பகை கொண்டாலும், சொல் உழவரான அறிஞர்களுடன் பகை கொள்ளக் கூடாது.

915. பொதுநலத்தார் புன்நலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.

இயற்கையான அறிவால் ஆராய்ந்து அறிந்தோர், பொருள் கொடுப்பவர்கள் எல்லோருக்கும் பொதுவாய் இன்பத்தைக் கொடுக்கும் பொது மகளிரின் இழிந்த தொடர்பை ஒரு போதும் விரும்பமாட்டார்.

922. உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

கள்ளைக் குடிக்கக் கூடாது; சான்றோரின் நன்மதிப்பைப் பெற விரும்பாதவர் கள்ளை வேண்டுமானால் குடிக்கலாம்.

981. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

தனது கடமைகள் இவையென உணர்ந்து நடக்கும் சான்றோர்கள் நல்லவை எல்லாவற்றையும் தமது இயல்பான கடமை என்று கொள்வார்கள்.

985. ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

ஆற்றல் உடையவரின் ஆற்றல் என்பது அடக்கமே ஆகும். அது பகைவரையும் நண்பர்களாக்கிக் கொள்ளும் ஆயுதமுமாகும்.

993. உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால்; வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒட்பு.

உடம்பால் ஒத்திருப்பவர்கள் எல்லோரும் மக்கள் அல்லர், பொருந்தத்தக்க நல்ல பண்புகளால் ஒத்திருப்போரே மக்கள் ஆவர்.

997. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், அரம் போல கூர்மையான அறிவுடையவராக இருந்தாலும் அவர் மரத்திற்குச் சமமானவர் ஆவர்.

1022. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

விடாமுயற்சி, நிறைந்த அறிவு என்ற இரண்டையும் கொண்டு இடைவிடாது செய்கின்ற செயல்களால் ஒருவனுடைய குடிப் பெருமை உறுதியாய் உயர்வடையும்.

வள்ளுவர் அறத்துப் பாலிலும், பொருட்பாலிலும் பல்வேறு அத்தியாயங்களில் அறிவைப் பற்றியும், கல்வியைப் பற்றியும் கூறியவற்றை மேலே காட்டியுள்ளேன். அறிவு என்பது பல்வேறுபட்ட நடத்தைகளின் கூட்டு. ஒரு துறையில் நிபுணத்துவம் பெற்றவன் அத்துறையில் அறிவுள்ளவனாக இருக்கலாம். ஆனால் முழுமையான அறிவு உள்ளவனாக மாட்டான் என்று வள்ளுவர் கூறுகிறார். சமூகத்துடன் ஒத்திசைவாக வாழாதவனும் அறிவில்லாதவன் என்று கூறுகிறார். கல்வியைப் பற்றியும் வள்ளுவர் கூறுகிறார். கல்வியிலும் எத்தனையோ வகையுள்ளது. அவை பற்றியும் மேலே கூறப்பட்டுள்ளது. அதனால் அதிபர்களும் ஆசிரியர்களும் பல்வேறு வகையான நூல்களைக் கற்கும் போது

திருக்குறளையும் படியுங்கள். திருக்குறளில் சொல்லப் படாதவை எவையும் இல்லை. அதனால் அதை நீங்களும் படித்து உங்கள் மாணவர்களுக்கும் கற்பியுங்கள்.

அன்பு செலுத்துவதைக்காட்டிலும், அக்கறை கொள்வதைக் காட்டிலும் நம்பிக்கை வைப்பது மேலானது. ஆனால் நம்பிக்கை வைக்குமுன் அவனை நன்கு அவதானித்தல் வேண்டும். மாணவனை நன்கு அவதானியுங்கள். அவனைச் செயலில் ஈடுபடுத்துங்கள், நட்புக் கொள்ளுங்கள், பொறுப்புக்களைக் கொடுங்கள். அதன் பின் அவனை அவதானித்து அவனது நல்ல செயல்களையும், தீய செயல்களையும் கணித்து எது கூடுதலாக உள்ளதோ அதன்படி முடிவெடுங்கள். தீய செயல்கள் அதிகமிருந்தால் அதைத் திருத்துங்கள். திருந்தாத மாணவர்கள் பெரும்பாலும் இருக்கவே மாட்டார்கள். மாணவனின் ஒவ்வொரு செயலும் ஆசிரியரது கண்காணிப்பில் இருத்தல் வேண்டும். இக்கண்காணிப்பை மாணவன் அறிந்து கொள்ளாதபடி செய்தல் வேண்டும். ஆசிரியர் தன்னை அவதானிக்கிறார் என்று மாணவன் அறிந்தானானால் அவன் அதற்கேற்றபடி நடந்து கொள்வான்.

உங்கள் கடமை விடயத்தில், பதவி உயர்வு விடயத்தில், உங்கள் கற்பித்தல் திறமை விடயத்தில் பலருடன் நீங்கள் முரண்படலாம். அதிகாரிகள் எப்பொழுதும் தமக்குப் புகழ் தருபவற்றையே விரும்புவார்கள். தம்மிலும் பார்க்க மற்றவர்கள் புகழ் அடைவதை விரும்பமாட்டார்கள். இதனால் வெறுக்காதீர்கள். மாணவர்கள் உங்களோடு மேற்கூறிய விடயங்களில் முரண்படமாட்டார்கள். ஒரு மாணவன் வெற்றியடைந்தால் அது ஆசிரியரையே சாரும் என்ற உண்மையை எந்நேரத்திலும் மனதில் இருத்தினீர்களேயானால்

முரண்பட்டாலும் அக்கறையுள்ளவராக இருப்பீர்கள். அதிகாரிகள் ஆண்டுக்கொரு முறை மாறுவார்கள். ஆசிரியர்களுக்கு மாற்றமே இல்லை என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

அதிகாரிகளைத் திருப்திப்படுத்த நினைக்காதீர்கள். ஏனென்றால் அவர்களின் கடமையின் ஆயுள் சிலமாதங்கள் மட்டும் தான். அடிக்கடி அதிகாரிகள் மாற்றப்படுவதால் ஒரு சில மாதங்களுக்கொரு முறை பதவி ஏற்கும் அதிகாரிகளை உங்களால் எவ்வேளையிலும் திருப்த்திப்படுத்தவே முடியாது. ஏனென்றால் நாட்டில் பல ஆயிரம் பாடசாலைகள் உண்டு. ஒருவரைவிட ஒருவர் போட்டி போட்டு அதிகாரிகளைக் கௌரவிப்பர். உங்கள் மேடையில் இருக்கும் போது கூறியவற்றை மறுமேடைக்குச் செல்லும் அதிகாரி மறந்து விடுவார்.

எனது நண்பர் ஒருவர் மிகமிகச் சிறந்த அதிபர். அதிபர் தரம் ஒன்றில் இருந்தாலும் அவர் பணியாற்றுவது ஓர் மூன்றாந்தரப் பாடசாலையில். இருப்பினும் அவர் தனது கடமையை மிகமிகச் சிறப்பாகச் செய்தார். அதனால் அவ்வூரில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் செல்வதில்லை. அதனால் தரம் ஒன்று அனுமதியின் போது பட்டணப் பாடசாலைகளை விடப் பல பிரச்சினைகள் அங்கு தோன்றும். அவரது காலத்தில் அப்பாடசாலை மாவட்டம் முழுவதும் புகழ்ந்து பேசப்படும் பாடசாலையாக இருந்தது.

அதிபர் அப்பாடசாலையின் பழைய மாணவர். பலகாலம் அங்கு கடமை புரிந்த ஓர் ஆசிரியை எண்பது வயதில் காலமானார். அவ்வாசிரியையிடம் அதிபர் கற்காவிட்டாலும் அப்பாடசாலையில் 40 வருடங்களாகப் பணிசெய்த அந்த ஆசிரியையைக் கௌரவிக்க விரும்பி அங்கு கற்கும் அனைத்து

மாணவர்களிடமும் பூமாலை கொண்டுவரும்படி சொன்னார். எல்லா மாணவர்களும் பூமாலை கொண்டுவந்தனர். 600 இற்கும் மேற்பட்ட மாலைகள் பாடசாலையில் குவிந்தன.

காலமான ஆசிரியையின் மருமகன் கல்வித் திணைக்களத்தில் பெரியதோர் அதிகாரி. அதனால் பலகாலம் தரம் மூன்றுப் பாடசாலையில் அதிபராக இருக்கும் எனது நண்பன் அவரைப் பிடித்துப் பெரியதொரு பாடசாலை க்குப் பதவியுயர்வுடன் செல்லவே மாலைகள் அணிவிக்கிறானென அவரது நண்பர்களும், அவரும், அவரது குடும்பத்தினரும் ஊரெங்கும் கதை பரப்பினர். எனது நண்பர் மிகமிகத் திறமையானவர்; அறிவு மிக்கவர்; திறமை மிக்கவர்; கடமையைச் சரிவரச் செய்துவிட்டு மகிழ்வுடனும், நிம்மதியுடனும் வாழ்பவர். அவர் கதைப்போரின் கதைகளைக் கேட்கவில்லை; “என்னால் முடியாது எதுவும் இல்லை என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிரூபித்து வருகிறேன். அதில் ஒன்று தான் இது” என்று கூறிவிட்டு மகிழ்வுடன் மேலும் பல வருடங்கள் அப்பாடசாலையில் கடமை புரிந்தார். பாடசாலைக்கு வளங்களைச் சேர்த்தார். மிகப்பெரிய பாடசாலையாக அது மாறியது. அவரது திறமையை உணர்ந்த கல்வி அமைச்சு அவருக்குப் பெரியதொரு பதவியை வழங்கியது.

எனவே அதிபர்களே, திறமை ஒருபோதும் பின் நிற்கமாட்டாது. ஆரவாரம், செல்வாக்கு, புகழ் யாவும் காலப்போக்கில் இகழப்படும். தகுதியில்லாதோருக்கு தகுதியை வழங்கியோர், வழங்கியவர்களால் இம்சிக்கப்படுவார்கள். இதையே அந்த உயர்அதிகாரியும் பெற்றார். எனவே திறமை மிக்க அதிபர்களும், ஆசிரியர்களும் ஊழல்மிக்கோரால்

வஞ்சிக்கப்படும்போது துயரப்படாது துணிந்து முன்பைவிட கூடுதலாக முயற்சிக்கவேண்டும். திறமையுள்ளவன் தோற்றால் கடவுள் தோற்றதற்குச் சமம்.

கற்பித்தலில் திறமை காட்டும் ஆசிரியர்களை மாணவர்கள் தம் வாழ்நாளில் மறக்கமாட்டார்கள். மேடைகள் தோறும் சொல்வார்கள், காண்பவர்களிடமெல்லாம் கூறுவார்கள். தமது மக்கள், இனத்தவர், நண்பர் எல்லோருக்கும் கூறுவார்கள். ஆசிரியர் கடவுளுக்குச் சமமானவர். அவர் தான் எதிர்காலச் சந்ததியினரைக் கட்டி எழுப்புவர். அதனால் கடமையைச் செய்யுங்கள், பலன் வந்து சேரும். இவையாவற்றையும் நான் செய்து வெற்றியடைந்தமையால் தான் உங்களிடம் இந்த வேண்டுகொளை விடுகிறேன்.

**வறிய மாணவர்கள், கல்வியில் ஆர்வமில்லாத பெற்றோரின் பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காக வரமாட்டார்கள். அத்துடன் கல்வியில் அக்கறை காட்டவும் மாட்டார்கள். கல்வியில் ஆர்வமுள்ளவனைக் கற்பிக்கப்பலர் இருக்கிறார்கள். பெற்றோர் கற்பிப்பார்கள்; விசேட ஆசிரியர்களைப் பெற்றோர் ஒழுங்கு செய்வார்கள். தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பெற்றோர் அனுப்பி வைப்பர். ஆசிரியர்களும் கற்பவனை விருப்புடன் கற்பிப்பார். கல்வியில் பின்தங்கியவனுக்கும், வறிய மாணவனுக்கும், கல்வியில் அக்கறை இல்லாதவனுக்கும் தான் உங்களது பணி தேவை என்பதை நினைவிற்கொள்ளுங்கள். கெட்டிக்கார மாணவர்களின் சித்தியில் பலர் உரிமை கொண்டாடுவார்கள். பாடசாலையை மட்டும் நம்பியிருக்கும் மாணவர்களது பெறுபேறுகளின் உரிமை உங்களுக்கு மட்டுமே உண்டு.**

பாடசாலை, கல்வித்திணைக்களம், பொது நிறுவனங்கள், பத்திரிகைகள் நடத்தும் போட்டிகளில் மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளச் செய்யுங்கள். ஆசிரியர்கள் தான் மாணவர்களின் திறன்களை அறிந்து கொள்பவர்கள். அறிவாளிகள் எல்லோரும் பாடசாலைக்குச் சென்று கற்றவர்கள் அல்லர் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். கற்காத பலர் தம் அறிவுத்திறமையால் பெரும் பெரும் நாடுகளின் பிரதமர்களாகவும் ஜனாதிபதிகளாகவும் கடமை புரிந்ததை மாணவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தயக்கமின்றி மேடையில் ஏறிப்பேசும் ஆற்றலையும், கட்டுரைகள், கவிதைகள், கதைகள் எழுதும் ஆற்றலையும் மாணவர்களுக்கு வளர்த்து விடுங்கள்.

புனிதமான ஆசிரியப்பணி செய்வதால் மனம் மகிழ்பவர்கள், கற்பித்தலின் மூலம் மாணவனின் எதிர்காலத்தை நல்லபடி உருவாக்கலாம் என்ற நம்பிக்கை கொண்டவர்கள், வசதி குறைந்த மாணவர்கள் கற்ற பின் தம் வாழ்வை மேம்படுத்துவர் என்ற எண்ணங் கொண்டவர்கள் ஒரு சமூகத்தில் சிலர் இருந்தாலும் அச்சமூகம் முன்னேறும். அத்தகையவர்களைப் பார்த்து ஆசிரியப் பணியைச் சரிவரச் செய்யாதவர்களும் செய்ய முயல்வர். எனவே முன் மாதிரியான அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் ஒவ்வொரு வரும் மாறுதல் வேண்டும்.

ஆசிரியர்கள் செய்யும் புனிதமான கடமைகளால் தான் பெரும் பெரும் நன்மைகள் நாட்டில் உண்டாகின்றன. அதனால் வரும் நன்மைகளை மனித குலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை உலக வரலாறு முழுவதிலும் காணலாம். சொந்த நலனுக்காகக் கடமையைச் செய்தோர் வாழும் போதே

தூற்றப்படுகிறார்கள். மாணவர்களின் நலனுக்காக தன் ஆசாபாசங்களைத் தியாகம் செய்தவர்கள் கடவுளாகப் போற்றப்படுகிறார்கள். இதை ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

மாணவர்கள் கற்கவும், ஆசிரியர்கள் கற்பிக்கவும் உரிய சகல நடவடிக்கைகளையும் அதிபர்களே எடுத்தல் வேண்டும். பல அதிபர்கள் ஆசிரியர்களோடு தேவையில்லாது முரண்பட்டு ஆசிரியரின் மனதைப் பாதிப்படையச் செய்கிறார்கள். ஆசிரியர்களின் மனம் குழப்பமடைந்தால் மாணவர்களின் கல்வி பாழாகிவிடும். பிரச்சினைகள், சிக்கல்கள், முரண்பாடுகள் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். தற்செயலாக வந்தால் அதை மனம் புண்படாதபடி தீர்த்து வையுங்கள். அதிகாரத்தை இயலாதவிடத்துக் கடைசியாகப் பாவியுங்கள். வெற்றி பெற்ற அதிபர்கள் எல்லோரும் அதிகாரத்தை அன்பாகப் பாவித்தவர்களே.

ஒவ்வொரு வரும் அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பம் அவர்களின் செயல்களினாலேயே வந்தது. அது போன்றது தான் இன்பமும். உன்னால் வந்த துன்பத்தை நீயே நீக்குதல் வேண்டும். அதுபோல உன்னால் வந்த இன்பத்தை நீயே அனுபவிப்பாய். ஒவ்வொருவரும் தமக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புக்களைத் தாமே சுமந்தால் அந்தப் பொறுப்புக்களைப் பிறர் சுமக்கவேண்டிய நிலை ஏற்படாது. ஆசிரியர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட வகுப்பின் கடமைகளைச் சரிவரச் செய்தால் அடுத்த வகுப்பாசிரியர் இலகுவாகத் தனது கடமையைச் செய்ய முடியும்.

மாணவர்களின் எதிர்காலத்தை ஆசிரியர்களே உருவாககிறார்கள். மாணவர்களின் எதிர்காலம் ஆசிரியரின்

முன்னால் விரிந்து பரந்திருக்கிறது. ஆசிரியர்களின் ஒவ்வொரு சொல்லும், சிந்தையும், செயலும் மாணவனின் எதிர்காலத்தை மேம்படுத்தும் என்பதை ஆசிரியர்கள் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். ஆசிரியர்களது தீய எண்ணங்களும், செயல்களும் அவ்வப்போது பயன்தராவிட்டாலும் பயன் தரும்போது மிகுந்த துன்பத்தையும் இழப்புக்களையும் தரும் என்பதை ஆசிரியர்கள் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். அதுபோல நல்ல எண்ணங்களும், செயல்களும் ஆசிரியர்கள் துன்பப்படும் போது வந்துதவும் என்றும் ஆசிரியர்கள் நம்புதல் வேண்டும்.

பலபாடசாலைகளில் அதிபரும் ஆசிரியர்களும் தான் கடமையில் உள்ளனர். அதனால் இவர்கள் பாடசாலை தொடங்குவதற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்பு செல்லல் வேண்டும். பாடசாலை விட்ட பின்பும் அரைமணித்தியாலம் பாடசாலையில் நின்று பொருட்களைச் சரிபார்த்தல் வேண்டும். அலுவலகங்களில் வேலை செய்பவர்களைப் போல காரியாலயம் தொடங்கும் நேரத்திற்குச் செல்லக் கூடாது.

சமீபத்தில் ஓர் ஆசிரியரைச் சந்தித்தேன். நல்ல ஆசிரியராக இருந்து அதிபரானவர் அவர். திருமணமாகாத கட்டைப் பிரமச்சாரி. ஏராளமான சொத்துக்களுக்குச் சொந்தக்காரர். அவருக்கு ஐம்பது வயதிற்கு மேலாகிறது. தாயாருடன் இருக்கிறார். தாயார் என்னைக் கண்டால் சொல்வார்; “ஐந்து தலைமுறைக்குரிய சொத்து எம்மிடம் இருக்கு. அத்துடன் அதிபராகப் பணிபுரிகிறான். திருமணம் செய்கிறான் இல்லை. எனக்கு மருமகளையும், பேரப்பிள்ளைகளையும் பார்க்க ஆசையாக இருக்கு. இந்தத் தள்ளாத வயதிலும் நான் தான் சமைக்க வேண்டியிருக்கு” என்பார்.

நான் அவரைச் சந்தித்த போது தாயார் கூறியவற்றைச் சொன்னேன். அவர் பதில் சொல்லாது சிரித்தார். பின் சொன்னார்; ‘‘வேலை செய்வதற்கு வீட்டில் பலர் இருக்கிறார்கள். ஆனால் அம்மா விடமாட்டா. அதுவும் சமைக்க விடமாட்டா. எனது நாவின் சுவை தனக்குத்தான் தெரியும் என்பா. அவாவுடன் பெருங்கரைசல்’’ என்றார்.

நான் அதை அத்தாய்க்குச் சொன்னேன். அந்தத்தாய் வெகு நேரம்வரை அழுதார்; ‘‘தம்பி அவன் காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்டால் இரவு எட்டுமணிக்குப் பிறகு தான் வருவான். மத்தியானச் சாப்பாட்டைக் கட்டிக் கொடுத்து விடுவேன். அதையும் பெரும்பான்மையான நாட்களில் சாப்பிடமாட்டான். இரவு கொண்டு வந்து நாய்க்கு வைப்பான். அது பழுதடைந்தமையால் நாயும் தின்னாது. இவனுக்கு இரத்த அழுத்தம் சிறிதளவு உண்டு. அதற்கேற்ற மாதிரி வேலையாட்கள் சமைக்கமாட்டார்கள். நான் தேங்காய்ப்பால் சேர்ப்பதில்லை, உப்பைக் குறைவாகவே சேர்ப்பேன். ஒரு தாய் என்ற முறையில் நான் அக்கறைப்பட இவன் அதை மாறுபாடாக நினைக்கிறான். எனக்கு எண்பத்தைந்து வயதாகிறது. எந்த நோயும் இல்லை. ஆனால் இவனுக்குப் பல நோய்கள் இருக்கு. இதற்குக் காரணம் வேலைப்பழுதான். இரவு பகலாக வேலை செய்தால் நோய் வராமலா போகும்’’ என்று அழுதார்.

அந்தக் காருண்ணியம் மிக்க ஆசிரியரை நான் சமீபத்தில் சந்தித்தபோது இவ்வாறு கூறினார்; ‘‘ஐயா, நான் என்னை அர்ப்பணித்துத்தான் எனது பணிகளைச் செய்கிறேன். அது போலத் தான் சமூகப்பணிகளையும் செய்கிறேன். தொடர்ந்தும் அது போலத்தான் செய்வேன். ஆசிரியப் பணிக்கு

எனக்குப் பணம் கிடைக்கிறது. பணத்தைப் பெறும் நான் அதை நல்ல முறையில் செய்தல் வேண்டும். நாம் ஒரு கூலிக்காரனை வேலைக்கு அமர்த்தினால், அவன் வேலையைச் சரிவரச் செய்தால் தான் கூலியைக் கொடுப்போம். ஆனால் அரசாங்கத்தில் தொழில் செய்பவர்களுக்கு வேலையைச் சரிவரச் செய்யாவிட்டாலும் வேதனம் வழங்கப்படுகிறது. இதை யார் உணராவிட்டாலும் ஆசிரியர்கள் உணருதல் வேண்டும். ஆசிரியர்கள் தினமும் தமது கடமை முடிந்த பின்பு நான் எனது கடமையை இன்று சரிவரச்செய்தேனா? என்று எண்ணிப் பார்த்தல் வேண்டும். மனத்திற்குத் திருப்தியில்லாவிட்டால் திருப்தியேற்படும் வரை கடமையைச் செய்தல் வேண்டும். நான் எனது கடமையில் திருப்தி காணாவிட்டால் அன்று உணவை உண்ணமாட்டேன். எனக்குத் திருப்தி ஏற்படும்வரை அச் செயலைத் திரும்பத்திரும்பச் செய்வேன். இல்லாவிட்டால் எனது அன்றைய வேதனத்தை தானம் செய்துவிடுவேன்''. என்றவர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

நான் எதுவும் பேசவில்லை. என்னால் அவரது பேச்சைக் கேட்ட பின்பு சிந்திக்கக்கூட முடியவில்லை, ‘‘இப்படிப்பட்ட மனிதர்கள் இன்றும் வாழ்கிறார்களா?'' என்று சிந்தித்தேன்.

‘‘தனக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்வதைப் போல மனமகிழ்ச்சி வேறு எதிலும் வராது. நான் சரிவரக் கடமை செய்தமையால் பல மாணவர்கள் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறார்கள். கடமையைப் போலத் தான தர்மம் செய்வதாலும் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படும். ஆனால் சிலரது நடத்தையால் நான் மனவேதனை அடைவதும் உண்டு''.

பேசிவிட்டுச் சில கணங்கள் மௌனமாக நின்ற அவர் சொன்னார்; “நாலைந்து வருடங்களாகப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு அவர்களின் கற்றல் செலவுகள் முழுவதையும் கொடுத்து வந்தேன். குறிப்பிட்ட நாளில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்துவிடுவேன். ஒருபோதும் அவர்கள் பணத்திற்காகக் கஷ்ரப்பட்டதில்லை. அவர்கள் சென்ற வருடம் படிப்பை முடித்துக்கொண்டு சென்றுவிட்டனர். அவர்களுக்குத் தொழில் கிடைத்துவிட்டது. ஆனால் அவர்கள் சென்ற பின் இதுவரை ஒரு கடிதம் கூட எனக்கு எழுதவில்லை. பெற்றோரைப் போல இருந்து உதவி செய்த எனக்கு அவர்கள் பணம் அனுப்பத் தேவையில்லை. தங்களது சுகநலத்தை அறிவிக்கலாம் தானே?. நான் மாணவர்களை எனது பிள்ளைகளாகக் கருதுவதால் தான் இத்தகைய துன்பங்கள் உண்டாகின்றன. ஆனால் இப்பொழுது அது எனக்குப் பழக்கமாகிவிட்டது. என்னை உணர வைத்துப் பூரணப்படுத்திய அவர்களை நான் இப்போதும் மதிக்கிறேன். பின்பு எனக்கு உதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்துச் செய்வது தானம் இல்லை. செய்யும் உதவிகளை அன்றே மறந்துவிட்டால் துன்பம் உண்டாகாது” என்று சிரித்தார்.

அவர் கூறிய கருத்துக்களை ஆசிரியர்களும் அதிபர்களும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். கடமைக்காகக் கூலியைப் பெற்ற பின் அது சேவை, எனது திறமை என்று சொல்வதில் அர்த்தமில்லை என்பதைப் புரிந்துகொள்ளல் வேண்டும்.

உளவியல் என்பது, மற்றவர்களது உள்ளத்தைப் புரிந்து கொள்ளக் கற்கும் ஒரு மனிதம் நிறைந்த கல்வி. இது

பொதுவாக எல்லா மனிதர்களுக்கும் தேவை. இருப்பினும் மருத்துவர்களும், ஆசிரியர்களும் இதைத் கட்டாயம் கற்றல் வேண்டும்.

சகலதுறைகளிலும் மேலதிகாரிகளாகப் பணியாற்றுவோர் தனக்குக் கீழே பணிபுரிபவர்களின் மனநிலையைப் பற்றிச் சிந்திப்பது குறைவு.

மற்றவர்களது குணநலபேதங்களை அறிந்து அதன்படி நடந்துகொள்ளும் மேலதிகாரியை, அவரின் கீழ் வேலை செய்வோர் மிகவும் விரும்புவார்கள். அதனால் அங்கு மகிழ்ச்சி கரனமான உறவு நிலவுவதால் உற்பத்தி அதிகரிக்கும். தானும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்விப்பவன் தான் உலகத்தில் சிறந்த மனிதன்.

வேலைத்தலமானால் வேலை செய்தே ஆகவேண்டும். கல்வித்திணைக்களத்தில் வேலை செய்யும் ஓர் எழுதுவினைஞர் வேலை செய்யாவிட்டால் அது ஆசிரியரைப் பாதிப்பது குறைவு. கல்விப்பணிப்பாளரிடம் கூறி அதற்கு மாற்றுவழி தேடலாம். இது போலத்தான் ஏனைய திணைக்களங்களிலும் நடைமுறைப்படுத்தலாம்.

கல்வியைப் பொறுத்தவரை மாணவர்களுடன் பணி செய்யும் ஆசிரியர்களும், அதிபர்களும் உளவியலைக் கற்றிருத்தல் வேண்டும். இதற்காகத்தான் ஆசிரிய கலாசாலைகளிலும், கல்விக்கல்லூரிகளிலும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதோடு உளவியலைக் கற்பிக்கிறார்கள். பட்டதாரிகள் ஆசிரிய நியமனம் பெற்றால் பல்கலைக்கழகங்கள் பட்டப்பின் படிப்பை வழங்குகின்றன. பட்டப்பின் படிப்பைக் கற்காத ஆசிரியர்களுக்கு வேதன அதிகரிப்பு வழங்கப் படுவதில்லை.

மாணவர்களது மனம் பூவைப்போன்றது. வேகமாகக் காற்று வீசினாலே பூக்கள் வாடிவிடும். அதைவிட அனிச்சம்பூ முகர்ந்தாலே வாடிவிடும்.

பெற்றோர்கள் எல்லோரும் ஒருதன்மையானவர்கள் அல்லர். சிலர் குடித்துவிட்டு மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் அடிப்பார்கள்; சிலர் தாசிவீடுகளுக்குச் செல்வார்கள். சிலர் சூதாடுவார்கள். இப்படிக் கெட்ட பழக்கமுள்ள பெற்றோரது வீட்டில் இருந்து வரும் பிள்ளைகள் மனக்குழப்பத்துடன் வருவார்கள். ஆசிரியர்களுக்கு வீட்டிலும், சமூகத்திலும் பல பிரச்சினைகள் உண்டு. அதனால் அவர்களும் தினமும் பிரச்சினைப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.

ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றைப் பாடசாலைக்குள் செல்லுமுன் மறந்துவிடல் வேண்டும்.

பாடசாலையில் மாணவர்களுக்குப் பாடத்தைக் கொடுத்துவிட்டு கூடியிருந்து கதைப்பதைத் தொழிலாகக் கொண்ட ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். இது தவறு என்று அவர்கள் ஒருபோதும் உணர்ந்துகொள்வதில்லை.

உளவியலைக் கற்றவர்களுக்குக் கோபம் வரக்கூடாது. தமது கடமையைப் புறக்கணிக்கக் கூடாது. இவை பற்றிக் கற்றிருக்கிறீர்கள். எனவே கற்றபடி நடவுங்கள். அதற்காகத் தான் உங்களுக்குக் கூலி தரப்படுகிறது.

அரசர்கள் தமது நாட்டில் பஞ்சம் ஏற்பட்டால் அது தனது ஆட்சிநல்ல முறையில் நடவாமையால் தான் ஏற்பட்டது என்று நினைத்துத் தமக்குத் தானே தண்டனை கொடுப்பார்கள்.

ஒரு மாணவன் கற்கவில்லையானால் அது அதிபரிலும் ஆசிரியரிலும் உள்ள குறைபாடே தவிர மாணவனில் உள்ள

குறைபாடு அல்ல. சிலபாடசாலைகளில் ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். அந்த 40 மாணவர்களும் நல்ல முறையில் கற்கிறார்கள்; நல்ல மதிப்பெண் எடுக்கிறார்கள்.

சில பாடசாலைகளில் தரம் ஒன்றில் இருந்து தரம் ஐந்து வரை 40 மாணவர்கள் கூடக்கற்பதில்லை. ஆனால் இவர்களில் எவருக்கும் எழுதவாசிக்கத் தெரியாது. இது ஏன்? ஒரு நாளைக்கு ஒரு சொல்லை எழுதப்பழக்கினாலும் ஒரு வருடத்தில் எத்தனை சொற்களை அவனுக்குக் கற்பிக்கலாம்.

பெற்றோர் கவனிப்பதில்லை; மாணவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்கு வருவதில்லை; பணம் இல்லை. இப்படி எத்தனையோ காரணங்களை அதிபர்களும் ஆசிரியர்களும் கூறுகிறார்கள். இவை எவையும் பொருத்தமான காரணங்கள் அல்ல.

50 – 60 வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தமக்கள் கல்வியில் பெரும் அக்கறை கொண்டவர்களாக இருந்ததில்லை. அன்று வாழ்ந்த பெரியவர்கள் வீடுவீடாகச் சென்று பெற்றோர்களுக்கு அறிவுரைகள் கூறி மாணவர்களை அழைத்து வந்து உடை, உணவு, கற்றல் சாதனங்கள் அனைத்தையும் கொடுத்தே கல்வி கற்பித்தனர். இந்த நிலை அன்றிராவிட்டால் நாமெல்லாம் கற்றவர்களாகியிருக்கமாட்டோம். எனவே உளவியலைக் கற்ற நீங்கள் கற்றபடி செயற்படுங்கள்.

அனுமதிக்கெனவும், மற்றும் பாடசாலைத் தேவைகளுக் கெனவும் நன்கொடைகள் வாங்கும் பழக்கம் தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த நன்கொடைகளால் பல பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை. எக்காரணம்

கொண்டும் அதிபர்கள் பணம் பெறக்கூடாது. முன்பு வாழ்ந்த பெரியவர்கள் பெரியபெரிய கல்லூரிகளைக் கட்டித் தந்திருக்கிறார்கள். கடமையுணர்வுள்ள அதிபர்கள் தனவந்தர்களிடம் நன்கொடை பெற்றுப் பாடசாலைகளின் தேவைகளை நிறைவு செய்யலாம்.

நான் அதிபராகக் கடமையாற்றிய போது பெற்றோரிடம் பணம் பெறவில்லை. நல்ல முறையில் பாடசாலையை நடத்தினேன். கட்டிடங்கள் கட்டினேன், உபகரணங்கள் வாங்கினேன். நீர்த்தாங்கி அமைத்தேன். விஞ்ஞானகூடம் அமைத்தேன். கோயில்கட்டினேன், விளையாட்டு மைதானம் வாங்கினேன், பாடசாலையைச் சுற்றி நான்கு பக்கமும் மதில் கட்டினேன், பாடசாலை வளவுள் நூறு ஆண்டு காலம் தேங்கி நின்ற நீரை மண்போட்டு அகற்றினேன். அதற்காக நான் நலன்விரும்பிகளையும், வெளிநாட்டு நிறுவனங்களையும் நாடினேனே தவிரப் பெற்றோரை நாடவில்லை.

பாவங்கள், புண்ணியங்களில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். செயலால் செய்யப்படுபவை மட்டும் பாவங்கள் புண்ணியங்கள் அல்ல. மனதால் நினைப்பவையும் பாவங்களையும் புண்ணியங்களையும் சேர்க்கும் என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும்.

ஒருவர் மூன்று ஆண்பிள்ளைகளைப் பெற்றார். மூவரும் வைத்தியர்கள். அவர் தான் பெரும் புண்ணியவான் என்று நினைத்தார். ஊரவரும் அப்படியே நினைத்தனர்.

அவரின் மகன்களில் ஒருவர் சரியான குடிகாரன். குடித்துவிட்டு வேலைக்குச் செல்லாமையால் அவர் வேலையால் நீக்கப்பட்டார்.

மற்ற மகன் சோம்பேறி. வேலை செய்வதே இல்லை. அதனால் நோயாளர்கள் அவரிடம் வைத்தியம் பார்க்கச் செல்வதில்லை.

மூன்றாவது மகன் படிப்பை இடையில் குழப்பிவிட்டான். இப்பொழுது அத்தந்தை பெரும் துன்பப்படுகிறார். இதுபோலப் பெருந் தனவந்தர்கள் இன்பத்தை அனுபவிக்கிறார்கள் என்றில்லை.

மகிழ்ச்சியும், நிம்மதியும் தான் வாழ்க்கை. அந்த மகிழ்ச்சியும் நிம்மதியும் பணியை நிறைவுடன் செய்வதனால் உண்டானால் அவனது வாழ்க்கை சிறக்கும். சந்ததியும் தழைக்கும். இதை நாம் பணியைச் சரிவரச் செய்வதன் மூலம் உணர்ந்து கொள்ளலாமே தவிர வேறு விதமாக அறிந்து கொள்ளமுடியாது.

ஒரு கூலிக்காரன் தனக்குத் தினமும் வேலை கிடைத்தால் மகிழச்சி என்று நினைக்கிறான்.

கசாப்புக் கடைக்காரன் தான் வைத்திருக்கும் மாமிசம் முழுவதும் விற்றால் போதுமென்று நினைக்கிறான்.

ஒரு ஞானி கோயிலடியில் படுத்திருந்தால் நிம்மதி என்று நினைக்கிறார்.

அதுபோல ஓர் ஆசிரியர் தன்னிடம் கற்கும் மாணவர்கள் அனைவரும் உரியமுறையில் கற்றுத்தேறவேண்டும் என்று நினைத்தல் வேண்டும். ஏனென்றால் கூலிக்காரனுக்கும் கசாப்புக் கடைக்காரனுக்கும் அவர்களது தொழில் முடிந்தால் தான் வேதனம்.

ஆசிரியர்களுக்கு அப்படியல்ல. தொழில் செய்தா லென்ன, செய்யாவிட்டாலென்ன, மாணவன் கற்றாலென்ன, கற்காவிட்டாலென்ன வேதனம் வழங்கப்படுகிறது. அதனால்

அசிரியர்கள் வேதனத்தைப் பற்றியோ, தமது எதிர்கால வாழ்க்கையைப் பற்றியோ சற்றும் சிந்திக்கத் தேவையில்லை. குறிப்பிட்ட தினத்தில் சம்பளம். 41 நாட்கள் விடுப்பு. தவணை விடுமுறை நாட்களில் ஓய்வு.

ஆசிரியர்கள் முக்கியமாக ஒன்றைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். எந்த மாணவனும் எதற்கும் உதவாதவன் அல்லன் என்றும், வைத்தியராக, பொறியியலாளராக, பட்டதாரியாக வந்து அரசாங்கத்தில் பெரியதொழில் செய்தால் தான் அவர்கள் உயர்ந்தவர்கள் என்றும் எண்ணுதலாகாது.

மேற்குறிப்பிட்ட தொழில்களைச் செய்யாது வேறு தொழில்கள் செய்வோர் பெரும்பணக்காரர்களாக இருக்கிறார்கள். சமூகத்தில் பணக்காரனுக்குத் தான் மதிப்பு அதிகம். அந்தப் பணக்காரன் நல்லவனாகவும், சமூகசேவை செய்பவனாகவும் இருந்தால் சமூகம் மதிக்கும் தன்மையை மதிப்பிட முடியாது.

ஒரு பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிப்பதற்கான ஒரு நிகழ்வு நடைபெற்றது. கல்விப்பணிப்பாளர் விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். யாழ்ப்பாணத்தில் மிகப்பெரியதொரு வர்த்தகரான திரு. பே. நாகரட்ணம் அவர்கள் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பதக்கங்கள் சூட்டிக் கௌரவித்தார். இங்கு பணம் தான் மதிக்கப்பட்டது.

இன்னொரு நாள் ஓர் ஆசிரியர் தனது மோட்டார் சைக்கில் காற்றுப் போனதால் தள்ளிக்கொண்டு வந்தார்.

அவ்வழியால் வந்த அவரிடம் கற்ற வைத்தியர் ஒருவர் அவரைக்கண்டு விட்டுத் தனது வாகனத்தை நிறுத்தினார்.

“பக்கத்தில் கடைகள் இல்லை என்ன செய்யப் போகிறீர்கள்?” என்று கேட்டுவிட்டுப் புறப்பட்டார்.

அடுத்து ஒரு பொறியியலாளர் வந்தார். அவரும் அதே வசனங்களைக் கூறினார், பின்; “யாரையாவது பிடித்துத் தள்ளிக் கொண்டு போங்கோ” என்று கூறிவிட்டுச் சென்றார்.

அடுத்து அவரிடம் கற்ற ஆசிரியர் வந்தார். “சுற்றாடலில் பழுது பார்ப்பதற்கான நிலையம் எதுவும் இல்லை. அந்த மரநிழலில் இருங்கோ நான் உங்களது மகனிடம் கூறுகிறேன்” என்று கூறிவிட்டுச் சென்றார்.

அடுத்து அவரிடம் கற்ற வர்த்தகன் ஒருவன் வந்தான்; “வாத்தியார், காற்றுப்போய்விட்டதா? விடுங்கோ” என்றவன், தனது மோட்டார் சைக்கிளில் இருந்த சாவிகளை எடுத்து காற்றுப்போன சில்லைக் கழற்றிவிட்டுச் சொன்னான்; “அது எனது நண்பரது வீடு. அங்கு வந்திருங்கோ. நான் ஒட்டிக்கொண்டு வருகிறேன்”

ஆசிரியர் அவன் கூறிய வீட்டில் வந்தமர்ந்தார்; “நேரம் மதியம் இரண்டாகிறது. களைத்துப் போனீர்கள் சாப்பிடுங்கோ. நாங்கள் சைவக்காரர். மச்சம் மாமிசம் உண்பதில்லை” என்று அந்த மாணவனின் நண்பன் கூறினான்.

ஆசிரியர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார்; “கனதூரம் சைக்கிலைத் தள்ளிக்கொண்டு வந்ததால் களைத்துப்போனேன். இன்று வெள்ளிக்கிழமை, விரதம், குளித்துவிட்டுத்தான் சாப்பிடவேண்டும். கொஞ்சம் தேநீர் தந்தால் போதும்” என்றார்.

அவனது மனைவி சுடச்சுடத் தேநீர் கொண்டுவந்து கொடுத்தாள். அவரது களைப்பை அந்தச் சுவையான தேநீர்

நீக்கியது. "அது அன்று மாலை ஐந்து மணி வரை போதும்" என்று நினைத்துக்கொண்டார்.

அந்த மாணவனது நண்பன் சொன்னான்; "உங்களைப் பற்றி எனது நண்பன் அடிக்கடி சொல்வான். நீங்கள் நல்ல ஆசிரியராம். கடமையை முழுமையாகச் செய்தனீங்களாம். உங்களிடம் படித்த பலர் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், உயர்ந்த உத்தியோகத்தர்களாகவும் பணிபுரிகிறார்களாம். தம்மைப் போன்ற சிலர் தான் உங்களின் நற்போதனைகளைக் கேளாமையால் சிறு சிறு தொழில் செய்கிறார்கள் என்று கவலைப்படுவான்" என்றார்.

"இவ்வளவு நாளும் உயர்ந்த உத்தியோகத்தில் உள்ள மாணவர்களால் தான் பெருமை என்று நினைத்தேன். ஒவ்வொரு மாணவனிடமும் ஒவ்வொரு திறமை உண்டு. அதுவும் கெட்டித்தனம் தான்" என்று நினைத்தார் ஆசிரியர்.

"உமது நண்பனின் பெயரை மறந்துவிட்டேன். அவர் என்ன செய்கிறார்?"

"அவன் பெயர் மாதவன். வர்த்தகன். பட்டணத்தில் மின்சார உபகரணங்களை விற்பனை செய்யும் பெரியதொரு கடைவைத்திருக்கிறார். அவரது மூத்த மகன் வைத்தியர், இரண்டாவது மகன் ஆசிரியர்" என்றான்.

அப்போது மாதவன் வந்தான். அவனது கையில் ஒரு ரியூப் இருந்தது; "இது பாவணைக்கு உதவாதது. புதிய ரியூப் போட்டுள்ளேன். இந்தாங்கோ சோடா. கனதூரம் வண்டியைத் தள்ளிவந்ததால் களைத்திருப்பீர்கள்"

"ரியூப் என்ன விலை?" பணத்தை நீட்டினார் ஆசிரியர்.

“வேண்டாம் வாத்தியார். உங்களின் ஆசியால் தான் நான் நல்லாய் இருக்கிறேன்” என்றான் மாதவன்.

ஆசிரியர் வீட்டிற்கு வந்தபோது அவரது மனைவி சொன்னாள்; “வைத்தியரும், பொறியியலாளரும், ஆசிரியரும் வீட்டுக்கு வந்து நீங்கள் நடுவழியில் மோட்டார் சைக்கில் காற்றுப்போய் நிற்பதாகக் கூறினார்கள். மகன் இன்னும் வரவில்லை. பேரப்பிள்ளைகள் ரியூசனுக்குப் போய்விட்டார்கள். அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளுக்குப் போனேன். அங்கு ஆம்பிளைகள் எவரும் இல்லை. நீங்கள் என்ன கஷ்டப்படப்போகிறீர்களோ என்று நினைத்துத் துடித்துக் கொண்டிருந்தேன். பத்து நிமிடத்துக்கு முன்பு தான் கனகராசா வாத்தியார் வந்து சொன்னவர். அதுக்கிடையிலை வந்திட்டியள்” ஆச்சரியப்பட்டாள் அவரின் மனைவி.

“படித்த பலருக்குக் கல்வியறிவைத் தவிர வேறு அறிவுகள் இல்லை. மோட்டார் சைக்கிளின் சில்லைக் கழற்றத் தெரியாமை, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடக்கத் தெரியாமை எனப்பல குறைகள் இவர்களிடம் உண்டு. சில்லைக் கழற்றத் தெரியாவிட்டால் திருத்துபவன் ஒருவனை அழைத்து வந்திருக்கலாம்” என்று நினைத்தார்.

உயர்ந்த உத்தியோகத்தவர்களை விடக் கூடுதலாகச் சம்பாதிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களின் பெண் பிள்ளைகள் பெரிதாகப் படிக்காவிட்டாலும், அவர்களின் பெற்றோர் பணத்தை அள்ளிக்கொடுத்து உயர்ந்த உத்தியோகத்தர்களைத் திருமணம் செய்து வைக்கிறார்கள். வைத்தியமாணவனுக்குக் கற்பித்த ஆசிரியரால் தனது மகளுக்கு ஒரு வைத்தியரை

மாப்பிள்ளையாக்குவது பெருங்கஷ்டம். காரணம் அவர்களிடம் பணமில்லாமை தான்.

எனவே மாணவர்களைச் சகல துறைகளிலும் வல்லுனராகும்படி செய்தல் வேண்டும். அதனால் அவர்கள் தமக்குத் துன்பங்கள் ஏற்படும் போது தாமே அதை நீக்கிக் கொள்வார்கள்.

அதிபர்களே, எந்த ஆசிரியர்களையும் கற்பிக்கத் தெரியாதவர்கள் என்று கழித்து வைக்காதீர்கள். பல்வேறு பிரச்சினைகளால் மனமுறிவுக்கு ஆளாகியிருக்கும் ஆசிரியர்களை இனங்கண்டு, அவர்களின் மனக்கிலேசங்களை இனங்கண்டு அகற்றுங்கள். அவர்கள் நல்லாசிரியராகி விடுவார்கள்.

அதிலும் எனக்கு நிறைந்த அனுபவம் உண்டு. ஓர் ஆசிரியரை எந்தப் பாடசாலையும் ஏற்கவில்லை. அப்பொழுது கல்வி அதிகாரியாகக் கடமை புரிந்த திரு. வீரபுத்திரன் அவர்கள் என்னிடம் வந்து எனது பாடசாலையில் அவரை ஆசிரியராகப் பணியாற்ற அனுமதிக்கும்படி வேண்டினார். நான் ஒப்புக் கொண்டேன். இப்போது அவர் கோட்டத்திலேயே சிறந்த ஆசிரியர். இப்படிப் பல உதாரணங்களைச் சொல்லலாம். அவையெல்லாவற்றையும் நான் எழுதிவிட்டேன். திரும்பவும் அதை எழுதவிரும்பவில்லை.

தன்னால் முடியாது என்று எந்த ஓர் ஆசிரியரும் அதிபரும் நினைக்கக் கூடாது. முயற்சியால் எதையும் செய்யலாம் என்று நினைத்து முழுமூச்சுடன் முயற்சித்துத் தான் நினைக்கும் செயல்களைச் செய்து முடித்தல் வேண்டும். இந்தத் தன்மையை மாணவரின் மனத்திலும் உருவாக்குதல் வேண்டும்.

1996ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்று திரும்பிவந்து நான் கடமைபுரிந்த பாடசாலையைப் பார்த்தேன். சுடுகாடு போல இருந்தது. சுற்றிவர அமைக்கப்பட்டிருந்த வேலிகளைக் காணவில்லை. தளபாடங்கள் எவையும் இல்லை. கட்டிடங்கள் அழிந்திருந்தன.

நான் அதைக்கண்டு பயப்படவில்லை. வேலியை மதிலாக்க வேண்டும் என்று நினைத்தேன். மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சீமெந்துக் கல் கேட்டேன். நான் எதிர்பார்த்ததை விட அதிகமான கற்கள் மாணவர்களால் கொண்டுவரப்பட்டன.

மாணவர்களின் பெற்றோர் மதிலைக் கட்டித் தந்தனர். கடனுக்கு விளையாட்டு மைதானத்தை வாங்கினேன். உரிய தவணையில் பணம் கொடுக்க முடியாமையினால் குற்றப் பணத்துடனும், நீதிமன்றச் செலவு பணத்துடனும் மிகுதிப் பணத்தை நீதிமன்றில் கட்டினேன்.

மிகுந்த சிரமங்கள், பொறுப்புக்கள், கஷ்டங்கள், பிரச்சினைகள், தோல்விகள் யாவும் பாடசாலையை முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்கும் போது தேடிவரும். இவற்றைக் கணக்கில் எடுத்தால் அதிபர்களால் எதையும் செய்ய முடியாது. காலையில் பாடசாலையைத் திறந்து மாலையில் அதைப் பூட்டத்தான் முடியும்.

பாடசாலைக்கு அன்பளிப்புக்கள் நிறையக்கிடைக்கும். அவற்றைக் கவனமாகப்பாவிக்க மாணவர்களுக்குப் பழக்குங்கள். அதைவீட்டிற்குக் கொண்டு செல்ல நினைக்காதீர்கள். அன்பளிப்பாகக் கிடைக்கும் பொருட்களை உடனுக்குடன் பதிவேட்டில் பதியுங்கள்.

பாடசாலையின் பணம் சம்பந்தப்பட்ட கணக்குகளை எல்லா ஆசிரியர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். இவற்றில் இரகசியம் பேணக்கூடாது. பொருளாளர் சுதந்திரமாகக் கணக்குகளை எழுதிப் பாதுகாக்க உதவி செய்யுங்கள்.

அதிபரைக் கண்டால் ஆசிரியர்களும் மாணவர்களும் மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாகுதல் வேண்டும். எப்பொழுதெல்லாம் ஓர் ஆசிரியன் வெற்றி பெறுகிறானோ அப்பொழுதெல்லாம் அவ்வாசிரியன் வலிமை பெற்றிருக்கிறான். அப்படியான ஆசிரியன் தான் தனது திறமை மூலம் அதிகாரியாக வருதல் வேண்டும். எப்பொழுதும் வயிறு ஆசிரியனை வழிநடத்தக் கூடாது. தலை தான் ஆசிரியனை வழிநடத்த வேண்டும். தலை வழிநடத்தும் ஆசிரியன் தான் சிறந்த ஆசிரியன். தலை வழிநடத்தும் ஆசிரியன் சுயநலமுள்ளவனாக இருக்கமாட்டான். சுயநலம் தான் ஒழுக்கக்கேடு. சுயநலவாதி மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்கமாட்டான். சுயநலமில்லாதவன் ஒழுக்க முள்ளவனாகவும், தைரியமுள்ளவனாகவும் இருப்பான். அவன் சலசலப்புகளுக்கு அஞ்சமாட்டான். புகழைத்தேடிச் செல்ல மாட்டான். அவனது செயல்களால் புகழும் வெகுமதியும் அவனைத் தேடிவரும். அவை அவன் இறந்த பின்பும் நிலைத்து நின்று அவனது செயல்களை வெளிப்படுத்தும். இவன் பாவம் செய்ய மாட்டான். இவனது நடத்தைகள் பாவத்தைச் செய்ய விடா. தைரியமானவன் மனத்தால் கூட தீயவற்றை நினைப்பதில்லை.

சிறந்த அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் இலகுவில் கிடைப்பதில்லை. ஆசைகளும், பற்றுக்களும், அவாக்களும் நிறைந்த உலகில் பல வருடங்களுக்கு ஒருமுறைதான் இவர்கள் வந்து அகப்படுவார்கள்.

“தேவையேற்படும் போது நான் அவதரிப்பேன், இல்லாவிட்டால் பொருத்தமானவர்களைப் பிறப்பிப்பேன்” என்று மஹா விஷ்ணு பகவத்கீதையில் கூறுகிறார். இது மாற்ற முடியாத உண்மை. ஏனென்றால் ஒரே விதமான கல்வி கற்ற ஆயிரமாயிரம் மனிதர்களுள் ஒரு சிலர் மட்டும் தான் அர்ப்பணிப்புடன் கடமை செய்கின்றனர். எல்லோரும் சரிவரக் கடமை புரிந்தால் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையைப் போல மாவட்டத்தில் உள்ள எல்லாப் பாடசாலைகளும் இருக்கும்.

ஒருவர் பலருக்குத் தீயவராக இருப்பார். சிலருக்கு நல்லவராக இருப்பார். என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய இரா. சுந்தரலிங்கம் அவர்களும் வே.தி. செல்வரத்தினம் அவர்களும் உத்தம புருஷர்கள். கடமையைச் சரிவரச் செய்த மஹான்கள். இவர்கள் பலருக்குத் தீயவர்களாக இருக்கலாம். அதனால் ஆராய்ந்து பாருங்கள். பின் சொல்லுங்கள். இவர்களது கடமைக் காலத்தில் கல்வியில் மறுக்கப்பட முடியாத சாதனைகள் பல நிகழ்ந்துள்ளமையை மறுக்க முடியாது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கணக்காளர் திரு. மகாலிங்கம் கமலதீபனைப் பற்றிச் சொல்லல் வேண்டும். இவர் பேராசிரியர் சிவஞானசுந்தரத்தின் மருமகன். பேராசிரியர் சிவஞானசுந்தரம் சமூக சேவைகள் பலவும் செய்தவர். மருத்துவத்துறைக்கு அரும்பணியாற்றியவர். “நந்தி” என்ற புனைப்பெயரில் இலக்கியப் பணிகள் பலவும் செய்தவர். ஆத்மீக ஞானியாக வாழ்ந்த இவர் சமயத்திற்காகப் பல தொண்டுகள் செய்தவர். சத்தியசாய்பாபாவின் பக்தனான இவர்

பாபாவைப் பற்றிப் பல நூல்களை எழுதியவர். பல மருத்துவ ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து சமூகத்திற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்றிய அவரை இலங்கையில் வாழும் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

இவரது மருமகனான கமலரூபனும் கடமையைக் கண்ணாகக் கருதுபவர். இவர் கணக்காளராகப் பதவி ஏற்ற பின்பு யாழ்ப்பாண வலயத்தில் உள்ள 103 பாடசாலைகளினதும் கணக்குகள் சீர்செய்யப்பட்டன. 20 – 25 வருட காலமாகப் பொருட்கணக்கெடுப்புச் செய்யப்படவில்லை. அவர் பதவி ஏற்று ஒருசில மாதங்களுக்குள் அக்கணக்கெடுப்புக்கள் யாவும் செய்து முடிக்கப்பட்டன.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் நான் அதிபராகக் கடமை புரிந்த போது 1995ஆம் ஆண்டு குடாநாடு இடம்பெயர்ந்தது. அவ்வேளையில் யாழ்ப்பாண வலயப் பாடசாலைகள் யாவும் இடம்பெயர்ந்தமையால் பாடசாலைகளின் பொருட்கள் பல இழப்புக்குள்ளாகின. அவ் இழப்பீடு 2007ஆம் ஆண்டு வரை சீர்செய்யப்படவில்லை. திரு. ம. கமலரூபன் கணக்காளராகப் பொறுப்பேற்ற சில மாதங்களுக்குள் அவை சீர்செய்யப்பட்டன. அதனால் பல்வேறு சிக்கல்களுக்குள்ளான அதிபர்கள் பலருக்கு நிம்மதி கிடைத்தது. நான் 1995ஆம் ஆண்டிலிருந்து 2007ஆம் ஆண்டு வரை நிம்மதியிழந்திருந்தேன். அவரின் கடமை உணர்வால் பெரியதொரு பாரம் அதிபர்களுக்கு நீங்கியது. தமது கடமைகளை வழுவாது செய்பவர்கள் கடவுளுக்குச் சமமானவர்கள்.

தன்னை நாடிச் செல்பவர்களை அன்புடன் இருத்தி, அவர்களது தேவைகளைக் கேட்டறிந்து, மகிழ்வுடன் உரையாடி, அவர்களது கோரிக்கைகளை உடனேயே தீர்த்து வைக்கும் பண்பாளர் கமலரூபன்.

மிகப்பொறுப்பு வாய்ந்த உயர்ந்த பதவியில் இருந்துகொண்டு யாழ்ப்பாண மக்களின் கல்வித் தேவைகளை இன்முகத்துடன் உடனுக்குடன் தீர்த்து வைக்கும் அவர் கடவுளின் வடிவம். அவரின் உதவியை ஆசிரியர்களும் அதிபர்களும் கோரினால் உடனேயே அதைச் செய்து முடித்துவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பார். இதன் காரணமாக யாழ் வலயத்தில் கடமை புரியும் மூவாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களும் நூற்றுக்கு மேற்பட்ட அதிபர்களும் ஓய்வு பெற்ற அன்றே தமது ஓய்வூதியத்தையும், தொகைப் பணத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். ஓய்வூதியம் பெறுபவர்களின் கணக்குகள் சீர் செய்யாமையால் சிலர் வருடக்கணக்கில் ஓய்வூதியத்திற்காக அலைகின்றனர். 30 – 35 வருடங்கள் மகிழ்வுடன் சேவை செய்தவர்களை அன்புடன் பேசி, ஆதரவுடன் அணைத்து அவர்களது மனதை மகிழ்வித்து அவர்களுக்கு உடனேயே ஓய்வூதியத்தைக் கொடுத்துதவும் அவரைப்பற்றி அதிபர்களும் ஆசிரியர்களும் மகிழ்வுடன் கூடி நின்று கதைப்பதை நான் கண்டிருக்கிறேன்.

இதை விட இரண்டு, மூன்று, நான்கு வருடங்களுக்கு முன்பே கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகள் கொடுக்கப் படாதிருப்பதைக் கண்டுபிடித்து அவற்றைக் கொடுத்து வருகிறார். தமது கடமைகளைச் செய்யாதிருந்து சம்பளம் பெற்று வரும் பலரின் மத்தியில் தனது அன்றாடக் கடமைகளுக்கு அப்பால்

பழைய கணக்கு வழக்குகளைப் பார்த்து அவற்றை உடனுக்குடன் கொடுக்கும் அவரது பண்பைப் பாராட்ட எழுத்தாளனான எனக்கே சொற்களைத் தேடவேண்டியுள்ளது.

கடமை உணர்வு உள்ளவர்களைப் பாராட்ட வேண்டும். அவர்களின் பண்பை மற்றவர்கள் அழியச்செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் மற்றவர்களையும் அவற்றைப் பின்பற்றச் செய்யலாம். இதுவே எனது எழுத்துக்களின் நோக்கம்.

எதிர்காலச் சிற்பிகளான மாணவர்களுடன் பழகுவதைப் போன்ற பெருமை வேறெந்தத் துறைக்கும் இல்லை. அறிவுடைய மாணவர்களது தொடர்பு வளர்பிறை போலத் தினமும் வளரும். நல்ல நூல்களைக் கற்கக் கற்ற மேலும் மேலும் இன்பம் பெருகுவது போல அறிவிற் சிறந்த மாணவர்களின் தொடர்பு நாட்செல்லச் செல்ல இன்பந்தரும்.

ஆசிரியத்துவம் என்பது பாடசாலைக்குச் சென்று வருவதன்று. நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குவதற்கென்று அமைக்கப்பெற்றது.

உடை அவிழும்போது அதைத் தடுத்துப் பிடிக்க உதவும் கையைப்போல, மாணவர்களுக்குப் பிரச்சினை வரும்போது அதை நல்ல முறையில் தீர்த்து வைப்பது தான் ஆசிரியத்துவம்.

இதை அதிபர்களும் ஆசிரியர்களும் உணருதல் வேண்டும். “நன்கு கற்பிக்கத் தெரிந்தவர் ஆசிரியர். நல்ல கற்றலை உருவாக்குபவர் அதிபர். கற்றலைக் குழப்புபவர்கள் அதிகாரிகள்” என்று எனது நண்பர் ஒருவர் விகடமாக அடிக்கடி கூறுவார். இதை மெய்ப்பிக்க அண்மையில் கல்விப்

பணிப்பாளராகக் கடமை செய்து தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கும் எனது இனத்தவர் ஒருவர் நான் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றமையை அறிந்து என்னை அழைத்துச் சொன்னார்,

“மகனே, நல்ல முறையில் நடைபெறும் பாடசாலைகளுக்குச் சென்று அவற்றை உனது அதிகாரத்தைப் பாவித்துக் குழப்பாதே. பல பாடசாலைகளில் கற்றல் நல்ல முறையில் நடைபெறுவதில்லை. நல்ல முறையில் கல்வி போதிக்கப்படாத பாடசாலைகளுக்குச் சென்று அங்கு கற்றலை மேம்படுத்து. கற்பிக்கின்ற பாடசாலைகள் உனது அதிகாரத்தால் பாதிக்கப்படலாம்”.

பலருக்குத் தம்மில் பிழைகாண்பது பிடிப்பதில்லை. அவர்கள் அதை அவமானமாகக் கருதுகின்றனர். அதனால் அவர்கள் பிழையாகக் கற்பித்தால் அது பிழை என்று கூறாது சரியான வழியெது என்பதை அறிந்து அப்படிக் கற்பித்துப் பாருங்கள் சிறப்பாக இருக்கும் என்று கூறுங்கள். இதன்படி நான் ஒரு பாடசாலையில் கூறினேன். அவ்வாசிரியர் சில நாட்களின் பின் என்னைத்தேடி வந்து; “நீங்கள் கூறியது நல்ல முறை. இப்பொழுது நீங்கள் கூறியபடி தான் நான் கற்பிக்கிறேன்” என்றார்.

பலாத்காரம் வன்முறையைத் தோற்றுவிக்கும். சாத்வீகம் அன்பைப் பெருக்கும். எப்பொழுதும் ஆசிரியர்கள் மாணவர்களிடத்து வன்முறையைப் பிரயோகித்தலாகாது. அதுபோல அதிபர்கள் அகிம்சையை விட்டு விலகக்கூடாது. இது விசித்திரமாகத் தோன்றலாம். பிரயோகித்துப் பார்த்து விட்டக் கூறுங்கள்.

எந்தவொரு விடயத்தையும் தொடங்காமல், அதைத் தொடங்குவது பற்றிச் சிந்தித்தால் அதைச் செய்வது கஷ்டம் என்ற நிலை தோன்றும். செய்தே முடிக்கவேண்டும் என்று திடமாக முடிவெடுத்துவிட்டால் அது மிக மிக எளிதான செயலாகிவிடும்.

கற்றுக்கொண்டு யாரும் பிறப்பதில்லை. ஒரு ஆற்றைக் கடக்கவேண்டுமானால் நீந்தத் தெரிந்திருத்தல் வேண்டும். கரையில் நின்று யோசித்தால் நீச்சல் வராது. துணிவுடன் ஆற்றில் இறங்கி நீந்தினால் கடந்துவிடலாம்.

வைத்தியராக யாரும் பிறப்பதில்லை. முயற்சி தான் வைத்தியராக்குகிறது.

ஆசிரியர்களின், அதிபர்களின் மனதில் அளவுக்கு அதிகமான நம்பிக்கையும், துணிவும் இருத்தல் வேண்டும். நீதியில்லாத செயல்களுக்கு மட்டும் பயப்படல் வேண்டும். குறிப்பாக அதிகாரிகளுக்குப் பயப்படவே கூடாது.

பாடசாலையின் கணக்கைச் சரியான முறையில் பேணுதல் வேண்டும்; நல்லமுறையில் கற்பித்தல் நடைபெறுதல் வேண்டும். இந்த இரண்டும் நடைபெற்றால் அதிகாரிகள் உங்களுக்குப் பயப்படுவார்கள். தமது கடமைகளைச் சரிவரச் செய்யாதவர்கள் தான் பயப்படல் வேண்டும்; அவர்களுக்குத் தொண்டு துரவுகள் செய்தல் வேண்டும். கடமைகளைச் சரியாகச் செய்பவன் யாருக்கும் பயப்படமாட்டான். அவனைக் கெடுக்க நினைப்பவர்கள் காலத்தால் அழிக்கப்படுவார்கள் என்பதை நான் எனது சேவைக்காலத்தில் உணர்ந்து கொண்டேன். பொய் சொல்லாது நேர்மையுடன் வாழ்ந்த அரிச்சந்திரனைக் கெடுக்க யாராலும் முடியவில்லை. அவனுக்கு நேர்ந்த துன்பங்கள், துயரங்கள் கணக்கில் அடங்காதவை.

இறுதியில் நீதிதேவனே அவனிடம் சரணடைந்தார். இது கதையல்ல, வாழ்க்கை என்பதை நான் எனது சேவைக்காலத்தில் புரிந்து கொண்டேன்.

அதனால் ஆசிரியர்கள் அதிபர் மீதும், அதிபர்கள் ஆசிரியர்கள் மீதும் நம்பிக்கை வைத்தல் வேண்டும். ஆசிரியர்கள் மீதும் அதிபர்கள் மீதும் மாணவர்கள் நம்பிக்கை வைத்தல் முக்கியமானது. இந்த ஆசிரியருக்குக் கற்பிக்கத் தெரியாது, இந்த அதிபருக்கு நிர்வாகம் தெரியாது என்று பாடசாலையில் உள்ள மாணவர்கள் நம்பினால் அந்தப் பாடசாலை மட்டுமல்ல சமூகமும், கல்வித்திணைக்களமும் அதை நம்பும்.

பயனில்லாத சொற்களைப் பேசுதல், குதர்க்கவாதம் செய்தல், மாணவர்களோடு மதிப்பின்றிக் கதைத்தல், மாணவர்களைக் கேலி செய்தல், மாணவர்களை மதிக்காமை, திமிர், அலட்சியம் செய்தல் போன்றவற்றால் மாணவர்கள் ஆசிரியரையும் அதிபரையும் வெறுப்பர்.

அதிபர்களும், ஆசிரியர்களும் எப்பொழுதும் கருணை உள்ளவராகவும், மாணவரது நீதியான கோரிக்கைகளை ஏற்பவராகவும், அன்புள்ளம் கொண்டவராகவும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடையவராகவும், கோபம் கொள்ளாதவராகவும், மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில்களைக் கூறுபவராகவும் இருத்தல் வேண்டும். அப்படி இருந்தால் தான் மாணவர்கள், அதிபர்கள் மீதும் ஆசிரியர்கள் மீதும் நம்பிக்கை வைப்பார்கள். மாணவர்கள் நம்பிக்கை வைத்தால் தான் அவர்கள் மீது நல்லெண்ணம் கொள்வார்கள். இந்த நல்லெண்ணம் மாணவர்களின் மனதில் உருவானால் அதை எக்காலத்திலும் அழிக்க முடியாது.

வளர்ந்தவர்களைப் போலத் திட்டமிடவோ, தாக்குதல் நடத்தவோ, பழிவாங்கவோ மாணவர்கள் முயலமாட்டர்கள். இவ் எண்ணத்தைப் பாடசாலையுள் உள்ளவர்கள், இல்லாவிட்டால் வெளியே உள்ள அதிருப்தியாளர்கள் உருவாக்குவார்கள். எனவே அதிபர்களும், ஆசிரியர்களும் பாடசாலையோடு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் மனதையும் ஆட்கொள்ளல் வேண்டும். இதற்காக மாணவர்களுடன் நல்லுறவைப் பேணுதல் வேண்டும். மாணவனது மனத்தில் இடம்பெற்றால் அவன் சமூகத்திற்குப் பதில் சொல்வான். தனது அதிபரையும், ஆசிரியரையும் குறைகூறமாட்டான்; குறை கூறுவோருடன் சண்டைக்குப் போவான். அவன் நம்பிக்கை கொள்ளவிட்டால், அவனே சமூகத்திற்குத் தவல்களை வழங்குபவனாக இருப்பான்.

பாடசாலை ஒரு குடும்பம். அதன் நன்மைகளை எல்லோருமாகச் சேர்ந்து பேணவேண்டும். தீமைகளை எல்லோருமாகச் சேர்ந்து அகற்றுதல் வேண்டும்.

பாடசாலையில் உள்ள அனைவரும் உரிமையுடன் பழகுதல் வேண்டும். அதிபர் ஒவ்வொரு ஆசிரியரையும் தனது உயர்ந்த நண்பராககக் கருதல் வேண்டும். ஒரு பாடசாலையில் கடமையாற்றும் பெரும்பான்மையான ஆசிரியர்களுக்கு இடமாற்றம் கொடுப்பதில்லை. அதனால் எப்பொழுதும் குடும்பத்தவரைப் போல இருந்து ஒவ்வொருவரினதும் நன்மை தீமைகளில் கலந்து கொள்ளல் வேண்டும். பலபாடசாலைகளில் இன்றும் சாதியமைப்பைப் போணுகின்றனர். இது தவறு என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

நுணுக்கமாக ஒருவரது பண்பை ஆராயாமல் நட்புக்கொண்டால் அது ஆபத்தாக முடியும். அதற்காக

ஒருவரை வெறுக்காது நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்த பின்பே நட்புக்கொள்ளல் வேண்டும்.

ஒருவரை ஆராய்வது மிகச் சுலபம். மாணவர்கள் நன்கு ஆராய்ந்து பட்டமும் சூட்டுவார்கள். அது பெரும்பாலும் சரியாகவே இருக்கும். நல்லவர்கள் நன்மைக்குப் புறம்பான செயல்களைச் செய்யும் போது உரிமையுடன் கண்டிப்பார்கள். தீயவர்கள் உதவுவது போல நடித்துத் தமது காரியத்தைப் பார்ப்பார்கள். எப்படித் தான் நடந்து கொண்டாலும் சிலரைப் பற்றி அறிந்து கொள்ளவே முடியாது.

கேடுவந்த பின்பு தான் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம். இந்தக்கேடு நன்மைகளைத் தான் தரும். இக்கேட்டின் மூலம் பழகுபவரின் தன்மைகளை முழுமையாக அறிந்துகொள்வதோடு அவதானமாகப் பழகவும் செய்யலாம். சிலர் மிகமிக அவதானமாகப் பழகுவார்கள். தாம் தான் நட்பில் சிறந்தவர்கள் என்று நிரூபிப்பார்கள். ஆனால் இறுதியில் தமது நன்மைக்காகப் பல கொடுமைகளைச் செய்வார்கள். அவர்கள் தீமைகள் செய்தாலும் அவர்கள் திருந்தவேண்டும் என்பதற்காக நல்லவர்கள் அவர்களுடன் அன்பாகப் பழகுவார்கள்; உதவிகள் பலவும் செய்வார்கள். அவற்றை அவர்கள் பலவீனமாகவும், இயலாமையாகவும் கருதித் தீமைகளையே செய்வார்கள். எனவே இப்படியானவர்களுக்குத் தொடர்ந்து நன்மைகள் செய்யாது அவர்களது உறவைத் துண்டித்தல் வேண்டும். அவர்கள் மீண்டும் தீமைகள் செய்யாதவாறு நடந்து கொள்ளல் வேண்டும். ஒருவரது அன்பின் உயர்வைக் கருதாது அந்த அன்பின் மூலம் என்னென்ன நன்மைகளைப் பெறலாம் என நினைப்பவர்கள் திருடர்கள், அவர்கள் விலைமாதர்களுக்கு

ஒப்பானவர்கள். எனவே அவர்களை விலக்கி வைப்பதில் பாவம் இல்லை.

தனது கடமைகளை முழுமையாகச் செய்வதும், பிற உயிர்கள் மீது பாகுபாடற்ற அன்பும், கருணையும் கொள்வது தான் மனிதனது இயல்பாக இருத்தல் வேண்டும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். இதை மற்றவர்கள் கைக்கொள்ளாவிட்டாலும் அதிபர்களும் ஆசிரியர்களும் கட்டாயம் கைக்கொள்ளல் வேண்டும். மாணவர்களுக்கு உரித்தானவர்கள் பெற்றோர்கள் அல்ல, அதிபர்களும் ஆசிரியர்களுமே மாணவர்களுக்கு உரித்தானவர்கள் என்ற எண்ணம் ஒவ்வொரு அதிபரினதும் ஆசிரியரினதும் மனதில் இருத்தல் வேண்டும்.

பிறப்புத்தான் கொடுமையானது. எல்லாச் சமயங்களில் உள்ளவர்களும் இறந்து பின்பு மீண்டும் பிறக்க விரும்புவதவில்லை. தட்டித்தவறிப்பிறந்தாலும் நல்ல பிறவியெடுக்க வேண்டுமென்றே நினைப்பார்கள்.

கடமையைப் பற்றின்றிச் செய்பவர்கள் மீண்டும் பிறக்க மாட்டார்கள் என்றும், அவர்கள் தமது கடமையை முடிக்காமல் இறந்திருந்தால் மீண்டும் அதே குடும்பத்தில், அதே தொழில் செய்பவராகப் பிறந்து தமது கடமையைச் சரிவரச் செய்து மிகுந்த இன்பத்துடன் வாழ்வார்கள் என்றும் பகவத்கீதை கூறுகிறது. இது பற்றிப் பல கதைகளையும் கட்டுரைகளையும் நான் எழுதியுள்ளேன். ‘இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்’ என்ற கட்டுரை நூல்கள் பத்தையும் வாசித்துப் பாருங்கள்.

ஒழுக்கமான வாழ்க்கை எப்பொழுதும் உயர்வையும், வெற்றியையும் தரும். அதனால் அதிபர்களும், ஆசிரியர்களும்

ஒழுக்கமுள்ளவர்களாக வாழுதல் வேண்டும். உங்களைப் பின்பற்றித் தான் மாணவர்கள் வாழ்வார்கள்.

எனக்குக் கற்பித்த ஒரு நல்லாசிரியர் தலையை அடிக்கடி ஆட்டுவார். இது அவரது பழக்கமாக இருத்தல் வேண்டும். எமது வகுப்பில் உள்ள பல மாணவர்கள் அவரைப் போலவே தலையை ஆட்டினர். இதைக் கவனித்த அவ்வாசிரியர் மாணவர்கள் தன்னைக் கேலி செய்வதாக நினைத்து அதிபரிடம் புகாரிட்டார். அதிபர் சொன்னார்; ‘‘மாணவர்கள் தமது ஆசிரியர்கள் செய்வதைப் பார்த்து அப்படியே செய்வார்கள். கங்காதரன் ஆசிரியரின் மேல் எனது மகனுக்கு அளவில்லாத பிரியம். வீட்டில் நல்ல உணவு வகைகள் தயாரித்தால் அவன் கங்காதரன் ஆசிரியருக்கென முதலில் எடுத்து வைத்துவிடுவான். ஒரு நாள் அவன் பீடி புகைத்துக்கொண்டிருந்தான். புகையை வளையம் வளையமாக விட்டான். நான் அதிர்ந்து போனேன். மெதுவாக ஆத்திரம் கொள்ளாது அவனை அன்புடன் அணைத்து; ‘‘புகைப்பிடிப்பது கெட்ட பழக்கம்’’ என்று புத்திமதிகள் சொன்னேன். அவன் அதைக்கேட்கவில்லை; ‘‘கூடாதவற்றை எனது ஆசிரியர் செய்யமாட்டார். அவர் நல்லாசிரியர். அவரைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று அதிபர் காலைக்கூட்டங்களில் கூறுவார். எனவே அவர் செய்வதை நானும் செய்வேன்’’ என்றான்.

எனக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. மிகுந்த கோபமும் வந்தது. அதை அடக்கிக்கொண்டு கங்காதரன் ஆசிரியரின் வீட்டிற்குச் சென்று அவரை எனது வீட்டிற்கு அழைத்து வந்தேன். பின் ஒரு பீடியையும் நெருப்புப் பெட்டியையும் எனது மகனிடம் கொடுத்து; ‘‘எங்கே உனது ஆசிரியர் புகைவிடுவது

போல் விடு'' என்றேன். எனது மகன் பயப்படாது பீடியை வாயில் வைத்துத் தீமூட்டினான். பின் வளையம் வளையமாகப் புகைவிட்டான். கங்காதரன் அதிர்ந்து போனார். அவர் தன்னைச் சுதாகரிக்குமுன் நான் அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட்டேன்.

சிலமணி நேரங்களின் பின் கங்காதரன் என்னிடம் வந்தார். அவரது முகம் கலவரப்பட்டிருந்தது. அவரால் கதைக்க முடியவில்லை.

சிலர் அறியாமையால் சிறுவயதில் தீயபழக்கங்களைப் பழகிவிடுவார்கள். கல்வி அறிவை அவர்கள் பெற்றதும் தாம் பழகிய தீய பழக்கங்களை விட்டுவிடல் வேண்டும். அப்படி விட முடியாதவர்கள் மறைந்திருந்து அத்தவறுகளைச் செய்தல் வேண்டும். நல்லாசிரியர்கள் செய்வதையே மாணவர்களும் செய்வார்கள். நீங்கள் நோய் காரணமாகத் தலையை அசைப்பதைப்பற்றி அறியாத மாணவர்கள் உங்களைப் பின்பற்றுகிறார்கள். நீங்கள் மிகவும் அவதானமாக நடந்து அதைத் தீர்க்க வேண்டும்'' என்றேன். அதன் பின் ஆசிரியர் தலையாட்டுவதைப் படிப்படியாகக் குறைத்தார். நாளடைவில் அவர் தலையாட்டுவதேயில்லை. முயற்சியும், பயிற்சியும் எதையும் செய்விக்கும் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

ஒழுக்கம் தவறுவதால் தான் பல்வேறு வகையான பிரச்சினைகள் உருவாகின்றன. ஒழுக்கம் தவறிய குடும்பத்தில் இருந்து ஆசிரிய நியமனம் பெற்றவர்களுடன் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளுதல் வேண்டும். தீய ஒழுக்கம் என்றும் தீமையையே தரும். அதனால் ஒழுக்கம் தவறி நடப்பது கூடாது.

ஆசிரியர்களும், அதிபர்களும் மக்களோடு பொருந்தி வாழும் கல்வியைக் கற்றல் வேண்டும். சிறந்த பல நூல்களைக் கற்ற பலர் மக்களோடு பழகத்தெரியாது தாம் வகிக்கும் பதவிக்கும், தான் கற்ற பாடசாலைக்கும் அவமானத்தைத் தேடிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கற்றவர்கள் கற்றபடி நடத்தல் வேண்டும். அதன் மூலம் கற்கின்றவர்களையும் நல்ல முறையில் வாழவைக்க வேண்டும். பலதீய செயல்களில் ஈடுபடுபவர்கள் ஆசிரியத்தொழிலில் ஈடுபடலாம். ஆனால் கடமையை மேற்கொள்ளும் போது அவர்கள் புனிதர்களாக மாறவேண்டும். இது சிரமமான பணியென்று நினைப்பவர்கள் ஆசிரியத் தொழிலில் ஈடுபடக்கூடாது.

பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமை புரிபவர்கள் எவ்வேளையிலும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுதல் வேண்டும். முக்கியமான விடயங்களைச் செய்யும் வேளைகளிலும், பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கும் போதும் மிகமிக அவதானமாகவும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.

அதிபர்கள் மேற்பார்வை செய்வதைத் தவிர வேறு எந்தப் பொறுப்புக்களையும் வைத்திருத்தலாகாது. பிரதி அதிபர், உபஅதிபர், பாடஇணைப்பாளர், தரஇணைப்பாளர் போன்ற பொறுப்பான பதவிகளைக் கொடுக்கும் போதும், விளையாட்டுச் செயலாளர், தமிழ்த்தினப் போட்டி, ஆங்கிலதினப்போட்டி ஆகியவற்றிற்குப் பொறுப்பானவர்களைத் தேர்ந்தெடுக்கும் போதும், பழைய மாணவர் சங்கச் செயலாளர், பொருளாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், பெர்ருளாளர் ஆகியோரைத் தெரிவு செய்யும் போதும் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

இவர்களின் தேர்வு பிழைத்தால் பாடசாலை நாசமாகி விடும். வேறெதுவும் செய்யமுடியாத சூழ்நிலையில் பொருத்தமில்லாதவர்கள் தெரிவு செய்யப்பட்டால் அதிபரின் செயற்பாடுகள் எவ்வளவு முன்னேற்றகரமாக இருந்தாலும் அவற்றால் நன்மைகளை விடத் தீமைகளே உருவாகும். இப்படியான சூழ்நிலையில் அதிபர் மதிநுட்பத்துடன் நடந்து கொள்ளல் வேண்டும்.

சிலர் பொறுப்பான பதவிகளைப் பெற்றால் தமது தீயகுணங்களைவிட்டு விட்டுவிட்டுச் சமூகத்திடம் நற்பெயர் வாங்கவேண்டுமென்று நினைத்துக் கடமையாற்றுபவர்கள். சிலர் பொறுப்புக்களைக் கொடுத்தால் தான் தான் அப்பதவிக்குரிய சகல அதிகாரங்களையும் கொண்டவன் என்று நினைத்து, மற்றவர்களை மதியாது திமிருடன் கடமை புரிபவர்கள். சிலர் பதவியைப் பயன்படுத்தி மேலதிகாரிகளுக்கு நிர்வாகத்தைப் பற்றித் தவறாகச் சொல்வார்கள்.

நல்ல பண்புகளும், மேலதிகாரிகளுடனான நல்லுறவும் இப்படியான நிகழ்வுகள் வரும் போது தப்பித்துக் கொள்ள வழி வகுக்கும். இதைவிட நல்ல அதிகாரிகள் பொறுப்பில் இருந்தால் அவர்கள் யார் எதைச் சொன்னாலும் நன்கு ஆராய்ந்து தான் நடவடிக்கை எடுப்பார்கள்.

நல்ல பண்பும், கற்பித்தலில் திறமையும், கடமை உணர்வும் உள்ளவர்களுக்குத் தீமை செய்ய நினைப்பவர்கள் கூடத் தர்மத்தால் தண்டிக்கப்பட்டதை நான் எனது 36 வருட ஆசிரிய சேவையில் கண்ணாரக்கண்டுள்ளேன்.

தனக்குக் கீழ்வேலை செய்பவர்களை அன்புள்ளவராகக் கருதாது அடிமைகளாகக் கருதியும், தமது கையாட்களின் சொற்களைக் கேட்டு நீதியாக நடக்கும் ஊழியர்களுக்

கெதிராக நடவடிக்கை எடுத்த அதிகாரிகள் பலர் சமூகத்தால் மட்டுமல்ல அவர்களது கையாட்களாலேயே அவமானப்பட்டதையும், தாம் நம்பியவர்கள் தீயவர்கள் என்று தெரிந்தபோதும் மனைவி, மக்கள், உறவினர்கள், நண்பர்கள் போன்றோரின் வேண்டுகோளுக்கிணங்கப் பதவிகளைக் கொடுத்துவிட்டு அவர்களால் பட்ட துன்பங்களை ஓய்வு பெற்ற பின்பும் நினைத்துக் கவலைப்பட்டுப் புலம்பியதையும் நான் அறிவேன்.

நாகதாளி என்ற விசச்செடியைத் தனது வேலியின் எல்லையில் போட்டு வைத்தவன் அதன் விசமுள்ளால் காயப்பட்டு வைத்தியசாலையில் பல நாட்கள் தங்கியிருந்து சிகிட்சை பெற்றதையும் நான் அறிந்துள்ளேன்.

பொருத்தமற்றவர்களுக்குப் பதவியைக் கொடுத்து விட்டேன் என்று அவர்களுக்குப் பதவி கொடுக்கும் போதே அதிகாரிகள் அறிந்து கொள்ளல் வேண்டும். கொடுத்த பின்பு பிரச்சினைப்படுவதை விடப் பொறுமையுடன் அவரை வெல்லும் காலம் வரை காத்திருந்து வெல்லல் வேண்டும்.

காகம் தன்னைவிட அதிகம் வலிமையுள்ள கோட்டானை பகல்வேளையில் வென்றுவிடும். அதைப் போலப் பகைவனை வெல்ல நினைப்பவன் காலம் கனியும் வரை பொறுமையைக் கைக்கொள்ளல் வேண்டும்..

அறிவாளி அடங்கியிருப்பது, சண்டையிடும் ஆட்டுக்கடா தாக்குவதற்குரிய வேகத்தை அதிகரிப்பதற்காகப் பின்நோக்கிச் செல்வதைப் போன்றது.

'பொறுமை கடலைவிடப் பெரியது' என்பார்கள். 'பொறுத்தார் அரசாள்வார்' என்றும் சொல்வார்கள். நல்ல

பண்புகளையுடைய அறிவாளியான மேலதிகாரி காலம் கனியும் வரை பகைவரின் செயல்களை அவதானித்துக் கொண்டிருப்பான். பகைவனுக்கு அழிவுகாலம் வரும்போது அவன் அழிப்பார் இன்றி அழிந்து போவான் என்று அறிவாளிகள் புரிந்து கொள்வதினாலேயே அவர்கள் அடங்கியிருக்கிறார்கள்.

ஓடுமீன் ஓடி உறுமீன் வரும் வரை காத்திருக்கும் கொக்கைப் போலப் பகைவரைத் தண்டிப்பதற்காகப் பெரியவர்கள் காலத்தை எதிர்பார்த்திருப்பர். காலம் வாய்க்கும் போது இவர்கள் கொக்கு மீனைக் கொத்திப் பிடிப்பது போல விரைந்து செயற்பட்டுப் பகைவரை அழிப்பர்.

இதுபோல அதிபர்களும் தமக்கு எதிராக நடப்பவர்களுடன் நடந்து கொள்ளல் வேண்டும். இப்படியான வேளைகளில் அதிபர்கள் அமைதியாக இருத்தல் வேண்டும்; பொறுமையைக் கடைப்பிடித்தல் வேண்டும். தனது செயல்களைப் பற்றி அடுத்தவர்களுடன் கலந்தாலோசித்தல் கூடாது.

எனக்குத் தெரிந்த ஓர் அதிபர் தான் லீவில் நிற்கும் வேளைகளில் பிரதி அதிபரிடம் பொறுப்புக்களை ஒப்படைப்பார். ஒருமுறை ஆசிரியர் ஒருவருக்கெதிராக ஒழுக்காற்று விசாரணை நடைபெற்றது. அந்த விடயம் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் மேலதிகாரியால் பதியப்பட்டது.

அதிபர், உபஅதிபரிடம் பாடசாலைப் பொறுப்புக்களைக் கொடுத்துவிட்டு சென்ற போது பிரதி அதிபர் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் மேலதிகாரி எழுதியதைப் போட்டோப் பிரதி எடுத்து ஆசிரியரின் எதிரிக்குக் கொடுத்துவிட்டார். அந்தப்பிரதி மேலதிகாரிக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது.

மிகவும் நல்ல அந்த மேலதிகாரி சம்பந்தப்பட்ட அதிபரை அழைத்து அப்பிரதியைக் காட்டினார். அதிபர் அதிர்ந்து போனார்.

சிலகாலம் செல்ல அதிபர் பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றபோது பாடசாலைப் பொறுப்புக்களை அதிபர் இன்னொரு ஆசிரியரிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்.

பிரதி அதிபர் பெற்றோர்கள் பலருடனும், பழைய மாணவர்கள் பலருடனும், மேலதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டார். அதன் பயனாகப் பிரதி அதிபருக்குச் சிறிதொரு பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது.

நீதியை எல்லோரும் மதித்துப் போற்றவேண்டும். உடல் பலவீனப்படும் போது நோய் உடலைத் தாக்குவது போல செயல்கள் பலவீனமடையும் போது அவை சம்பந்தப்பட்டவர்களைத் தாக்கும் என்பதைக் கற்றவர்கள் எண்ணுதல் வேண்டும்.

அந்தப் பிரதி அதிபரின் தந்தை ஆசிரியர். தாய் ஆசிரியர்; சகோதரி ஆசிரியர்; மனைவி ஆசிரியர். இவர்கள் எல்லோரும் ஒன்றுகூடித் தமது உறவினரான பிரதி அதிபருக்காகப் பல போராட்டங்களை நடத்தினர். அவை எவையும் வெற்றியளிக்கவில்லை.

கற்றவர்கள் மற்றவர்களுக்குப் புத்திமதிகள் கூறித்திருத்த வேண்டும். ஆனால் பலர் தீயவர்களுக்காகப் பரிந்து பேசுவதையே நான் கண்டிருக்கிறேன். சம்பவத்திரட்டுப் புத்தகத்தைப் போட்டோப்பிரதி எடுக்கும் படி பிரதி அதிபரின் தாய் தான் கூறினார். சகோதரி அதற்கு ஆதரவளித்தாள். கணவன் பாவம் அவருக்கு விடிவது பொழுதுபடுவது எதுவும் தெரியாது.

தீயசெயல்கள் செய்பவனுக்கு மட்டுமல்ல அதற்குத் துணைசெய்பவர்களையும் தாக்கும். அது உடனே நடைபெறும் என்றில்லை. காலம் கடந்தும் தாக்கும் என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும்.

அதிபர்கள் இடமாற்றம் பெறும் போதும், பதவி உயர்வு பெற்றுச் செல்லும் போதும், ஓய்வு பெறும் போதும் தமது பொறுப்புக்களை நல்லவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அது சம்பந்தப்பட்ட அதிபரையும், பாடசாலையையும், சமூகத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும். பாடசாலைகளில் பெறுமதியான உபகரணங்கள் பல உள்ளன; ஏராளமான பணம் வங்கியில் இருக்கும்; பல ஆசிரியர்களின் முக்கியமான கடிதப்பிரதிகள் இருக்கும்; பாடசாலையின் ஆவணங்கள் இருக்கும்; பாடசாலைக்குரிய காணிகளின் உறுதிகள் இருக்கும். இவற்றை ஒப்படைப்பதில் மிகுந்த கவனம் தேவை. நம்பிக்கை உள்ளவர், நெருங்கிய நண்பர், உறவினர் என்று எவரையும் நம்பாது உரியமுறையில் ஒப்படைக்கும்போது, ஒப்படைக்கப்பட்ட பொருட்களின் பட்டியலை ஒப்படைக்கப்பட்டவரின் கையொப்பத்துடன் சாட்சிக்குரியவர்களின் கையொப்பங்களையும் பெற்று தான் ஒரு பிரதியை வைத்திருத்தல் வேண்டும். திணைக்களத்திற்கு ஒரு பிரதியைக் கொடுத்தல் வேண்டும். சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் எல்லாவற்றையும் பதிவு செய்தல் வேண்டும். ஆவணங்கள், உறுதிகள் போன்ற பெறுமதியானவற்றைப் போட்டோப்பிரதி எடுத்து வைத்திருத்தல் வேண்டும்.

இவற்றைச் செய்யாத ஓர் அதிபர் மிகுந்த கஷ்ரத்துக்குள்ளானார். பாடசாலைக்குரிய காணிகள் பாடசாலைக்கு வெகுதூரத்திலும் இருக்கலாம். பாதிக்கப்பட்ட

அதிபரின் பாடசாலைக்குரிய காணி பாடசாலைக்குள்ளேயே இருந்தது. அதிபர் தனது சேவைக்காலத்தில் மிகவும் நம்பிக்கையுடன் பழகிய ஒருவரிடம் பாடசாலைப் பொறுப்புக் களைக் கொடுத்துவிட்டுச் சென்றார். கல்வித் திணைக்களம் பாடசாலைக்குப் புதிய மாடிக்கட்டிடம் ஒன்றைக் கட்டத் தீர்மானித்தது.

அப்பாடசாலைப் பொறுப்புக்களை ஏற்ற அதிபர் பாடசாலைக்குள் இருந்த காணிக்குள் கட்டிடத்தைக் கட்டாது பாடசாலைக்கு வெகுதூரத்தில் இருந்த காணிக்குள் கட்டிடங்களைக் கட்டத் தீர்மானித்தார். பாடசாலைக்குள் இருந்த காணி இன்னொருவருடையது என்று பாடசாலையைப் பொறுப்பேற்ற அதிபர் கூறினார்.

அதை நம்பிய கல்வித் திணைக்களம் வகுப்பறைகளைக் கட்டுவதை நிறுத்தியது. இதைப் பாடசாலைச் சமூகமும் ஏற்றுக் கொண்டது. அந்தக்காணி பாடசாலைக்குரியது என்று அப்பாடசாலையைச் சுவீகரிக்கும் போது வெளியிடப்பட்ட வர்த்தகமானியின் உண்மைப் பிரதியைக் கொடுத்த அதிபர் திகைத்துப் போனார். தான் அதைப் பிரதி செய்யாது கொடுத்ததை நினைத்து வருந்தினார். அவருக்குத் துன்பங்கள் ஏற்படும் போது தனது குலதெய்வமான மஹா கணபதிக்கே தனது துன்பங்களைப் பற்றிக் கூறுவார். அதன்படி தனக்குப் பாடசாலை அதிபரால் ஏற்பட்ட துன்பத்தை மஹாகணபதிக்குக் கூறினார். அவர் கட்டாயம் அத்துன்பத்தை நீக்குவாரென நம்பினார்.

எனவே அதிபர்கள் தாம் ஒப்படைக்கும் ஆவணங்கள் அனைத்தையும் பிரதி செய்தல் வேண்டும். நீங்கள் பொறுப்புக்களை ஒப்படைப்பவர்கள் நல்லவர்கள்,

நம்பிக்கைக்குரியவர்கள், நீதியானவர்கள், உறவினர்கள் என்று நினைத்தாலும் காலவேறு பாட்டால் எதுவும் நிகழும் என்று நினையுங்கள். தற்செயலாக நீங்கள் பொறுப்புக் கொடுத்தவர் ஆவணங்களைத் தொலைக்கலாம், இடம்பெயர்வு, விபத்துக்களால் அவற்றிற்கு அழிவு ஏற்படலாம். ஆதனால் கவனமாக இருங்கள்.

இடமாற்றம், பதவியுயர்வு, ஓய்வு பெறும் காலம் வருமுன்பே இவற்றை நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்துங்கள். முடிந்தால் நான்கு அல்லது ஐந்து பிரதிகள் எடுங்கள்.

எமது நண்பர் ஒருவர் தனது பிள்ளைகளின் முக்கியமான சான்றிதழ்கள் அனைத்தையும் பிரதிகள் எடுத்துப் பலரிடம் கொடுத்து வைத்திருந்தார். அதில் ஒன்றை என்னிடமும் தந்திருந்தார். இடம்பெயர்வின் போது அவரது வீடு முற்றாகச் சேதமடைந்துவிட்டது. ஆவணங்கள் நனைந்து அழிந்துவிட்டன. அவரது மகளுக்கு நேர்முகப்பரீட்சைக்குச் சமூகமளிக்கும்படி கடிதம் வந்தது. அவரிடம் மூல ஆவணங்கள் இல்லை. என்னிடம் வந்து பிரதிகளைப் பெற்றுச் சென்றார். நேர்முகப் பரீட்சையின் போது அப்பிரதிகளை ஏற்றுக்கொண்ட மேலதிகாரிகள் விரைவில் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்கும்படி சொன்னார்கள். பிரதிகளைக் கச்சேரிக்குக் கொண்டு சென்ற அவர் மூலப்பிரதிகள் அனைத்தையும் மிகவும் இலகுவாகப் பெற்றுக் கொண்டார். எனவே ஆவணங்களைபப் பிரதி செய்து வைப்பதன் மூலம் எந்த நட்டமும் வராது.

அரியபல நூல்களைக் கற்று குற்றமில்லாதத அறிஞராக விளங்குபவர்களிடமும் பற்றுக்கள் இருக்கும். இப்பற்றுக்கள், பதவி, மண், பொன், பொருள் சம்பந்தமாக இருக்கும். என்ன தான் உபதேசங்களைச் செய்தாலும், எண்ணிறைந்த

நூல்களைக் கற்றுத் தேர்ந்தாலும் பற்றுக்கள் இப்படியான வேளையில் மனதுள் புகுந்து மனதைமாற்றி விடுவதும் உண்டு.

நன்கு ஆராய்ந்து தெளிந்த பின்பு பொறுப்புக்களை ஒப்படைத்த பல அதிபர்கள் துன்பத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் பதவி, புகழ் என்பவற்றில் ஆசை கொள்வதேயாகும்.

பாடசாலையின் பொறுப்புக்களை ஒப்படைத்த பின்பு பாடசாலைச் சமூகம் அழைத்தால் கூடச் செல்வதற்கு உடன் ஒப்புக்கொள்ளலாகாது. பொறுப்புக்களை ஒப்படைத்த பின்பு அப்பாடசாலையைப் பற்றிப் பகிரங்கமாக விமர்சிக்கக் கூடாது. பிரச்சினைகள் இருப்பின் அதைச் சம்பந்தப்பட்டவர்களுடன் மிகவும் இரகசியமாகக் கதைத்தல் வேண்டும். அதிகமான அதிகாரிகளுக்குப் பிறர் ஆலோசனை கூறுவது பிடிப்பதில்லை. அப்படிப் பிடிக்காவிட்டால் ஆலோசனை கூறுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

பொதுவாக ஒருவர் கடமையாற்றும் காலத்தில் தனக்குக் கீழ்க் கடமைபுரிபவர்கள் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. பலர் அதிகாரத்திற்குப் பயந்து நல்லவர்கள் போல இருப்பார்கள். இவர்கள் சந்தர்ப்பம் ஏற்படும் போது தமது ஆத்திரத்தைத் தணிக்க விரும்புவார்கள். எனவே பலவற்றையும் புரிந்து கொண்ட அறிஞர்கள் இவற்றையெல்லாம் கண்டுகொள்ளக் கூடாது. கண்டுகொண்டாலும் அதற்கேற்ற வகையில் மிருதுவாக நடந்துகொள்ளல் வேண்டும்.

ஒருமுறை சொன்னால் கேட்கக்கூடியவனுக்குத் தான் புத்திமதிகள் கூறலாம் என்று பஞ்ச தந்திரம் என்ற நூல் கூறுகிறது.

புத்தக அறிவினால் மனித நேயம் உண்டாக மாட்டாது, குரு மூலமாகவும் அதைக் கற்றுக்கொள்ள முடியாது. எந்த உறவினனோ அல்லது நண்பனோ மனித நேயத்தைப் பற்றிச் சொல்லித்தரமாட்டான். அது இதயத்திலிருந்து உற்பத்தியாகுதல் வேண்டும். இதயத்துள் பல தீய குணங்களை மறைத்து வைத்துக்கொண்டு மிகுந்த அன்பு, பாசம், அக்கறை உள்ளவர்களாகப் பலர் பழகிக்கொண்டிருக்கிறோம்.

கற்றவையெல்லாம் பயன் தருமானால் உலகில் கடவுள்கள் தான் வாழ்வார்கள். மனிதர்கள் எவரும் இருக்கமாட்டார்கள்.

கற்றவையெல்லாம் நினைவில் இருந்தால் உலகம் அறிவாளிகள் மயமாக இருக்கும். உறவினர்களும், நண்பர்களும் நன்மையே செய்து கொண்டிருப்பார்களானால் நீதிமன்றங்களும், காவல்துறை நிலையங்களும் இருக்கத் தேவையில்லை.. அவற்றிற்குப் பதிலாகக் கோயில்களும் ஆச்சிரமங்களும் தான் இருக்கும். கற்ற கல்வியும், கல்வித் திட்டமும், கல்விக் கோட்பாடுகளும் மனதில் இருந்தால் எல்லோரும் மஹான்களாகிவிடுவார்கள்.

எனவே கல்வியால் பல்வேறுபட்ட அறிவுகளைப் பெறலாமே தவிர மனிதநேயத்தைப் பெறமுடியாது. மனித நேயமில்லாத கற்பித்தலால் தான் மாணவர்களும் மனித நேயமில்லாதவர்களாக மாறுகிறார்கள்.

பொதுவாகப் பாடசாலைகளில் எழும் பிரச்சினைகளுக்குக் காரணமானவர்கள் பாடசாலைச் சமூகத்தினர் தான். பாடசாலைச் சமூகம் என்று கூறும் போது பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரிகளும் அதற்குட் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

சில அதிகாரிகள் ஆசிரியர்களைக் குழப்பம் செய்யுமாறு தூண்டிவிடுகிறார்கள்.

சில அதிகாரிகள் தமது நலனுக்காக மாணவர்களைப் பயன்படுத்துகிறார்கள்.

பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் தேவையில்லாத பிரச்சினைகளில் தலையிடுகின்றன.

சில பாடசாலைகளில் அதிகாரிகளின் கெடுபிடிகள் அளவுக்கதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம் அதிகாரிகளின் நெருங்கிய உறவினர்கள் அங்கு கடமை புரிவதே.

சில பாடசாலைகளில் மிக உயர்ந்த உத்தியோகத்தில் உள்ளவர்கள் அப்பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களில் இருந்து கொண்டு அதிபர்களுக்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

பாடசாலை, கோயில், மயானம் இந்த மூன்று இடங்களும் சமரசம் உலாவும் இடங்கள். இம்மூன்று இடங்களிலும் ஆண்டியும் அரசனும் சமமானவர்கள்.

ஓர் உயர் அதிகாரியின் மகன் ஒரு பிரபல பாடசாலையில் கல்வி கற்றான். அவன் மிகவும் நல்ல மாணவன். ஆனால் அவனது தந்தையார் ஆசிரியர்களையும் அதிபரையும் மதிப்பதில்லை. ஆசிரியர்களும் அதிபரும் சேர்ந்து அந்த உயர் அதிகாரிக்குப் பாடம் கற்பிக்க விரும்பினர். அதற்கு அந்த மாணவனும் ஒப்புக்கொண்டான்.

அந்த மாணவன் ஒருவாரமாகப் பாடசாலைக்கு வரவில்லை. அதிபர் மாணவனின் தந்தைக்கு அவன் பாடசாலைக்கு வராமை பற்றி அறிவித்தார்.

உயர் அதிகாரி துடித்துப் பதைத்துக்கொண்டு பாடசாலைக்கு வந்தார். அவர் வந்த நேரம் காலை பத்துமணி. அதிபர் அலுவலகத்தில் இருக்கவில்லை.

அதிபர் எங்கே என்று அங்குள்ள ஒருவரை விசாரித்தார். அவர் விளம்பரப்பலகையைக் காட்டினார். அதில் அதிபரைப் பாடசாலை நேரத்தில் சந்திக்க முடியாது. பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை மட்டுமே சந்திக்கலாம் என்றிருந்தது.

கடிதத்தைத் திரும்பவும் பார்த்தார். அதிலும் அப்படியே இருந்தது.

அவர் எதுவும் பேசவில்லை. அவர் அதிபரைச் சந்திக்க வருமுன் தனது தந்தையாருக்கு இது பற்றிச் சொன்னார். அப்போது தந்தையார் சொன்னார்; ‘‘மகனே, அதிபரும் ஆசிரியர்களும் தான் சமூகத்தில் உயர்ந்தவர்கள். அவர்கள் தான் அனைவரையும் கற்பிக்கின்றனர். உயர்ந்த உத்தியோகத்தர்களையும் அவர்களின் பிள்ளைகளையும் கற்பிக்கின்றனர். உனது மகனைப் போல உயர்ந்த உத்தியோகத்தர் பலரின் பிள்ளைகள் அங்கு கற்கின்றனர். இவர்கள் எல்லோரும் ஒழுக்கமாக அடங்கியிருந்து கற்றல் வேண்டும். நீ உயர்ந்த உத்தியோகத்தன். உன்னை அவர்கள் அடக்கவில்லை. தமது மாணவர்களையே அடக்குகின்றனர். உனக்கு அது விருப்பமில்லாவிட்டால் உனது மகனை வேறு பாடசாலையில் சேர். ஆனால் அங்கும் அப்படித்தான் நடப்பார்கள்’’ என்றார்.

அந்த உயர் அதிகாரி அதிபரைச் சந்திப்பதற்ககாக இரண்டு மணிவரை காத்திருந்தார்.

அதிபர் அலுவலகத்திற்கு வந்து தனது வேலைகளைப் பார்த்தார். பிற்பகல் 2.30 மணிக்குத் தன்னைச் சந்திக்க வந்து இருப்பவர்களை அழைத்ததார்.

முதலில் அந்த உயர் அதிகாரி வந்து தன்னை அறிமுகப்படுத்தினார்.

‘‘இருங்கள்’’ என்றார் அதிபர்.

வந்தவர் எதுவும் பேசவில்லை.

அதிபர் சொன்னார்; ‘‘இப்பாடசாலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். மாணவர்கள் ஒழுக்கம் தவறி நடப்பது புதுமையானது அல்ல. பெற்றோர், அதுவும் கற்ற பெற்றோர் ஒழுக்கம் தவறி நடப்பதை மன்னிக்க முடியாது. உங்கள் மகன் செய்வது சரியென்று நீங்கள் நினைத்தால் எம்மால் எதுவும் செய்ய முடியாது. நன்கு யோசித்துவிட்டு வாருங்கள். பிரச்சினையைப் பாடசாலை நிர்வாகத்தால் தீர்க்க முடியாது என்று நீங்கள் நினைத்தால் நீதிமன்றத்திற்குச் செல்லுங்கள்’’

உயர்அதிகாரி எதுவும் பேசாமல் இருந்தார். சிறிது நேரத்தின் பின்; ‘‘நீங்கள் நடவடிக்கை எடுங்கள். நான் தலையிடவில்லை’’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

அதிபர்களுக்குத் தேவையில்லாத பயங்கள் மனதில் எழக்கூடாது. எந்த உயர்அதிகாரியின் பிள்ளையானாலும் அவன் மாணவன் என்றநிலை அதிபர்களுக்கு இருத்தல் வேண்டும்.

முடிபுகள் எடுத்த பின் அதை மாற்றக்கூடாது. ஒரு செயலைத் தொடங்குமுன் அதைப்பற்றி ஆராய வேண்டுமே தவிரச் செயலைத் தொடங்கிய பின்பு அதைப்பற்றி ஆராயக்கூடாது. செயலைத் தொடங்குமுன் அந்தச் செயலைச்

செம்மையாகச் செய்யத் தெரிந்தவர்களுடன் கலந்து ஆலோசித்து, அச்செயலை முடிக்கக்கூடியளவு பணத்தைத்தேடி, அச் செயலை நுட்பமாகச் செய்து முடிக்கக்கூடியவனைத் தேர்ந் தெடுத்து அதை அவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

தமக்கு இழிவு ஏற்படக்கூடாது என்று நினைப்பவர்கள் தம்மால் செய்து முடிக்க முடியாத எந்தச் செயலையும் தொடங்க மாட்டார்கள்.

ஒருவர் செய்யக் கூடாதவற்றை, செய்ய முடியாதவற்றைச் செய்யத் தொடங்குவது கேட்டையே தரும். செய்ய வேண்டியவற்றை செய்யாமல் விடுவதும் கேட்டைத் தரும்.

செய்ய வேண்டிய முறைப்படி செய்யாத முயற்சிக்குப் பலர் வந்து உதவி செய்தாலும் அது முற்றுப் பெறாது.

ஒவ்வொருவரது பண்புகளை ஆராய்ந்தறியாது நன்மைகள் செய்வதும், செய்யும் செயல்களைப் பற்றிக் கலந்துரையாடுவதும் எப்பொழுதும் தீமையையே தரும்.

பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் தம் நிலைக்குப் பொருந்தாதவற்றை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனால் இகழ்ச்சிக்கு இடமுண்டாகும். எனவே உதவுபவர்கள் ஒவ்வொரு வரினதும் மனநிலையை அறிந்து கொள்ளல் வேண்டும்.

ஓர் அதிபர் தான் செய்ய எடுத்துக்கொண்ட செயலின் வலிமை, தன்னுடைய வலிமை, அதைச் செய்துதர ஒப்புக் கொண்டவரின் தன்மை, தனக்கு உதவுவோரின் தன்மை ஆகியவற்றை நன்கு ஆராய்ந்த பின்பே செயலைத் தொடங்குதல் வேண்டும்.

தன்னால் செய்ய முடியும் என்பதை அறிந்த பின்பு செய்யத் தொடங்கும் செயல்கள் பகைவர்களினால் கெடுக்கப்படலாம். எனவே தனது பகைவர்களை முதலில் இனங்காணல் வேண்டும். கோழி பிடித்த கள்வனும், சேர்ந்து தேடுவான். இதில் எனக்கு அனுபவமுண்டு.

கனடாவில் இருந்து வந்த பழைய மாணவன் ஒருவன் பாடசாலைக்கு அருகில் உள்ள காணியொன்றை வாங்கித் தருவதாகக் கூறினான். பாடசாலை மிகவும் சிறிய பரப்பளவைக் கொண்டது. அங்கு கற்கும் மாணவர்கள் இடைவேளையின் போது கூடி நிற்கக்கூட இடமில்லை. அதனால் இடைவேளைகளை இரண்டு வேளைகளில் விடுவோம்.

பழைய மாணவன் வந்து மகிழச்சியாகக் கதைத்தான். தன்னால் அந்தக் காணியை வாங்கித்தர முடியுமென்றான். அவனது கதைகளை நான் நம்பிவிட்டேன். அவனுடன் கற்றவர்கள் பலர் பெரும்பெரும் தொழில்களில் இருந்தனர். அவர்களும் உதவுவார்கள் என்றான்.

எமது பாடசாலையின் விளையாட்டுப் போட்டியை அருகில் உள்ள பெரிய பாடசாலை ஒன்றில் நடத்தி வந்தோம். அதன் அதிபர் எமக்கு ஆதரவு தருவதில்லை. அதனால் நாம் கோயில் வீதியிலும், ஒழுங்கையிலும், விளையாட்டுப்போட்டியை நடத்தி வந்தோம். அதனால் சிவனின் மைந்தன் தான் அக்காணியை வாங்கித்தர வந்திருக்கிறான் என நினைத்தேன்.

ஆசிரியரான திரு. இ. கிருஷ்ணகுமார், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரான திரு. சி. அழகானந்தன் ஆகியோரின் பெரு முயற்சியால் 1991ஆம் ஆண்டு பெற்றோரிடம் சேர்க்கப்பட்ட பணம் காணி வாங்குவதற்காக வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது. அந்த நிதி 2004ஆம் ஆண்டில்

இரண்டு இலட்சம் ரூபாவானது. அதை வங்கியில் இருந்து மீளஎடுத்து அக்காணிக்கு முற்பணம் வழங்கும்படியும், தான் ஐந்துலட்சம் ரூபா அனுப்புவதாகவும் அந்தப் பழைய மாணவன் கூறினான். அவன் இரண்டு லட்சம் ரூபா தந்தாலே போதும் என்ற நினைப்பில் அக்காணியை வாங்கத் தீர்மானித்தேன்.

காணியின் உரிமையாளரான ஆசிரியர் கனடாவில் இருந்தார். அவர் அக்காணியை விற்கும் உரிமையை அதிபர் ஒருவருக்குக் கொடுத்திருந்தார். பலர் அந்தப் பெறுமதி மிக்க காணியை வாங்கப் போட்டிபோட்டனர். ஆனால் எனது செயல்கள் அக்காணியை விற்கமுடியாது செய்தன.

காணியை வாங்கினோம். மிகுதிப்பணத்தை ஆறு மாதத்துள் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்தோம். ஆறு மாதங்கள் கழிந்த போது காணியை விற்றவர் காசைத்தரும்படி நெருக்கினார். ஒப்புக்கொண்டவன் காசு அனுப்பவில்லை. அவனுடன் தொடர்பு கூடக் கொள்ள முடியவில்லை. காணிக்காரர் நீதிமன்றம் சென்றார். இதைவிட அக்காணியில் ஒருவர் குடியிருந்து தொல்லைகள் கொடுத்துக்கொண்டிருந்தார்.

கனடாவில் இருக்கும் கோப்பாய் சங்கத்தினர் அறுபதினாயிரம் ரூபா அனுப்பினார்கள். எமது பாடசாலையில் கற்பித்த திரு.இ.மதியழகன் என்ற ஆசிரியர் இருபத்தையாயிரம் ரூபா தந்தார். மிகுதி பணத்தை வேறு சிலரிடம் பெற்றுக் கொண்டேன்.

பணம் கட்டச் சில மாதங்களாயின. வட்டிப்பணமும், நீதிமன்றச் செலவுப் பணத்தையும் கட்டும்படி நீதிபதி கட்டளையிட்டார். எனது சொந்தப் பணத்தில் கட்டினேன். அக்காணியைத் தனது காணியென வாதிட்ட பெண்ணை நீதிபதி எச்சரித்தார்.

நான் செலவு செய்த பணத்தை இன்றுவரை தருவாரில்லை.

அதிபர் தொழில் மிகவும் சிரமமானது; பொறுப்பு மிக்கது; வாளில் நடப்பது போன்ற ஆபத்துக்கள் நிறைந்தது. யாழ் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் முன்னேறாமைக்குக் காரணம் பொருளாதாரமே.

சமூகத்தில் உள்ளவர்கள் நல்லவற்றையும் செய்ய மாட்டார்கள், நல்லவற்றைச் செய்பவர்களைச் செய்யவும் விடமாட்டார்கள். உதவுவதாகக் கூறிய மாணவனைப் பணம் அனுப்பக்கூடாது என்று மறித்தவர்கள் பாடசாலையோடு தொடர்புள்ளவர்கள் என்று நான் பின்பு அறிந்துகொண்டேன்.

சிலர் தாம் உதவாவிட்டாலும் தமது உறவினர்கள், நண்பர்களிடம் உதவி பெற்றுத் தருவார்கள். அந்த வகையில் பழைய மாணவியான செல்வி புனிதவதி முத்துக்குமாரசாமி தமது உறவினரும் பாடசாலையின் பழைய மாணவருமான பேராசிரியர் கனகநாயகம் சூரியகுமார் அவர்களிடம் இரண்டு இலட்சம் ரூபா பெற்றுத் தந்தார். அந்த நிதி வைப்பிலிடப்பட்டு வருடா வருடம் அவரது பிறந்த தினமான தைமாதம் 19ஆம் திகதி பரிசுத்தினமாகக் கொண்டாடப்படுகிறது.

லயன் பிரான்சிஸ் அன்ரன் சில்வெஸ்ரர், வைத்தியக் கலாநிதி லயன் வை. தியாகராசா அவர்களின் பெரு முயற்சியால் லயன் கவர்னர் எஸ். சிவானந்தன் அவர்கள் பாடசாலைக்கு இரண்டு லட்சம் ரூபா பணம் தந்தார். அதன் மூலம் 300 அடி மதில் கட்டப்பட்டது. அதனால் மழை நீர் உட்புகுவது தடுக்கப்பட்டது.

அதிபர்கள் மிகமிகக் கவனமாக இருந்தாலும், அரிய பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தாலும், கற்பித்தலில்

கூடுதலான அக்கறை செலுத்தினாலும், எல்லோரையும் மதித்து நடந்தாலும் அதில் பொறாமைப்படுவோர் பலர். பேரும் புகழும் தமக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக அதிகாரிகளிடம் தவறாகக் கூறுவோர் பலர் பாடசாலைச் சமூகத்தில் உள்ளனர். இவர்கள் மறைமுகமாகவே செயற்படுவர். இவர்களைக் கண்டு பிடிக்கமுடியாது. அதற்காக அதிபர்கள் சோர்வடையவோ, மனத்தாக்கங்கொள்ளவோ கூடாது. துணிந்து செயலில் இறங்க வேண்டும். சலசலப்புக்களுக்கு அஞ்சுபவர்கள் இரவில் பயணம் செய்யக் கூடப் பயப்படுவார்கள். காற்றுக்கு இலை சரசரத்தால் பேய் பிசாசு என்று நினைப்பார்கள்.

என்னைப் பொறுத்தவரை நான் பயப்படுவதே இல்லை. எனது குலதெய்வமான வெள்ளெருவைப் பிள்ளையாரையும் நான் பாடசாலையில் பிரதிஷ்டை செய்த நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதியையும் பிரார்த்தித்து, அவர்களிடம் பொறுப்புக்கள் யாவற்றையும் கையளித்துவிட்டுத் துணிவுடனும், மகிழ்வுடனும் செயலாற்றுவேன். அவை எப்பொழுதும் வெற்றியையே தேடித்தரும்.

அதிபர்கள் எல்லோருடனும் அன்புடன் பழகினால் பாடசாலையின் கல்வித்தரம் உயரும், வசதிகள் பெருகும் என்பதற்குக் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் சான்றாகத் திகழ்ந்தது.

அதிகாரிகள் அன்போடு பழகினால் பாடசாலைகளின் கல்வித்தரம் உயரும். பெறுபேறுகள் சாதனைகளை நிலை நாட்டும் என்பதற்கு நல்லூர்க் கல்விக் கோட்டம் சான்றாக விளங்குகிறது.

ஆசிரியர்களும், ஊழியர்களும் பொருத்தமானவர்களாக வந்தமையமாட்டார்கள். தம்முடன் இருப்பவர்களைத் தமக்குப்

பொருத்தமானவர்களாக்கிக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு வருடைய பொறுப்பினையும் நன்கு ஆராய்ந்து, பொருத்தமான காலத்தில் அப்பொறுப்பைக் கொடுத்து, அவரை ஊக்குவித்து, முயற்சியுள்ளவராக்குதல் வேண்டும். பொறுப்பைக் கொடுத்த பின்பு மேற்பார்வை செய்தல் வேண்டும். அவரின் மனநிலையைப் புரிந்து கொள்ளல் வேண்டும். கொடுத்த வேலையை அவர் முடிப்பார் என்று தெரிந்தால் அவரை உற்சாகப்படுத்தல் வேண்டும். முடிக்கமுடியாது அவதிப்பட்டால் பொருத்தமானவரை உதவிக்குச் சேர்த்துவிடல் வேண்டும். இல்லாவிட்டால் அதிபர் உதவவேண்டும்.

பொறுப்புக்களைக் கொடுத்த பின்பு கொடுத்தவன் நல்லமுறையில் செய்வானா? செய்யமாட்டானா? எனச்சந்தேகம் கொள்ளக்கூடாது. கொடுத்த பொறுப்பை அவன் சரியாகச் செய்கின்றானா என மேற்பார்வை செய்தல் வேண்டும். அதுவும் அவன் சந்தேகப்படமுடியாதவாறு செய்தல் வேண்டும். அவன் தனது வல்லமை முழுவதையும் திரட்டி மிகவும் நுட்பமாகத் தனக்கு ஒப்படைக்கப்பட்ட வேலைகளைச் செய்தாலும் பொறாமை உள்ளோர் அவனைக் கெடுப்பதற்காகத் தவறாக எதையும் சொல்வார்கள். சொல்பவர்களுக்கு எதுவும் சொல்லாமல் அவை உண்மையானவையா எனக் கண்காணித்து அறிந்து கொள்வதே சிறந்த அதிபரின் பணி. பொறுப்புக் கொடுத்தவனுடன் மனம் விட்டு எதுவும் பேசலாம். மற்றவர்களுடன் அதுபற்றிக் கதைக்கும் போது கவனமாகக் கதைத்தல் வேண்டும். சொற்கள் வலிமை மிக்கவை. மயக்கத்தை உண்டுபண்ணுபவை. அதனால் சில சமயம் சொற்களின் அர்த்தம் மாறுபாடுடையதாக இருக்கும். எனவே அவதானமாகக் கதைத்தல் வேண்டும்.

யார் எதைச் சொன்னாலும் அவதானமாகச் கேட்டுக் கொள்ளல் வேண்டும். உபஅதிபர் ஓர் ஆசிரியரைப் பற்றி பலவற்றைக் கூறுவார். அவருக்கு அந்த உரிமை உள்ளது. அதற்காகக் கேட்கவேண்டும், நடவடிக்கை எடுக்கக் கூடாது. நன்கு ஆராய்ந்த பின்பு அதில் உண்மை இருப்பின் சம்பந்தப்பட்ட ஆசிரியரை அழைத்துத் தனிமையில் கூற வேண்டும். எப்பொழுதும் குறைகளையும் குற்றங்களையும் நேரில் கூறுதல் வேண்டும். பொறுப்பானவர்களுக்குக் கூட அது பற்றிக் கூறாது பொருத்தமான வார்த்தைகளைக் கூறிச் சமாளித்தல் வேண்டும்.

அடுத்தவர்களுக்குக் கூறினால் கூறியவற்றை விட அது பத்துமடங்காகிவிடும். அதனால் நான் எதையும் உள்ளபடி நேரே கூறிவிடும் வழக்கத்தைக் கடைப்பிடித்து வருகிறேன். இது பெரும் துன்பங்களையும், சிக்கல்களையும் உடனே கொண்டுவரும். ஆனால் காலப்போக்கில் அது பெரும் நன்மையாக அமையும்.

ஓர் அதிபர் பாடசாலையின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை இல்லாதவராகவும், பெரும் வேலைத்திட்டங்களைச் செய்யாதவராகவும் இருந்தால் அவரின் வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்ய ஆசிரியர்கள் விரும்புவார்கள். அது தவறல்ல. ஒருவரைப்பற்றிப் புறங்கூறுவது தான் தவறு. ஆதனால் பாடசாலை அழிந்துவிடும். எனவே அதிபர்கள் நேரில் எதையும் பேசவேண்டும். இன்னொருவரிடம் சொன்னால் அவர் சொல்வார் என்று நினைத்தால் அது பல தீமைகளுக்குக் காரணமாகிவிடும்.

எனது உயர் அதிகாரிக்கு என்னைப் பற்றி அவதூறாக ஒருவர் அடிக்கடி மொட்டைக்கடிதம் எழுதி வந்தார். ஒருமுறை

‘கௌரி’ என்ற பெயரில் ஒரு மொட்டைக்கடிதம் வந்தது. உயர் அதிகாரி என்னை அழைத்து அந்த மொட்டைக் கடிதத்தைத் தந்தார். அதைப்படித்தேன். எழுதியவர் எனக்கு மிகமிக நெருக்கமானவர். என்னிடம் பல உதவிகளைப் பெற்றவர். நான் அவரின் பெயரைக் கூறினேன். அவரது கடிதங்கள் பல கல்வித்திணைக்களத்தில் இருந்தன. அதனால் அது உறுதி செய்யப்பட்டது.

இன்னொருநாள் ஒரு போட்டி நிகழ்விற்கு ஓர் அதிபரை நடுவராக அழைத்தேன். இரண்டு நாட்களின் பின் பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு மொட்டைக் கடிதம் வந்தது. அந்த உயர்அதிகாரி அதையும் என்னிடம் தந்தார். அன்று நடந்து போட்டி பற்றிய விமர்சனமாக அது இருந்தது. மூன்று பேர் நடுவர்களாகப் பணிபுரிந்தனர். ஒருவர் நான். மற்றவரைப் பற்றித்தான் புகார். நடுவராக வந்தவர் எனது நண்பருக்கு யாவற்றையும் கூற அவர் எழுதியிருந்தார்.

தீய செயல்களைச் செய்தால் தீமை வரும். நல்லவற்றைச் செய்யும் போது அது தீயது என்று எழுதினால் அது பெரும் நன்மைகள் பலவற்றைக் கொடுக்கும். அந்த மொட்டைக்கடிதங்கள் எனக்குப் பல நன்மைகளையும், உயர்ச்சிகளையும், பெருமதிப்பையும் உண்டாக்கின. அதனால் எழுதியவரைச் சந்தித்து வாழ்த்தினேன். இப்பொழுதும் அவருடன் சிரித்துக் கதைத்து வருகிறேன். எறிபக்த நாயனார் கற்களால் எறிந்து சிவனைப் பூசித்தார். அவர் எறியும் கற்கள் பூக்களாகவே சிவனில் விழுந்தன. இக்கதை எனது வரலாற்றில் பல இடங்களில் வந்து போய்க்கொண்டிருக்கின்றது.

நன்மை தரும் செயல்களைச் செய்தாலும் பலர் அதைக் குறைகூறுவார்கள். நல்ல செயல்கள் பலவற்றைச் செய்து பாடசாலையை உயர்த்திய அதிபர்களைக் கூட மேலதிகாரிகள் கூறை கூறியதை நான் அறிவேன்.

கோப்பாயில் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் தான் கூடியளவு மாணவர்கள் வருடா வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவார்கள். பரீட்சை வெட்டுப்புள்ளிக்கு இரண்டு மூன்று புள்ளிகள் குறைவாக 15 – 20 மாணவர்கள் எடுப்பார்கள். இவர்களைப் பட்டணப் பாடசாலைகள் போட்டி போட்டு அனுமதி அளிக்கும். இதனால் கோப்பாயில் உள்ள பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் செல்வது குறைவு. இதனால் உயர்அதிகாரி ஒருவர், ‘‘குணசேகரம் ஊர்ப்பாடசாலைகளைப் படிப்படியாக மூடுகின்ற வேலைதான் செய்கிறார்’’ என்று கூறுவார்.

பற்றுக்களைத் துறந்து யாருக்கும் பாரமாக இராத ஞானிகள், தவசிகள், சிவனடியார்கள் மீதும் பலர் குறைப்பட்டுக் கொள்வது சாதாரண நிகழ்வு.

இதைவிட கடவுள்களையும் பலர் குறைகூறுவதுண்டு; ‘‘நான் தினமும் கோயிலுக்குச் செல்கிறேன், தொண்டு துரவு செய்கிறேன், விரதங்கள் அனுஷ்டிக்கிறேன். ஆனால் கண் கெட்ட கடவுள் எனக்குக் கஷ்டங்களைத் தருகிறார். கோயிலுக்குச் செல்லாத பலருக்கு அள்ளிக்கொடுக்கிறார்’’ என்று பலர் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

கடவுளுக்கே இந்தநிலை என்றால் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சொல்லவேண்டியதில்லை. அதனால் யார் எதைச்சொன்னாலும் அதைக்கவனத்திற்கொள்ளாது அதிபர்களும்

ஆசிரியர்களும் தமக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்தல் வேண்டும். பொதுவாக மேலதிகாரிகள் பாராட்டுவது குறைவு. அவர்கள் பாராட்ட வேண்டுமென்று எண்ணாது மாணவர்களும் பெற்றோர்களும் மனம் மகிழவேண்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

சமூகத்தில் மிகப்பெரிய மனிதர்கள் இருப்பார்கள். அவர்களை அழைத்து மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல் வேண்டும். இதனால் பல்வேறுபட்ட நலன்கள் பாடசாலைக்குக் கிடைக்கும். அதிகாரிகள் சிலகாலம் தான் கடமை புரிவார்கள். அத்துடன் அவர்கள் செல்லும் பாடசாலைகளுக்கெல்லாம் நிதியுதவி செய்யமுடியாது. எனக்குத் தெரிந்த அதிபர் ஒரு பெரியவரைப் பாடசாலைக்குப் பிரதமவிருந்தினராக அழைத்தார். அவர் பெரும் நிதியை அப்பாடசாலைக்குக் கொடுத்தார். பின்பு வெளிநாட்டிலுள்ள தமது பிள்ளைகளுக்கு அப்பாடசாலைக்கு நிதியுதவி செய்யுமாறு எழுதினார்.

சிலவருடங்களின் பின் அவர் தமது மக்களைப் பார்ப்பதற்காக வெளிநாட்டிற்குச் சென்றார். அங்கு உள்ள பழைய மாணவர்களிடமும் நலன்விரும்பிகளிடமும் பெருந் தொகைப் பணத்தைப் பெற்றுவந்து பாடசாலைக்குக் கொடுத்தார்.

இதைவிடப்ப பழைய மாணவர்கள் ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்தனர். சிலர் எதுவும் கொடுக்க மாட்டார்கள். இருப்பினும் சமூகத்திலுள்ள பெரியவர்களை மதிக்கும் பண்பை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டுமானால் அதற்குச் சிறந்தவழி அது.

சில மேலதிகாரிகள் அதிபர்களுடன் முரண்படுவார்கள். இதற்குக் காரணம் என்னவென்று யாருக்குந் தெரியாது.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு நான் 01.10.1989இல் அதிபராக நியமிக்கப்பட்டேன். அங்கு குடிநீர் வசதி இருக்கவில்லை. அதனால் நான் நீர்த்தாங்கி ஒன்றை அமைப்பதற்காக அத்திபாரமிட்டேன். ஆனால் 01.02.1990 இல் ஆசிரியராக நான் கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு இடம் மாற்றப்பட்டேன். இது ஏன் நடந்தது என்று இதுவரை எனக்குத் தெரியாது. பின் 01.02.1991இல் மீண்டும் அதிபராக நியமிக்கப்பட்டேன். அன்றிலிருந்து 28.10.2005ஆம் ஆண்டு வரை பாடசாலைக்கெனத் தளபாடங்கள் ஒன்றுகூட வழங்கப்பட வில்லை. கட்டிடங்கள் தரப்படவில்லை. 600இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் மாவட்டத்திலே முதல்நிலையில் இருக்கும் பாடசாலைக்கு எதுவும் வழங்கப்படாதது எனக்குக் கவலையை அளித்துக் கொண்டே இருக்கிறது.

குறைந்தளவு மாணவர்கள் உள்ள பாடசாலைகளுக்கும், தொடர்ந்து கட்டிடங்கள் கொடுக்கும் பாடசாலைகளுக்கும் கட்டிடங்கள் கொடுக்கப்படுகின்றன. இதனால் நான் மனம் வருந்திய போதும் மாணவர்களுக்கான வசதிகளை வேறு இடங்களிலிருந்து பெற்றுக் கொடுத்தேன். இன்றும் 1872ஆம் ஆண்டில் ஆறுமுகநாவலரால் அமைக்கப்பட்ட சுண்ணாம்புக் கட்டிடத்திலேயே மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருக் கின்றனர். அக்கட்டிடங்கள் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளன. பலமுறை அதன் படங்கள் பத்திரிகைகளில் வந்தும் கூட யாரும் கவனிக்கவில்லை. அக்கட்டிடம் கட்டும் பொறுப்பை நான் வெள்ளெருவை விநாயகரிடம் கொடுத்துள்ளேன்.

மேலதிகாரிகள் எப்பொழுதும் நடுவுநிலைமையுடன் பணியாற்ற வேண்டும். தேவையறிந்து உதவும் பண்புள்ளவராக இருத்தல் வேண்டும். தமக்கு வேண்டியவர்கள் என்பதற்காகத்

தேவையில்லாத பாடசாலைகளுக்கு வளங்களை அளவுக்கதிகமாகக் கொடுக்கக்கூடாது. சில மேலதிகாரிகள் தாம் கற்ற பாடசாலை, தமது ஊர்ப் பாடசாலை என்று கூறி உதவி செய்வார்கள். நட்பு, செல்வாக்கு, வேறு காரணங்களுக்காகவும் உதவி செய்வார்கள்.

சில மேலதிகாரிகள் தான் கற்ற பாடசாலைக்கு, தனது ஊர்ப்பாடசாலைக்கு உதவி செய்யவேமாட்டார்கள். அதற்குக் காரணம்,அங்கு பணியாற்றும் அதிபர்களுடனும், அக்கிராமத்தில் வாழும் பெரியவர்களுடனும் தேவையில்லாத முரண்பாடுகள் உண்டானமை காரணமாக இருக்கும். கல்வி மாணவனுக்கு என்பதைக் கற்றவர்களால் கூட உணர்ந்துகொள்ள முடிவதில்லை. குடும்பப் பகை; ஆசிரியருடன் பகை; அதிபருடன் முரண்பாடு; இவற்றிற்காகப் பாடசாலைகளைப் பழிவாங்கக்கூடாது. அத்துடன் தன்னை மதிக்கவில்லை; தன்னைக் கனம் பண்ணவில்லை; தன் எண்ணப்படி நடப்பதில்லை. என்பதற்காகப் பாடசாலைகளைப் பழிவாங்கக் கூடாது. மேலதிகாரிகளாக் கடமை புரிவோர் தாம் செய்யும் செயல்களை நன்கு ஆராய்வு செய்தல் வேண்டும். தானே முடிபுகளை எடுத்தல் வேண்டும். நண்பர்களை, குடும்பத்தவர்களை, ஊரவர்களை முடிவெடுக்க விடக்கூடாது. இதனால் தான் ஊரவர் மேலதிகாரியாக வரும்போது ஊரில் தேவையில்லாது கட்டிடங்கள் குவிகின்றன; தேவைக்கேற்ப கட்டிடங்கள் கட்டப்படாது விடப்படுகிறது.

பாடசாலைகளில் கற்று, பல்கலைக்கழகங்களில் கற்று, பதவி உயர்வுகளுக்காகப் பலவும் கற்று, தொழில் தேர்ச்சிக்காகக் கற்று, இப்படிப் பலவற்றைக் கற்றவர்கள் மனித நேயத்துடனும், சமமான நோக்குடனும், உயர்வு தாழ்வு பாராது,

குற்றம் குறை காணாது தேவையறிந்து சேவை செய்தல் வேண்டும்.

இது போலவே ஆசிரிய இடமாற்றங்களும் செய்யப்படல் வேண்டும். சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் சில பாடங்களுக்கு வருடக்கணக்காக இல்லை. ஆனால் பலபாடசாலைகளில் அதே பாட ஆசிரியர்கள் தேவைக்கதிகமாகக் கடமை செய்கின்றனர். ஒரு விஞ்ஞான ஆசிரியை தேவையான பாடசாலைக்கு நான்கு விஞ்ஞான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். மூன்று விஞ்ஞான ஆசிரியர்கள் தேவையான பாடசாலையில் ஒருவர், சிலசமயம் ஒருவர் கூட இல்லை. இது மேலதிகாரிகளின் கவனயீனத்தால் உண்டானதல்ல. அவர்களின் செல்வாக்கு, உறவு முறை போன்றவற்றால் உண்டானது.

நான் யாரையாவது குற்றம் காணவோ அல்லது வேண்டும் என்றோ எழுதவில்லை. எனது சேவைக்காலத்தில் கண்டு துயரப்பட்ட விடயங்கள் இனிமேலும் நடக்கக் கூடாது என்பதற்காக எழுதுகிறேன். இது பற்றி யாரும் குறைபடக்கூடாது. திருக்குறள், பகவத்கீதை என்பவற்றைப் படித்துச் சில புதுக்கருத்துக்களைச் சொன்னது போல எனது சேவைக்காலத்தில் நடந்தவற்றைக் கூறியுள்ளேன். தவறுகள் நடப்பது இயல்பு. அதைத் திருத்திக்கொள்வது பெருமைக்குரியது.

சிலபாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கும் போது பழைய மாணவர்களைத் தான் நியமிக்கப்படவேண்டும் என்று சட்ட விதிகள் அமைத்திருக்கிறார்கள். அப்படியாயின் ஏனைய பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடமேற்படும் போதும் அதைக் கைக்கொள்ளல் வேண்டும். சில வேளைகளில்

பழைய மாணவன் தான் அதிபராக நியமிக்கப்படவேண்டும் என்பதற்காகப் பொருத்தம் இல்லாதவர்களை நியமித்து விடுகிறார்கள். அதனால் அப்பாடசாலை பெரும் குழப்பத்துக்கு உள்ளாகிறது.

அடுத்துப் பழைய மாணவனுக்கு அதிபர் பதவி கொடுக்கக் கூடாது என்பதற்காக வேறு எவரையோ நியமிக்கப்படுவதும் உண்டு. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன எப்பொழுதும் நேர்மையாக நடந்து கொள்வதில்லை. பழைய மாணவர்களுக்கிடையே போட்டி, பொறாமை உண்டு. இதனால் நல்ல தரமான பழைய மாணவர்களை விட்டுவிட்டு தகுதியில்லாத மற்றவரை நியமிப்பதும் உண்டு. இதனால் கெட்டழிந்த பாடசாலைகள் பல.

சிலபாடசாலைகளில் மேலதிகாரிகள், மேலதிகாரிகளின் உறவினர்கள், மேலதிகாரியின் நண்பர்கள் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களாக இருப்பார்கள். அதனால் எப்பொழுதும் அவர்களது கைஓங்கியே இருக்கும். இவர்கள் சிபார்சுகளைச் செய்யும் போது தமக்குள்ள உறவுகளையும், சாதி சமயங்களையும், முரண்பாடுகளையும் கவனிப்பார்களே தவிர நீதி நேர்மையைக் கவனிக்க மாட்டார்கள். இதனால் மேலதிகாரிகள் மிகுந்த பொறுப்புடனும், நம்பிக்கையுடனும் நடந்து கொள்ளல் வேண்டும்.

இவை யாரையும் குறிப்பிட்டு நான் எழுதவில்லை. மாவட்டத்தில் உள்ள நிலைமைகளை எனது சேவைக்காலத்தில் ஆராய்ந்தமையால் கண்டுபிடித்து எழுதுகிறேன்.

கல்வியைப் பற்றி, மாணவர்களது நிலையைப் பற்றி, கல்வி போதிக்கும் முறைகளைப் பற்றி, மாணவர்களின்

கல்வியை மேம்படுத்துவது பற்றி, பாடசாலைக்கு வளங்களைப் பெறுவது பற்றிச் சொல்லலாம். ஆராய்வு செய்து வெற்றியும் பெற்றுள்ளேன். சிலர் ஆய்வுகள் செய்வர். புதிய கருத்துக்கள் பலவற்றைக் கூறுவார். ஆனால் அவற்றை நடைமுறைப் படுத்துவதில்லை. நான் நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டுள்ளமையைக் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திலும், நல்லூர் கல்விக் கோட்டத்திலும் கண்டு கொள்ளலாம்.

கல்வியறிவும், அதிகார மிடுக்கும், சட்டதிட்டங்களைப் பாவிப்பதும் தான் கல்வி அல்ல. அன்பும், பண்பும், கருணையும், நற்குணங்களும் தான் கல்வியை மேம்படுத்தும் என்பதைக் கல்வித்துறை சார்ந்த அனைவரும் புரிந்து கொண்டால் கல்வி மேம்படும். இதை எந்தக் கல்வியாளரோ, உளவியலாளரோ மறுத்துரைத்ததில்லை.

பல விடயங்களில் மேலதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் அதிபர்களுக்குப் பிரச்சினைகள், முரண்பாடுகள், கைகலப்புக்கள் கூட ஏற்படலாம். அப்படி ஏற்பட்டால் இயன்ற வரையில் சமாதானமாக அப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முயலவேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் நீதியீனமான முறைகளில் ஈடபடக்கூடாது. வன்முறைகளைத் தூண்டக் கூடாது. மாணவர்களை ஏவிவிடக்கூடாது. இயன்றவரை மௌனமாக இருப்பது நன்று.

முரண்படும் மேலதிகாரி பதவியுயர்வுடன் இடமாற்றம் பெறுவார், அவரது முரட்டுத்தனத்தால் சில சமயம் அவர் தனது மேலதிகாரிகளால் தண்டிக்கப்படுவர். அதிபர், ஆசிரியர்களுடன் பிரச்சினைப்பட்டால், அவர் சமாதானத்திற்கு உடன்படாவிட்டால் அவரது போக்கில் விட்டுவிடாது

மேலதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும். அவர் இடமாற்றம் கேட்டால் அதற்கு உதவி செய்ய வேண்டும். பெற்றோரோடு முரண்பட்டால் அவர்கள் தமது பிள்ளைகளின் விடுகைப்பத்திரத்தைக் கேட்பார்கள். அவர்களுக்கு உண்மையான நிலைமையை எடுத்துக் கூறவேண்டும். அவர்கள் அதை ஏற்காவிட்டால் அவர்களது விடுகைப் பத்திரத்தை தாமதம் செய்யாது கொடுக்க வேண்டும்.

பலருக்கு ஊரில் உள்ள பாடசாலைகளின் சிறப்புக்கள் தெரியாது. பெற்றோர் தமது பிள்ளைகளைக் கற்பிக்க விரும்பும் பாடசாலையில் கற்பிக்க அவர்களுக்கு முழுமையான உரிமை உண்டு. கோப்பாயில் உள்ள நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அனுமதி பெறவிரும்பாத எந்தப் பெற்றாரையும் நான் வற்புறுத்தியதில்லை. நான் பாடசாலையில் கற்கும் மாணவர்களில் பெரும்பான்மையானவர்களிடம் வசதிக்கட்டணம் கூடப்பெறுவதில்லை. அனுமதிகளுக்கும் கட்டணம் பெறுவதில்லை. அபிவிருத்திக்கும் பணம் கேட்டதில்லை. யாராவது தாமாக முன்வந்து தந்தால் மட்டும் பெற்றுக்கொள்வேன். அப்படிக் கற்ற பலர் பெரும் பெரும் பதவிகளில் இருக்கிறார்கள்.

ஐந்து வயது நிரம்பிய பச்சைப் பாலனை அதிகாலையில் துயிலெழுப்பி உணவு கொடுத்து பத்து மைல் களுக்கு அப்பால் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதால் அவர்களது மனநலமும், உடல்நலமும் பாதிப்படையும். பட்டணத்தில் உள்ள பாடசாலைகளில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் அரசபரீட்சை எழுதினால் 50 – 75 வரையான மாணவர்களே சித்தியடைகிறார்கள். பிரபல பாடசாலைகளில்

பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களில் பலர் ஏ.ஏல்லில் ஒரு பாடம் கூடச் சித்தியடைவதில்லை. பாடசாலைகள் கற்றலுக்கு உதவுமே தவிரக் கற்காது. மாணவன் ஊக்கத்துடன் கற்கவேண்டும். பெற்றோர் அக்கறையுடனும் கவனத்துடனும் தமது பிள்ளைகளுக்கு உதவுதல் வேண்டும்.

தற்பொழுது பாடசாலைகள் தொடங்கு முன்பும், பாடசாலைகள் விட்ட பின்பும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்கள் செல்கின்றனர். இதனால் அறிவு கூடியதாகத் தெரியவில்லை; கல்வியின் தரம் உயர்ந்ததாகத் தெரியவில்லை. வருடா வருடம் நடைபெறும் பரீட்சைப் புள்ளிகளின் தொகுப்பு நூல்கள் இவற்றைக் காட்சிப் படுத்துகினறன.

முயற்சியும், பயிற்சியும் தான் கல்வியை வளர்க்கும். மாணவர்கள் முயற்சியுடையவர்களாகவும், பயிற்சியுடைய-வர்களாகவும் மாற ஆசிரியர்களும், பெற்றோர்களும், அதிபரும் உதவவேண்டும். பாடத்தை மாணவன் விளங்கிக் கொள்ள முயற்சியும் பயிற்சியும் உதவும் என்பதை முதலில் அவனுடன் சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும். குறிப்பாகப் பெற்றோர் உணரவேண்டும். விளங்காத பகுதியைவிட்டுவிட்டு அதற்குமேல் கற்பதால் எந்தப் பயனும் வராது. மாணவர்கள் விளங்கிக் கொள்ளாத பாடப்பகுதி எதுவென இனங்கண்டு அதை அவன் புரிந்து கொள்ளும் வகையில் கற்பிக்கத் தவறுவதால் தான் பரீட்சையில் அவன் சித்தியடையத் தவறுகிறான். அந்தந்த வகுப்பின் தரத்திற்கேற்ப மாணவர்கள் இல்லாமையால் தான் அடுத்த வகுப்பில் அவர்கள் பின்தள்ளப் படுகிறார்கள். இவர்கள் தொடர்ந்து வகுப்பேற்றப்படுவதால் ழு.ஃ.டு இல் அவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையத் தவறுகிறார்கள்.

கணித பாடத்தில் மிகக் குறைந்த தரத்தில் இருந்த மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தரம் ஒன்றிலிருந்து கணிதத்தைக் கற்பித்து, அவர்களை உயர்தரப் பரீட்சையில் சித்தியடைய வைத்திருக்கிறார்கள். அதனால் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களது அறிவின் தரத்தை அறிந்த பின்பே கற்பித்தல் வேண்டும்.

பாடசாலையில் பல விழாக்கள் வரும். சில அதிபர்கள் விழாக்களை மிகவும் ஆடம்பரமாகக் கொண்டாடுவார்கள். மேலதிகாரிகள், உயர்ந்த பதவிகளில் உள்ளோர், பிரமுகர்கள், செல்வாக்குள்ளவர்களை அழைத்துப் பொன்னாடைகள் போர்த்திக் கௌரவிப்பார்கள். இதன் மூலம் பல நன்மைகளை எதிர்பார்ப்பார்கள். தாம் நினைத்தவற்றைச் சாதிப்பார்கள். அதைவிடக் கௌரவத்தைப் பெற்றோர் தமது புகழ் பரவியமைக்காகச் சம்பந்தப்பட்ட அதிபர்களைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசிக்கொள்வார்கள். இதனால் அதிபர்களது செல்வாக்கு சமூகத்திலும் திணைக்களத்திலும் உயரும். அவர் பாடசாலையைக் கவனிக்காது விட்டாலும் பெரிதாக அதிபர் புகழப்படுவார். விருதுகள், சிறந்த அதிபர் என்ற புகழ் யாவும் அவருக்குக் கிடைக்கும். அத்துடன் ஆசிரியர்களும் சமூகத்தில் உள்ளோரும் அவரது குறை நிறைகளைக் கூறப்பயப்படுவார்கள்.

சில அதிபர்கள் கற்றலில் தான் அக்கறை செலுத்துவார்கள். விழாக்களை நல்ல முறையில் கொண்டாட மாட்டார்கள். இத்தகைய அதிபர்களை மேலதிகாரிகளும், சமூகத்தில் உள்ள உயர்ந்தவர்களும் கவனத்தில்கொள்ள மாட்டார்கள். இவர்களது கடமையின் பயன் மாணவர்கள் மூலம் கிடைக்கும்.

எனக்குத் தெரிந்த ஓர் அதிபர் மேலதிகாரிகளையும் பெரியவர்களையும் அழைத்துப் பெரும் பெரும் விழாக்கள் எடுத்தும், பெரும் பெரும் விருந்துகள் வைத்தும் கௌரவிப்பார். அதனால் அவர் மிகச் சிறந்த அதிபர் என்ற பாராட்டைப் பெற்றார்.

அவர் இளைப்பாறிய பின் ஒரு கூட்டத்திற்கு அவரை விருந்தினராக அழைத்திருந்தனர். வந்த பிரமுகர்கள் எல்லோரும் அவரைப் புகழ்ந்து கொண்டிருந்தனர். அப்போது கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து; ''இவர் உங்களைக் கௌரவித்ததைத் தவிர வேறு எதைச் செய்தார் என்று பேசுங்கள். இவரது பதவிக்காலத்தில் எத்தனை பேர் சித்தியடைந்தனர் என்று பேசுங்கள். இவர் கற்பித்து உயர்பதவியில் இருப்பவர்களைப் பற்றிப் பேசுங்கள்'' என்று கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

அதன் பின் பேசிய எவரும் அவரைப் பற்றிப் பேசவில்லை. விழாக்களுக்கு அழைக்கும் விருந்தினர்களால் பாடசாலைக்கு நன்மைகள் ஏற்பட வேண்டும். இதை விடுத்து அதிபர்கள் தமது நன்மைகளுக்காகவும், தமது பதவி உயர்வுக்காகவும் விழாக்களை நடத்தக் கூடாது. சில அதிபர்கள் தமது நன்மைக்காக விழாக்களை உருவாக்கு-கிறார்கள்.

இது தவிர அதிபரின் மேல் பலருக்குக் கோபதாபங்கள் இருக்கும். அதை வெளிக்காட்டிக்கொள்ள மாட்டார்கள். சிரித்துப் பேசுவார்கள். இரகசியமாக கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபடுவார்கள்.

நேருக்கு நேர் சிலர் குறைகூறுவார்கள், வாய்த் தர்க்கத்தில் ஈடுபடுவார்கள். இவர்களால் பெரும் தீமைகள்

உண்டாகமாட்டாது. ஆனால் நல்லவர்கள் போலத் தம்மைக் காட்டிக்கொண்டு வெளிப்படையாகத் தெரியாமல் நடித்துக் கொண்டிருக்கும் பகைவர்களுக்கு அஞ்சியே தீரவேண்டும். இவர்கள் உடனிருந்து, நம்பிக்கை உள்ளவர்கள் போல நடித்து, பலவீனங்களைத் தெரிந்து வைத்து, அதை மேலதிகாரிகளுக்குச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். இப்படியானவர்களுடன் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். இப்படியான பகைவர்களால் நல்ல நண்பர்களைக் கூட இழக்க வேண்டிய நிலை உருவாகும். இப்படியானவர்கள் அதிபருடன் நெருக்கமாகப் பழகுவது போலப் பழகுவார்கள். அதிபருக்கு வேண்டாதவர்களுடனும் நெருக்கமாகப் பழகுவார்கள். இரு பக்கத்தினரும் திருப்திப்படுமாறு நடந்துகொள்வார்கள்.

அதிபருக்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மேலதிகாரிகள் ஆகியோருடன் உட்பகை இருக்குமானால் அது அவரது தொழிலுக்கும் கேட்டை உண்டாக்கும். இவ் உட்பகை பாடசாலையையும் அதிபரையும் அழித்துவிடும்.

போத்தலும் மூடியும் போல வெளியே பார்ப்பதற்கு இறுக்கமான தொடர்புள்ளவர்கள் போல வேற்றுமைகள் பாராட்டாது சேர்ந்திருப்பது போல, உட்பகை உள்ளவர்கள் ஒன்றுபட்டவர்கள் போல இருப்பார்கள்; மகிழ்வுடன் பழகுவதாகக் காட்டிக்கொள்வார்கள். சந்தர்ப்பம் வரும்போது பழியைத் தீர்க்க முயல்வார்கள். உட்பகை வலிமையை அழிக்கும்; புகழை அழிக்கும்; முன்னேற்றத்தைத் தடுக்கும்; சமூகத்தவரை வெறுப்படையச் செய்யும். எனவே எள்ளின் பிளவைப் போலச் சிறிதளவு உட்பகை இருந்தாலும் அது காலப்போக்கில் பெருத்து பாடசாலையை அழிக்கக் கூடிய

பெருங்கேட்டை உண்டாக்கும். உட்பகை உள்ளவர்களுடன் சேர்ந்து வாழ்வது என்பது பாடசாலையில் பாம்புடன் சேர்ந்து வாழ்வதைப் போன்றது.

அதிபர் தான் கடமையாற்றும் பாடசாலைகளில் அனைவரோடும் மிகவும் அன்பாகப் பழகினாலும் உட்பகை கொண்டவரை இனங்கண்டு கொள்வது மிகமிகக் கடினமானது. இனங்காணாது எல்லோருக்கும் செய்யும் உதவிகளைப் போலச் செய்தாலும், இல்லாவிட்டால் இனங்கண்டு அந்தப் பகையை இல்லாதொழிப்பதற்காகப் பல உதவிகளைச் செய்தாலும் சம்பந்தப்பட்டவர்கள் திருந்தவே மாட்டார்கள்.

வளர்ச்சியடைந்துகொண்டிருக்கும் பாடசாலைகள், புகழ் பெற்ற பாடசாலைகள், சாதனைகளைச் செய்யும் பாடசாலைகளின் அதிபர்களுடன் மேலதிகாரிகள் முரண்பட்டால் மேலதிகாரிகள் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த மனப்பிளவுடையவர்களைக் கைக்குள் போட்டுக்கொள்வர். சிறு சிறு சலுகைகளையும் செய்வார்கள். பிளவுகளை உண்டாக்கப்பார்ப்பார்.

சாதியில் குறைந்தவர்கள் அதிபராக இருந்தால், தம்மைச் சாதிமானென நினைப்பவர்கள். அதிபரின் செயற்பாடுகளில் குற்றம் காண்பார்கள். அதிபர் நேர்மையுடனும், கடமை உணர்வுடனும், நிதானத்துடனும் செயற்பட்டால் அவர்கள் வெளிப்படையாக எதிர்க்காது மறைமுகமாகத் தொந்தரவுகள் கொடுப்பார்கள். எவ்வளவு தான் உதவிகள் செய்தாலும் இவர்களது மனம் திருப்திப்படாது.

ஒரு கோட்டத்தில் பல பாடசாலைகள் உண்டு. அதிபர்களின் திறமையால் சில பாடசாலைகள் பெரும் முன்னேற்றம் காணும். இதனால் பெற்றோர்

அந்தப்பாடசாலைகளில் முண்டியடித்துப் பிள்ளைகளைச் சேர்ப்பர். இது மற்றய அதிபர்களுக்குக் கோபத்தை உண்டாக்கும்.

தரமான பொருட்கள் உள்ள கடைகளில் தான் மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வார்கள். அதுபோல தரமான தென்று தாம் நினைக்கும் பாடசாலைகளில் தான் தமது பிள்ளைகளைப் பெற்றோர் சேர்ப்பார்கள். இது இயற்கை. இதை அதிபர்களும் ஆசிரியர்களும் தமது பிள்ளைகளின் விஷயத்தில் உணர்ந்து கொள்வார்களே தவிர மற்றவர்களின் பிள்ளைகளின் விடயத்தில் கடைசிவரையும் உணரமாட்டார்கள்.

தான் தான் சிறந்த ஆசிரியர், அதிபர் என்று நினைத்துத் தனது பாடசாலையில் எத்தனை ஆசிரியர்களும், அதிபர்களும் தமது பிள்ளைகளைச் சேர்த்திருக்கிறார்கள்?.

கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு நான் நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்ட போது சென்றேன். மயில்வாகனம் என்ற ஆசிரியர் தனது மூன்று பிள்ளைகளையும் தான் கற்பிக்கும் பாடசாலையில் தன்னை நம்பிச் சேர்த்திருந்தார். தரம் ஒன்றில் இருந்து ஐந்தாம் தரம் வரையுள்ள அப்பாடசாலையில் 50இற்கும் குறைவான மாணவர்கள் தான் கல்வி கற்றனர்.

அந்த ஆசிரியரின் நம்பிக்கை வீண்போகவில்லை. அவரது பிள்ளைகள் மூவரும், அவரின் சகோதரர்களின் பிள்ளைகளும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர். அந்தப் பின்தங்கிய பாடசாலையில் நம்பிக்கை வைத்த அந்தத் துணிவான ஆசிரியரின் செயலை வேறுயாரும் செய்ததை நான் கண்டதில்லை.

ஆசிரியர்கள் கற்ற கல்லூரிகள் வேறானவையாக இருந்தாலும், ஆசிரியகலாசாலைகளும், பல்கலைக்கழகங்களும், கல்வியற்கல்லூரிகளும் வேறானவைகள் அல்ல. ஆசிரியர்களும் அதிபர்களும் நினைத்தால் எல்லாப் பாடசாலைகளையும் தரமான பாடசாலைகளாக்க முடியும் என்பதை நான் செயல் மூலம் உணர்த்தியுள்ளேன்.

சிலர் தாம் பெரியவர்கள் என்று நினைப்பார்கள். அவர்களைச் சமூகம் பெரியவர்கள் என்று மதியாது. அதனால் இவர்கள் வலிமை குறைந்த அதிபர்களைப் புகழ்ந்து, உதவிகள் செய்து பாடசாலையின் பழையமாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் என்பவற்றில் முக்கிய பதவிகளைப் பெற்றுக்கொண்டு பாடசாலையை முன்னேற்றுகிறோம் என்று சொல்லிக் கெடுப்பார்கள். பாடசாலையோடு தொடர்பில்லாத எவரையும் பொறுப்பான பதவிகளில் அமர்த்துவதை அதிபர்கள் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

உறவு, செல்வாக்கு, கல்வி அறிவு, முயற்சியுடைமை போன்றவற்றைப் பயன்படுத்தி உயர்ந்த பதவிகளை அடைய முற்படக்கூடாது. வயது முதிர்ந்தவர்கள், அதிபர் தரம் உள்ளவர்கள், தம்மிலும் பார்க்கச் சேவை மூப்புள்ளவர்கள் இருக்கும் போது ஒரு கல்லூரியின் அதிபராகத் தரமில்லாதோர் வரமுயலக்கூடாது. அப்படி வந்தால் மூப்புடையவர்களும், தகுதியானவர்களும் எப்பொழுதும் தொல்லைகள் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். இதனால் பாடசாலையை நல்ல முறையில் கவனிக்க முடியாது.

அதிபரை யாரும் எவ்வேளையிலும் கண்டுபேசுதல் வேண்டும். குறிப்பிட்ட சில தேவைகளுக்காக வருவோருக்காக அதிபர் நேரம் ஒதுக்குதல் வேண்டும்.

எளிதில் காணமுடியாதவராகவும், இனிமையற்ற வார்த்தைகளைப் பேசுபவராகவும், கடுகடுப்பான முகத்தை உடையவராகவும் இருக்கும் அதிபரின் புகழ் இரும்பை அரத்தால் தேய்ப்பது போலப் படிப்படியாகக் குறைந்து தீராத பகையை உருவாக்கும்.

அதிபர் பாடசாலை நிர்வாகத்தில் தனக்குத் துணையாக உள்ளவர்களுடன் கலந்து ஆலோசிக்காது எக்கருமங்களையும் செய்தலாகாது. தினமும் தனது நிர்வாக சேவைகளையும், மேற்பார்வை வேலைகளையும், அதிபர் செய்தல் வேண்டும். அத்துடன் அவற்றைச் செய்யவென நியமித்தவர்களைக் கண்காணித்தல் வேண்டும். தினமும் தனது கடமைகளைச் செய்யாத அதிபர்கள் திணைக்களத்தின் மேற்பார்வையின் போது துன்பத்துக்குள்ளாவர். அதிகாரிகளால் வெறுக்கப்படுவார்.

அந்தந்தப் பாடசாலைகளுக்குப் பொருத்தமானபடி அதிபர்கள் நடந்து கொள்ளல் வேண்டும். பட்டணப் பாடசாலைகளின் நிர்வாகம் வேறு. கிராமப்புறப் பாடசாலைகளின் நிர்வாகம் வேறு. கிராமப்பாடசாலையில் இருந்து பட்டணப்பாடசாலைக்கும், பட்டணப்பாடசாலையில் இருந்து கிராமப் பாடசாலைக்கும் இடமாற்றம் பெறுவோர் அப்பாடசாலைக்கேற்ற வகையில் தம்மை மாற்ற வேண்டுமே தவிரத் தமக்கெற்ற வகையில் பாடசாலையை அமையவில்லை என்று மனங்கோணக்கூடாது.

கல்வி அறிவைப் பெறமுடியாத மாணவர்களுக்குக் கல்வியறிவை உண்டுபண்ணுபவர்கள் தான் சிறந்த கல்விமான்கள். கற்றவர்களின் பிள்ளைகளும், செல்வந்தர்களின் பிள்ளைகளும் பாடசாலையை நம்பியிருப்பதில்லை. அவர்கள் பாடசாலையைப் பெரிதாக மதிப்பதுமில்லை. அதிபர்களும்,

ஆசிரியர்களும் தான் இவர்களின் பெறுபேறுகளை உரிமை கொண்டாடுவர். பெற்றோரும் மாணவர்களும் பரிசுப் பொருட்களோடு தனியாரிடம் செல்வார்கள். இது பெறுபேறுகள் வந்த மறுநாள் தெரியவரும்.

அதிபர்களைப் பிரச்சினைக்குட்படுத்துவது பணம். பணத்தை அதிபர் தனது பொறுப்பில் வைத்திருக்காது விட்டால் பணத்தால் எந்தப் பிரச்சினையும் வராது.

ஆண் அதிபர்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருப்பது பெண்களுடனான உறவு.

எல்லாப் பெண்களும் நற்குணமுடையவர்களல்லர். மிகமிக நல்ல பெண்கள் இருக்கிறார்கள். அது போல மிகமிகத் தீய பெண்களும் இருக்கிறார்கள்.

வள்ளுவரைப் போல மனிதர்களது குணங்களை அளந்து கூறியவர் எவரும் இல்லை. அவர் மனிதர்களை எப்படி அளக்க வேண்டும் என்றும் கூறுகிறார். இவை பற்றி மீண்டும் நான் எழுத விரும்பவில்லை.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான் வானுலகில் வாழும் தெய்வங்களைப் போலப் போற்றப்படுவான்.

53. இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

நற்குணங்களையுடைய இல்லாள் வாழும் வீட்டில் இல்லாதவையென எதுவும் இருக்கமாட்டாது. நற்குணங்கள் அவளிடம் இல்லையாயின் அவ்வீட்டில் எதுவும் இராது.

60. மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலம் என்றும் பெரியோர் கூறுவர்.

912. பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கு ஏற்ப இனிய வார்த்தைகளைக் கூறுகின்ற பண்பற்ற விலை மகளால் வரும் இன்பத்தை ஆராய்ந்து பார்த்து அவளுடன் சேராமல் விட வேண்டும்.

913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டுஅறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று.

பொருளை மட்டும் விரும்பும் பொது மகளிரின் பொய்யான தழுவல், இருட்டறையில், தொடர்பில்லாத ஒரு பிணத்தைத் தழுவினாற் போன்றது.

918. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப
மாய மகளிர் முயக்கு.

வஞ்சம் நிறைந்த பொது மகளிரின் தன்மையை அறிந்து கொள்ளாதவர்கள், பொது மகளிர் தழுவித் தரும் இன்பத்தை மோகினி மயக்கம் என்று சொல்வர்.

1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர்.

மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய தூய பற்களில் ஊறிய நீர், பாலுடன் தேன் கலந்ததைப் போன்ற சுவையுடையது.

இவை பெண்ணைப் பற்றி வள்ளுவர் கூறிய சில கருத்துக்கள்.

பெண்களோடு பழகும் போது ஆண் அதிபர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். சிலர் காமமிகுதியால் நெருங்கிப் பழகுவார்கள். சிலர் தமது காரியங்களை நிறைவேற்றத் தம்மால் இயன்ற எல்லா வழிகளையும் மேற்கொள்வார்கள். அனேகமாக அதிபராக இருக்கும் ஆண்கள் திருமணமானவர்களாகவே இருப்பார்கள். அதனால் தம்மைத் திசைமாற்ற முயற்சிக்கும் பெண்களின் உறவைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

புராண இதிகாசங்களில் பெண்களால் மயங்கி ஏமாற்றப்பட்ட மஹா புரிஷர்களின் பட்டியல் விபரமாக உள்ளது.

காமம் எதையும் அறியாது. அதனால் பெண்களின் விஷயத்தில் எப்பொழுதும் ஆண்கள் கவனமாக இருத்தல் வேண்டும்.

ஒரு நல்ல அதிபர் முதலில் தனக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் உள்ள மாறுபாடுகளை முதலில் நீக்க வேண்டும். இதற்காக அதிபர் பாடசாலை மீது வெறுப்புக் கொண்டுள்ளவர்களையும், எதிர்ப்பவர்களையும் விருந்தினராக அழைத்துப் பாடசாலையின் முன்னேற்றத்தைக் காண்பித்தல் வேண்டும். இது எதிரிகளை வசப்படுத்தும் நடவடிக்கை. சிலர் தம்மைப் பாடசாலைச் சமூகம் மதிக்க வேண்டும் என்பதற்காகவும் செய்வர். இதிலும் திருப்திப் படாதவர்கள் சிலர் இருப்பார்கள். இவர்களைப் பின் மதிக்கவே கூடாது. மதிக்காது விட்டால் மதிப்புத் தேடும் பலர் அடங்கிவிடுவதும் உண்டு.

அதிபரது கை எப்பொழுதும் ஓங்கியிருத்தல் வேண்டும். இதற்காக அவர் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். அர்ப்பணிப்புடன் செயலாற்றும் அதிபரின் முன் எந்தக் கொம்பானாலும் வாலாட்ட முடியாது.

உயர் அதிகாரிகளும், கல்வித் திணைக்கள மேலதிகாரிகளும் தமது பிள்ளைகளைக் கற்பிக்கப் பாடசாலையை நாடவேண்டும். இதனால் சமூகம் ஆசிரியர்களையும், அதிபர்களையுமே தமது எசமான்களாகக் கருதல் வேண்டும்.

கடமையைச் சரிவரச் செய்யும் ஓர் ஊழியனுக்கு மேலதிகாரிகள் மதிப்புக் கொடுத்தே ஆகவேண்டும்.

ஆசிரியர்கள் தான் மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள். ஓர் உயர் அதிகாரியோடு முரண்பட்ட ஆசிரியர் ஒருவர் தன்னிடம் கற்ற அவரது மகனுக்குச் சாராயத்தை ஊற்றிக் கொடுத்தார். அம்மாணவன் பரீட்சை எழுதும்போது மதுஅருந்தியிருந்தான். இது மன்னிக்க முடியாத தவறு. ஆனால் ஆசிரியர் மேலதிகாரியைப் பழி வாங்குவதற்காக அதைச் செய்தார். எனவே மேலதிகாரிகள் மிகவும் கவனமாகவும், அவதானத்துடனும் அதிபர்களுடனும், ஆசிரியர்களுடனும் நடந்து கொள்ளல் வேண்டும்.

கல்வித்திணைக்களத்தில் மேலதிகாரியாகக் கடமை புரிவோர், தாம் உயர்ந்த தகமை உள்ளவர்கள் எனக்கருதுவோருக்கு அதிபர் பதவியை வழங்குகின்றனர். பெரும்பாலான மேலதிகாரிகள் தமக்குக் கீழ்ப் பணிபுரியும் அதிகாரிகளின் சொற்களைக் கேளாது அதிபர்களை நியமிப்பதால் தான் பாடசாலைகள் பலவும் சீரழிந்து போகின்றன. பல்வேறு துறைகளில் கல்வியை மேற்கொள்வோர் எல்லோரும் சிறந்த ஆசிரியர்களாகவோ, அதிபர்களாகவோ இருக்க மாட்டார்கள். பட்டப்படிப்பின் பின்பு பல படிப்புக்களைப் படித்த பலர் மாணவர்களின் குணநலங்களையும், பெற்றோரின்

இயல்பு களையும், ஆசிரியர்களது தன்மையையும், உணராதவர் களாகவே காணப்படுகிறார்கள்.

எந்தப் பதவிக்கும் உயர்கல்வி அத்தியவசியமானதல்ல. மனித நேயம், சூழ்நிலைக் கேற்றவாறு நடந்து கொள்ளும் தன்மை, ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகளது உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் தன்மை, மாணவர்களின் தேவைகளை உணர்ந்து நடந்து கொள்ளும் தன்மை போன்றன இருந்தால் போதும். பல துறைகளில் கல்வி கற்ற பலர் இவற்றைக் கொண்டிருப்பதில்லை.

சிறந்த அதிகாரியைப் பட்டங்கள் தீர்மானிப்பதில்லை. பகுத்தறிவே தீர்மானிக்கும் என்பதை உரியவர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

சேவை செய்வோர் தம்மால் முடிந்தளவு சேவைகளைச் செய்துவிட்டு அதை விளம்பரப்படுத்தாது இருப்பார்கள். புகழை விரும்புவோர் ஒரு ரியூப் லைற்றைக் கோயிலுக்குக் கொடுப்பதால் கூட அவ்ரியூப் லைற்றில் தனது பெயரை எழுதுவார்கள்; அதைப் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்துவார்கள்.

கொடையில் சிறந்தவர்கள், கடமையைச் சரிவரச் செய்பவர்கள், சிறந்த எழுத்தாளர்கள் இவர்கள் விளம்பரத்தைத் தேட மாட்டார்கள். தாம் செய்யும் தர்மங்களை விளம்பரப்படுத்துவது பாவம் என்று நினைப்பார்கள். இவர்களது ஆக்கங்கள் காலங்கடந்து நின்று இவர்களது புகழைப் பரப்பும். திருக்குறளை, அது எழுந்தகாலத்தில் பெரும்புலவர்கள் எவரும் ஏற்கவில்லை. ஆனால் 2000 வருடங்கள் கழிந்தும் திருக்குறள் போற்றப்படுகிறது. பல்வேறு உலக மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருக்குறளை அதன்

கருத்துக்கள் பிழையானவை என்று வாதிட்ட அறிஞர்களின் ஆக்கங்கள் எவையும் இன்று நிலைக்கவில்லை. காலம் தான் எதையும் தீர்மானிப்பது. மனிதர்கள் எதையும் தீர்மானிப்ப தில்லை. எனவே எவரது குற்றச்சாட்டுக்களையும் பொருட் படுத்தாது தமது கடமைகளைச் செய்வோரையே உலகம் போற்றும் என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளல் வேண்டும்.

செயலைச் செய்பவன் பெரியவனாக இருந்தால் அவனிடம் சலுகை பெறச் சமூகம் அவன் செய்வதெல்லா வற்றையும் அரிய சாதனைகள் என்று சொல்லும். ஆனால் அது நிலைத்து நின்று பாராட்டைப் பெற்றால் தான் அதன் பெறுமதி தெரியும். செல்வாக்கு, பணம், அதிகாரம் என்பவற்றால் சிறப்புப் பெற்ற எவரும் பிற்காலத்தில் அறிவாளிகளால் மதிக்கப் படவில்லை. அவர்கள் சமைத்த உப்பில்லாப் பண்டங்களும் அவர்களது அதிகாரம் உள்ள காலத்தில் அமிழ்தாகப் போற்றப்பட்டுப் பின் அவை குப்பைகளென நிராகரிக்கப்பட்டன. இதை வரலாறு கூறுகிறது.

பழந்தமிழ் நூல்களைப் பாருங்கள். முரட்டுச் சுபாவமுடைய பல அரசர்கள் பல அறிஞர்களுடன் முரண்பட்டுள்ளனர். அவர்கள் சொல்வதை அறிஞர்கள் ஏற்கவில்லை. சாதாரண மனிதர்களும் அரைகுறைப் படிப்பாளிகளும் அரசனின் நன்மதிப்பைப் பெறவும், சலுகைகளைப் பெறவும் அவர்கள் சொல்வதை, எழுதியதை ஏற்றுப் போற்றினர். ஆனால் அவர்களின் அதிகாரம் அழிந்த பின் அவையும் அழிந்தன.

1973இல் நான் ஆசிரியராக இணைந்துகொண்டேன். 2009ம் ஆண்டு ஓய்வு பெறுகிறேன். இந்தக்கால

இடைவெளியில் நான் கலந்து கொண்ட கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள், கலந்துரையாடல்கள் எண்ணில் அடங்காதவை. என்னுடன் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும், அதிபர்களும் இதில் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்குகள், பயற்சி வகுப்புக்கள், கலந்துரையாடல்கள் ஆசிரியருக்கும், அதிபர்களுக்கும் பயனளித்திருந்தால் யாழ் மாவட்டத்தில் கல்வியறிவு மேம்பட்டிருக்கும். எந்த ஒரு மாணவனும் பொதுப் பரீட்சைகளில் சித்தியடையாதிருக்க மாட்டான்.

நான் எனது சேவைக் காலத்தை இரைமீட்டுப் பார்த்தேன். அர்ப்பணிப்புடன் ஆசிரியர்களும், அதிபர்களும் கடமையாற்றும் பாடசாலைகளைத் தவிர்ந்த வேறு எந்தப் பாடசாலையும் முன்னேற்றமடையவில்லை.

ஆசிரியகலாசாலைப் பயிற்சி, பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்புக்கள், வேறு உயர் பட்டப்படிப்புக்கள் பல கற்ற ஆசிரியர்களுக்கு அவை எந்த விதத்திலும் உதவவில்லை.

‘‘மேலதிகாரிகள் தாம் விரும்பியவர்களுக்கும், செல்வாக்கு உள்ளவர்களுக்குமே பதவிகள் வழங்குகிறார்கள். அதனால் அவர்களுக்குக் கீழ் என்னால் வேலை செய்ய முடியாது. எமது பாடசாலை அதிபர் அர்ப்பணிப்புடன் கடமை செய்பவர். கல்விப்பணிப்பாளர், தனக்குப் பிடிக்காததால் அவரை இடமாற்றம் செய்துவிட்டுத் தனக்குத் தேவையான ஒருவருக்கு அதிபர் பதவி வழங்கியுள்ளார். இப்போ எமது பாடசாலை நாசமாகிவிட்டது. இனி இதை நிமிர்த்த முடியாது. புதிய அதிபர் கடமைகளைச் செய்யாது வருமானம் வரும் வழிகளைத் தான் அபிவிருத்தி செய்கிறார். இவரைப் போன்றவர்களுடன் வேலை செய்ய முடியாது’’ என்றார் ஒரு சிறந்த ஆசிரியர்.

இன்னொரு ஆசிரியர் சொன்னார்; ‘‘எமது அதிபர் ஆசிரியர்களை மதிப்பதேயில்லை. அவருக்குக் கல்வித் திணைக்களத்தில் செல்வாக்கு அதிகம். அவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளருடன் நல்ல முறையில் நடந்து கொள்வார். அவரின் வீட்டில் நடைபெறும் வைபவங்களுக்கு ஆசிரியர்களை வற்புறுத்தி அழைத்துச் சென்று பரிசுகள் கொடுப்பார். ஆனால் பத்து வருடங்கள் கற்பித்து ஓய்வு பெற்ற ஆசிரியருக்குப் பாராட்டு விழா நடத்தவில்லை. கேட்டால் சிரிப்பார். ‘‘இப்ப என்ன அவசரம்’’ என்பார். அவர் ஓய்வு பெற்று இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன’’.

இன்னொரு ஆசிரியர் சொன்னாா; ‘‘எமது அதிபர் இரும்புக்கடையில் கொப்பிகள், பென்சில்கள் வாங்கியவர். அகப்பட்டும் திருந்தவில்லை’’

இப்படி ஆயிரக்கணக்கான புகார்கள் உண்டு. இவை யாவும் ஆசிரியர்களாலும், மக்களாலும் பேசப்பட்ட போதும் சம்பந்தப்பட்டவர்கள் திருந்துவதாக இல்லை.

இப்படிப் பலர் கூறுவதை நான் கேட்டுள்ளேன்.

கல்வியும் கருத்தரங்குகளும் உயர் பட்டப்படிப்புக்களும் கற்றலில் எந்த மாற்றத்தையும் உண்டாக்க மாட்டாது. அர்ப்பணிப்பும், சேவை மனப்பாங்கும் தான் கல்வியில் மறுமலர்ச்சியை உண்டுபண்ணும். நல்ல ஆசிரியர் புதியபுதிய நூல்களைக் கற்பர். கற்றவற்றை வகுப்பறையில் பரீட்சித்துப் பார்ப்பார். எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் தமது அறிவை வாசித்தும், கற்றவர்களோடு சேர்ந்திருந்தும் பெற்றுக்கொள்வர். புதியவற்றை அறிந்து கொள்ளப் பல்கலைக் கழகங்களுக்குச் செல்லத் தேவையில்லை. நல்ல நூலகங்களுக்குச் சென்றால்

போதும். வேறு ஒரு நாட்டின் பல்கலைக்கழகங்கள் நடத்தும் பரீட்சைகளைத் தம் நாட்டிலிருந்தே கற்று எழுதிச் சித்தியடைய முடியும்.

“மனநலம் என்பது மகிழ்வுடன் இருந்து மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவது” இதை ஒவ்வொரு அதிகாரியும் செய்தல் வேண்டும். பக்கச்சார்பில்லாது, பற்றில்லாது, நடுநிலை நின்று அதிகாரிகள் கடமை புரிந்தால் மட்டும் கல்வி மேம்படுமே தவிரக் கருத்தரங்குகளால் கல்வி மேம்பட்டதாகச் சரித்திரம் இல்லை.

தன்னில் நம்பிக்கை இல்லாதவர்கள்; பொதுச் சொத்தைக் கவரவேண்டுமென்ற எண்ணமுள்ளவர்கள்; சந்தேகப்படுபவர்கள்; தனக்குக் கீழ் வேலை செய்வோரை மதிக்காதவர்கள்; தன்னைத் தவிர வேறு எவருக்கும் எதுவும் தெரியாது என நினைப்பவர்கள்; தாழ்வு மனப்பான்மை உடையவர்கள்; முன்கோபம் உடையவர்கள்; ஆராயாது கதைப்போர்; ஆணவம் உடையவர்கள், சாதிபேதம் பார்ப்பவர்கள் ஒரு போதும் நிர்வாகத்தில் வெற்றியடைய மாட்டார்கள்; மகிழ்வுடனும் வாழமாட்டார்கள். அவர்கள் தாம் தாம் சிறந்த நிர்வாகியென நினைத்து ஏமாறுவார்கள். இவர்கள் நல்லவற்றைச் செய்தாலும் இவர்களது செயல்களைப் பெரும்பான்மையானவர்கள் ஏற்கமாட்டார்கள். புகழுக்குப் பதிலாக இகழ்ச்சியே கிடைக்கும். இவர்களும், இவர்களோடு சம்பந்தப்பட்டவர்களும் தான் தமது தேவைகளுக்காக இவர்களை மதிப்பது போல நடிப்பார்கள். இவர்களும் இவர்களைச் சார்ந்தவர்களும் கனவிலும், கற்பனையிலும் தான் பெரியவர்களாக வாழ்வார்கள்.

எனது சேவைக்காலத்தில் உண்டான அனுபவங்களையே எழுதியுள்ளேன். ஆசிரியராக, அதிபராக, அதிகாரியாகக் கடமையாற்றியமையால் சகல அனுபவங்களையும் என்னால் பெறமுடிந்தது. ஓர் எழுத்தாளனாக இருந்து பல்துறை சம்பந்தமான நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியமையால் எனது அனுபவங்களை எழுதும் தன்மையையும் இறைவன் தந்துள்ளான். இவை எனது அனுபவங்களால் எற்பட்டவை. இவற்றைக் கல்வியாளன் என்ற முறையில் ஆராய்ச்சி செய்தேன். எழுத்தாளன் என்பதால் அதைப் பதிவு செய்துள்ளேன். இவை எதிர்காலச் சந்ததியினருக்கு உதவும் என நினைக்கின்றேன்.

இவை எனது அனுபவங்கள் மட்டும் தான். பொருத்தமாக இருந்தால் கைக்கொள்ளலாம். இல்லாவிட்டால் ஒரு நூலை வாசித்த பின் மறப்பதைப் போல மறந்து விடலாம்.

இவை கற்பனை அல்ல. எனினும் யாரையும் குறிப்பிடுவனவும் அல்ல.

எனது சேவைக்காலத்தில் உதவி புரிந்தவர்களுக்கும், எனது மணிவிழாவுக்கு வருகை தந்து என்னை மகிழ்ச்சிக் குள்ளாக்கியவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

மதிப்பு வாய்ந்த பெரியவர்கள் எவரிடமும் நான் அணிந்துரைகள் பெறுவதில்லை. உலகில் எந்தப் பாகத்தில் இருக்கும் தமிழனுக்கும் எனது நூல்கள் கிடைக்கும். விரும்பினால் யாரும் எனது நூல்களை விமர்ச்சிக்கலாம். எந்த விமர்சனத்தையும் நான் மகிழ்வுடன் ஏற்பேன்.

நன்றி.

"இன்பத்தை அள்ளித் தரும் இந்து மதம்" என்ற இவ் ஆசிரியரின் நூல் இந்து தத்துவம் முழுவதையும் இந்து தத்துவத்தைக் கூறும் பெரும்பான்மையான நூல்களில் இருந்து பெற்று தற்காலச் சமூகத்திற்கு ஏற்றவாறு தரப்பட்டது போல இந்நூல் கல்விப்புலம் சார்ந்த அனைத்து விடயங்களையும் கூறும் அரியநூல்.
கண்ணப்பரைப் போல கல்வியின் ஒவ்வொரு பகுதியையும் ஆசிரியர் நன்கு சுவைத்து அனுபவித்துத் தந்துள்ளார். அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல் இது.

S.வரதராஜன்



மணிவிழா வெளியீடு

D SIGNARTS
274, Pointpedro Road, Aanaippanthi Junction, Jaffna.